# பாண்டி நாட்டுக் கோயில்கள்

வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார் B.O.L.

ஸ்டார் பிரசுரம்
66, பெரிய தெரு
திருவல்லிக்கேணி - சென்னை-5

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

முதற்பதிப்பு: டிசம்பர் 1957
இரண்டாம் பதிப்பு: மார்ச் 1961
உரிமை பதிவு

விலை ரூ. 1-25

**STAR PUBLICATIONS**
66, BIG STREET,
TRIPLICANE, : : MADRAS-5.

மெட்ரோபாலிட்டன் பிரிண்டர்ஸ், சென்னை-2.

# பதிப்புரை

தென் பாண்டி நாடு, சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கிய பிரதேசம். சமயாச் சாரியார்கள் ஊரூராகச் சென்று தமிழையும் சைவத்தையும் பரப்பிப் பண்பை வளர்த்த பகுதி.

சமய குரவர்கள் நால்வராலும் பாடப் பெற்ற பாண்டித் தலங்கள் பதினான்கினைப் பற்றிய வரலாறும், அவ்வத் தலங்களில் பாடப் பெற்ற பதிகங்களும், அத் தலங்க ளுக்குச் செல்வதற்குரிய மார்க்கம் முதலி யனவும் இந்நூலில் விரிவாகக் கூறப்பெற் றுள்ளன.

தலயாத்திரை செய்ய விரும்புவோருக் கும், தல வரலாற்றினை அறிந்து கொள்ள விரும்புவோர்க்கும் மிகுதும் பயன் படும்.

தமிழ் மக்கள் இதனை விரும்பி வரவேற் பார்களென நம்புகிறோம்.

ஸ்டார் பிரசுரம்

# பாண்டி நாட்டுக் கோவில்கள்

தமிழ் நாடு பலவகைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. அப்படிப் பகுக்கப்பட்ட வகைகளுள் பாண்டிய நாடு என்பதும் ஒன்று. இப்பாண்டிய நாட்டில் இறைவன் உறைவிடங்களாக உள்ள கோவில்கள் பலவாக இருந்தாலும், அவற்றுள் நால்வர்களால் பாடப்பட்ட பெருமை சான்ற தலங்கள் பதினான்காகும். அவையே மதுரை (இது திருவாலவாய் என்றும் கூறப்படும்.) திருவாப்பனூர், திருப்பரங்குன்றம், திருவேடகம், திருக்கொடுங்குன்றம், திருப்புத்தூர், திருப்புனவாயில், திருவிராமேச்சுரம், திருவாடானை, திருக்கானப்பேர், (இதனைக் காளையார் கோவில் என்பர்) திருப்பூவனம், திருச்சுழியல், திருக்குற்றாலம், திருநெல்வேலி என்பன.

மதுரை (திருவாலவாய்) குலசேகரபாண்டியன் இதனைத் திருநகரமாகக் கண்டனன். அதன் பின் சிவபெருமான் தன் சடையில் உள்ள பிறையிலிருந்து சிறிது மதுவை (தேனை) தெளித்தார். அதனால் இது மதுரை என்ற பெயரைப்பெற்றது. வருணன் ஒரு முறை மதுரையை அழிக்க எண்ணம் கொண்டான். அதற்காக ஏழுமேகங்களையும் அனுப்பி அடா மழை பெய்யக் கட்டளை இட்டான். அது போது சோமசுந்தரப்பெருமான் மதுரையின் நான்கு எல்லைகளுக்கும் நான்கு மேகங்களை ஏவ, அவை கூடமாகக்கவிந்து மதுரை அழியாதபடி காப்பாற்றின. அதனால் நான்மாடக் கூடல் என்ற பெயரைப் பெற்றது. மதுரையின் எல்லை எது வரையுள்ளது என்பதைப் பாண்டியன் அறிய சிவபெருமான் தம் உடம்பில் உள்ள பாம்பின் மூலம் செய்ததால்,

மதுரை திருவாலவாய் என்ற பெயரைப்பெற்றது. இத் தலத்து விருட்சம் கடம்பமரம் ஆதலின், கடம்பவனம் என்னும் பெயரை யுடையது. சிவபெருமான் மீனாட்சி யம்மையாருடன் இருந்து அன்பர்கட்குக் காட்சி கொடுப் பதனால் பூலோககயிலாயம், சிவராஜதானி என்ற திருப்பெயர் களையும் பெற்றது. தமிழ்ச் சங்கம் இருந்த இடம் இதுவே. இத்தலத்தில்தான் சிவபெருமான் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைச் செய்தார். மூர்த்திநாயனார் பிறந்து பின்பு விபூதி, உருத்திராட்சம், சடை முடிகளைக் கொண்டு அரசாட்சி செய்த இடம்.

நெடுமாறநாயனார், இவரது மனைவியார் மங்கையர்க்கரசி யார், மந்திரி குலச்சிறைநாயனார் வாழ்ந்த இடம். விநாயகர், முருகன், இந்திரன், வருணன், இராமலட்சுமணர் பூசித்துத் தாம் தாம் விரும்பியதைப் பெற்ற தலம். இத்துணைப் பெருமை வாய்ந்த இத்தலம் மதுரை மீனாட்சி கோவில் என்ற பெயரால் சிறப்புற்று விளங்குகிறது. தருமபுர ஆதீன முதற்பெருங் குருமூர்த்தியாகிய குருஞானசம்பந்த சுவாமிகள் சொக்கலிங்கப் பெருமானைப் பெற்ற கோயில். இக்கோயில் மூன்று பிராகாரங்களையுடையது. ஒன்பது கோபுரங்களைக் கொண்டது. இங்கு ஆயிரக்கால் மண்டபம் அரியநாத முதலியாரால் கட்டப்பட்டது. அவரது உருவம் இம் மண்டபத்தின் முன்பாகம் உள்ள ஒரு தூணில் செதுக் கப்பட்டுள்ளது. மற்றொரு தூணில் உள்ள யாளியின் வாயில் குண்டு சுழன்று கொண்டிருக்கிறது. கோயிலுக்குக் கிழக்கில் வெளியில் வசந்த மண்டபம் உள்ளது. இது புதுமண்டபம் என்றும் கூறப்படும். இங்கு நாயக்க மன்னர் களின் உருவச் சிலைகளைக் காணலாம். மற்றும் பல உருவங் களையும் காணலாம்.

மதுரைக் கோயிலின் மதிலுக்குத் தனிப் பெருமை யுண்டு. அதனால்தான் "மதுரை மதில் அழகு" என்னும்

பழமொழியும் வழங்குவதாயிற்று. வெளிப் பிராகாரத்தில் உள்ள ஒரு பெரிய கல் தூணில் பல சிறிய தூண்கள் அடங்கியிருக்கின்றன. இத்தூணைத் தட்டினால் ஏழ் இசை ஒலிகள் கேட்கும்.

## கோயிலுக்குள் பார்க்கக் கூடியவை :

மீனாட்சியம்மன் சந்நிதிக்கு வடக்கே உள்ள ஒரு பழைய கோயில் நந்தீஸ்வரர் கோயில். இது சுவாமி சந்நிதியில் திருவாயிலின் பக்கத்தில் வடக்கு முகமாக இருக்கிறது.

பொற்றாமரைக்குளம் கோயிலுக்குள் உள்ளது. இக் குளத்தைச் சுற்றியுள்ள மண்டபங்களில் இத் தலத்தில் சோமசுந்தரப்பெருமான் நடத்திய அறுபத்துநான்கு திரு விளையாடல்கள் சித்திரத்தில் எழுதப்பட்டிருப்பதைக் காணலாம். இக்குளத்தில் பொற்றாமரை இல்லை என்றா லும், இப்போது, காசிமடத்துத் தலைவராம் திருப்பனந் தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் செய்தமைத்த பொற்றாமரை ஒன்று மிதந்து கொண்டிருப்பதைக் கண்கூடாகக் காணலாம்.

அர்த்த மண்டபம், மகா மண்டபம், மணி மண்டபம், அறுகால்பீடம் முதலியவற்றைக் காணலாம். இவைகளே அன்றி அஷ்டசித்தி மண்டபம், மீனாட்சி நாயக்கர் மண்ட பம், கல்யாண மண்டபம், வீரவசும்புரான மண்டபம், ஆடிவீதி, நிறுதி வீதி மண்டபம், சம்பந்தர் மண்டபம், அறுபத்துமூவர் மண்டபம் முதலியனவும் உண்டு.

இந்த ஆலயத்துள் ஐந்து சபைகளையும் காணலாம். அவையே கனகசபை, ரசிதசபை, இரத்தினசபை, தாம்ர சபை, இந்திரசபை. ரசிதசபையாகிய வெள்ளியம்பலத்தில் உள்ள நடராஜர் மற்றைய நடராஜ உருவங்களைப்போல் இடக்காலைத் தூக்கி நடனம் பண்ணாமல் வலக்காலைத் தூக்கி நடனம் புரியும் பாவனையில் காட்சியளிக்கிறார். இது

ஒரு பாண்டியன் பொருட்டுக் கால்மாறி ஆடிய குறிப்பினைக் காட்டுவதாகும். கிளிக்கூண்டு மண்டபம்: இதில் பஞ்சவர்ணக் கிளிகள் வைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள கருங்கல் தூண்களில் பஞ்சபாண்டவர் உருவங்களைக் காணலாம்.

முக்குறுணி விநாயகர்: இவர் மிகப். பெரிய உருவுடன் திகழ்கிறார். இவருக்கு ஒவ்வோர் ஆண்டும், விநாயகர் சதுர்த்தியன்று முக்குறுணி அளவு அரிசியினால் ஒரேகொழுக் கட்டை செய்து நிவேதனம் செய்யப்படுகிறது. பதினாறு கால் மண்டபத்தில் உள்ள வீரபத்ரமூர்த்தி, காளி, பத்திர காளி உருவங்கள் பார்க்கத்தக்கவை. சுவாமி சந்நிதியின் வாயிலில் எத்தலத்திலும் காணப்படாத காயத்ரி, சாவித்திரி மந்திரங்களின் சிலைகள் உள்ளன.

எல்லாம் வல்ல சித்தர் கோயில், சங்கப் புலவர்களை வைத்திருக்கும் மண்டபம், சாட்சி சொன்ன வன்னிமரம், கிணறு, லிங்கம் முதலியனவும் பார்க்கவேண்டியவைகள். மீனாட்சியம்மன் கோயிலுக்குக் கீழ்க்கோபுரத்தருகே யுள்ள மதுரைவீரன் கோயிலையும் பார்த்தல் வேண்டும்.

மதுரைத் தலத்து இறைவர் சொக்கலிங்கமூர்த்தி, சோமசுந்தரர், அடியார்க்கு நல்லான் முதலிய பெயர்களால் குறிப்பிடப்படுவார். மதிஅழகர் என்னும் தமிழ்ப் பெயரே சோமசுந்தரர் என்று மொழி பெயர்க்கப்பட்டது.

இறைவியார் திருப்பெயர்கள்: அபிஷேகவல்லி, தமிழ் அறியும் பெருமாட்டி, அங்கயற்கண்ணி என்பன. அங்கயற் கண்ணி என்பதே மீனாட்சி என்று மொழி பெயர்க்கப் பட்டது. தேவாரத்தில் அங்கயற்கண்ணி என்றே உள்ளது. விநாயகர், சித்திவிநாயகர், தலவிநாயகர். இத்தலத்துக்கு உரிய தலவிருட்சம் கடம்பு; தீர்த்தம், பொற்றாமரைக்குளம்; எழுகடல், வைகை,வைகையாறு. மதுரையை அழகு செய்யும் இடங்களில் வைகையாறும் ஒன்று. இத்

தலத்திற்குரிய தேவாரப் பதிகங்கள் பதினொன்று; திருவாசகப் பாடல்களும் உண்டு.

திருஞானசம்பந்தர் இத் தலத்தைப் பாடிய பதிகம் முதல் திருமுறையில் ஒன்று. இரண்டாம் திருமுறையில் மூன்று, மூன்ரும் திருமுறையில் ஆறு. திருநாவுக்கரசர் இத் தலத்தைப் பற்றிப் பாடிய பதிகம் ஆரும் திருமுறையில் ஒன்று. சுந்தரர் இத்தலத்தைப் பற்றிய பாடிய பாடல் அகப்பட்டிலது.

மதுரைமா நகரில் பார்க்கவேண்டிய இடங்கள்: திருமலைநாயக்கன் மகால், மாரியம்மன் தெப்பக்குளம், இக்குளத்திற்கு எதிரே உள்ள கருமுத்து, தியாகராய செட்டியார் பார்வையில் நடைபெறும் கலைக்கல்லூரி, ஸ்டேஷன் எதிரில் உள்ள மங்கம்மாள் சத்திரம், கூடல் அழகர் பெருமாள் கோயில் முதலியன. போக்கு வரவுக்கு வேண்டிய வண்டி வசதிகள் பலவுண்டு.

மதுரையம்பதியில் நடைபெறும் திருவிழாக்கள் பலவாயினும் அவற்றுள் கண்டுகளிக்க வேண்டிய திருவிழாக்கள் சில உண்டு. அவையே சித்திரை மாதம் நடைபெறும் சைத்ரோற்சவம். இதில் மீனாட்சியம்மன் திருக்கல்யாணம் விசேடமானது. தைமாதம் நடைபெறும் தெப்போற்சவம். இது மாரியம்மன் தெப்பக்குளம் என்னும் வண்டியூர்த் தெப்பக்குளத்தில் நடைபெறும். ஆவணி மாதம் நடைபெறும் ஆவணி மூல உற்சவம். இதில் பிட்டுக்கு மண்சுமந்த உற்சவம் சிறப்புடையது. மார்கழி மாதம் நடைபெறும் படி அளக்கும் உற்சவமும் சிறப்புடையது.

மதுரையம்பதி ஆலயம் மதுரை ஸ்டேஷனுக்குக் கிழக்கே கல்சாலையில் முக்கால் மைலில் உள்ளது. மதுரையிலிருந்து பஸ் மூலம், கல்லழகர் கோவிலையும் சென்று தரிசிக்கலாம். இது வைஷ்ணவ தலமாயிப்போது இருந்தாலும்,

முருகன் தலமும் ஆகும். பழமுதிர்சோலை என்றும் இது கூறப்படும்.

மதுரையிலிருந்து பஸ்மூலம் மாணிக்கவாசகர் பிறந்த திருத்தலமாகிய திருவாதவூரையும் கண்டு தரிசிக்கலாம். அங்கு வாதபுரீஸ்வரர் கோவிலும், வாதவூரார் கோவிலும் உண்டு. ஏரிக்கரையில் புருஷ மிருக சிலையையும் காணலாம்

## தேவாரம்

### முதல் திருமுறை 94-வது பதிகம்

பண் குறிஞ்சி

**1. நீல மாமிடற் றால வாயினன்**
**பால தாயினர் ஞாலம் ஆள்வரே**

(அ. சொ.) மாமிடறு-பெரிய கழுத்து. ஆலவாயினன்-திருவாலவாயாகிய மதுரையில் உள்ள சோமசுந்தரப் பெருமான், பாலதாயினர்-இறைவன் பக்கம் சேர்ந்தவர், ஞாலம்-உலகு.

**2. அடிகள் ஆலவாய்ப் படிகொள் சம்பந்தர்**
**முடிவில் இன்தமிழ் செடிகள் நீக்குமே.**

(அ. சொ.) அடிகள்-இறைவன், படி-நல்ல முறைமை செடிகள்-நாம் செய்த வினைகளை.

இப் பதிகம் பதினொரு பாடல்களை உடையது. இதன் மூலம் திருஞானசம்பந்தர் நமக்குப் பல உபதேசங்களையும், உறுதிமொழிகளையும் கூறி அருளுகிறார்.

மக்களே! நீங்கள் இயமவாதனை அழிய வேண்டுமானால் மதுரைச் சொக்கேசனது குணவிசேடங்களையே சொல் லுங்கள், அவனது திருவடிகளைச் சிந்தனை செய்யுங்கள் அவனை வாயாரப்பாடி, மனமாரத் தேடி வாழுங்கள் என்பனவற்றை,

**சீலமே சொலீர் காலன் வீடவே**
**பந்தியார் கழல் சிந்தை செய்ம்மினே**
**பாடியே மனம் நாடி வாழ்மினே**

என்ற தொடர்களால் கூறியருளினர். இவை உபதேச மொழிகள். "யார் மதுரைப் பெருமானார் பக்கம் சார்கின்றன ரோ, அவர்கள் உலகையாளும் அரசப் பதவி பெறுவர். மனத்தில் எண்ணித் தொழுதால் இன்பம் பெறுவது உறுதி. இறைவன் கழலிணைகளை நம்பி வாழ்பவர்களுடைய துன்பம் அழியும். சுந்தரேசப்பெருமான் புகழ்களைக் கூறும் மன முடையவர்கள் இரக்கமான மனத்தினைப் பெறுவர். இஃது உண்மை" என்பன உறுதிமொழிகள். இவற்றை "ஆலவாயி லான் பாலதாயினார் ஞாலம் ஆள்வர்" "எண்ணியே தொழத் திண்ணம் இன்பமே" "கழல் நம்பி வாழ்பவர் துன்பம் வீடுமே" "உரைக்கும் உள்ளத்தார்க்கு இரக்கம் உண் மையே" என்ற திருவாக்குகளால் காணலாம்.

இப் பதிகத்தின் ஈற்றுச் செய்யுள் இப்பதிகத் தினைப் படிப்பதால் அடையும் பயன் கூறுகிறது. படிப் பதால் இப் பிறப்பில் ஏற்படும் துன்பங்கள் ஒழியும் என் பதே பயன். இங்ஙனம் கூறும்போது திருஞானசம்பந்தர் தம் திருப்பதிகத்தின் முடிவில் இதைத் 'தமிழ்ப்பதிகம் என்று கூறியிருத்தல் நோக்குதற்குரியது! இங்ஙனம் கூறும் முகமாக, 'ஏனைய மொழிகள் போல் தமிழ் மொழி அழியும் தன்மைத் தன்று'; அழியாத கன்னித் தமிழ்; இனிமை தரும் தமிழ் என்று தம் உள்ளக் கிடக்கையினை உணர்த்தியதை உன்னி உன்னிக் களிப்போமாக.

## இரண்டாம் திருமுறை 66-வது பதிகம்
## திருநீற்றுப் பதிகம்

பண் காந்தாரம்

**1. மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு**
**சுந்தரம் ஆவது நீறு துதிக்கப் படுவது நீறு**

தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாய்உமை பங்கன்திரு வாலவா யான் திரு நீறே

(அ. சொ.) நீறு-விபூதி, வானவர்—தேவர், சுந்தரம்-அழகு, தந்திரம்-சிவாகமம், சமயத்தில்-ஆபத்தான காலத்தில் சைவசமயமே அன்றி எல்லாச் சமயங்களிலும், செந்துவர்—செம்மையான பவழம், பங்கன்-தன் உடம்பின் பாதில் உமையை வைத்திருப்பவர்.

2. முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்தியம் ஆவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருவாலவா யான்திரு நீறே.

(அ. சொ.) முத்தி-மோட்சம், தக்கோர்-பெரியோர்கள். பரவ-வாழ்த்த, சித்தி-நினைத்தவற்றை.

3. ஆற்றல் அடல்விடை ஏறும் ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்னன் உடல்உற்ற தீப்பிணி ஆயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

(அ. சொ.) ஆற்றல் - வல்லமை, அடல் - கொலை, விடை - எருது, போற்றி - துதித்து, புகலி - சீர்காழி, பூசுரன் - மண்ணுலகத்தேவன், (அந்தணன்) தென்னன் - பாண்டியன், தீப்பிணி - சுரநோய், சாற்றிய - கூறிய. திருஞானசம்பந்தர் மதுரையில் திருமடத்தில் தம் பரிவாரங்களுடன் தங்கி இருந்தார் இதனை அறிந்த சமணர் இவரைக் கொன்றுவிட மடத்திற்குத் தீ வைத்தனர். இதனை அறிந்த திருஞானசம்பந்தர் அத் தீ பாண்டிய மன்னனைப் பற்றுமாறு பதிகம் பாடினர். அவ்வாறே அது பாண்டியனைப் பற்ற அதனால் துன்புற்ற பாண்டியன் திருஞானசம்பந்தரை வரவழைத்து அந்த நோயைத் தீர்க்க வேண்டினன். அதுபோது திருஞானசம்பந்தர் திருநீற்றைத் தடவி நோயைப் போக்கினர். அவ்வமயம் பாடப்பட்ட

பதிகமே இது. இப்பதிகம் சுரநோய் போக்கவே பாடப் பட்டது என்பது இப்பதிகத்தின் இறுதிப் பாடலால் நன்கு தெரிகிறது. அதாவது, "தென்னன் உடல் உற்ற தீப்பிணி ஆயினதீரச் சாற்றிய பாடல்கள்" என்பது. ஆகவே இது ஆளுடைய பிள்ளையார் சரித்திரத்திற்கு அரண் செய்யும் அகச்சான்றுப் பதிகங்களுள் ஒன்றாகும்.

இத்திருநீற்றுப் பதிகத்தால் திருநீற்று மேன்மைகள் பல தெரிகின்றன. இத் திருநீறு மந்திரமாகவும் தந்திர மாகவும், உள்ளது என்பதும் தேவர்களும், முனிவர்களும், புண்ணியர்களும், இராவணனும், பூசிப் பொலிவுறுகின்ற னர் என்பதும், எல்லாச் சமயங்களிலும், வேதத்திலும், திருநீற்றுச் சிறப்பே பேசப்படுகிறது என்பதும் நன்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளன. சிறப்பாகச் சைவசமயத் திற்கே இத்திருநீறு உரிமைப் பொருளாயினும், இதன் சிறப்புணர்ந்த பிறநாட்டவரும் சமயத்தவரும், இதனைப் போற்றுகின்றனர் என்பதைத் திருஞானசம்பந்தர் "சமயத் தில் உள்ளது நீறு" என்றும் "தக்கோர் புகழ்வதுநீறு" என்றும் தேசம் புகழ்வது நீறு என்றும் "புண்ணியர் பூசும் வெண்ணீறு" "எண் திசைப்பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு" என்றும் சுட்டிக்காட்டினர். இஃது உண் மைக்கருத்துக்கள் என்பதை நம்மாழ்வார் திருவாய் மலர்ந்த திருவாய் மொழிகளாகிய,

கரிய மேனிமிசை வெளிய நீறுசிறிதே இடும்
பெரிய கோலத்தடங் கண்ணன் விண்ணோர் பெருமான் தன்னை
உரிய சொல்லால் இசைமாலைகள் ஏத்திஉள்ளப் பெற்றேற்கு
அரிய துண்டோ எனக்கு இன்றுதொட்டும் இனி என்றுமே

இவளைப் பெறும்பரிசு இவ்வணங்காகுதல் அன்று அந்தோ
குவளைத்தடம் எண்ணும் கோவைச் செவ்வாயும் பயந்தனள்
வெளக்களிறு அட்டபிரான் திருநாமத்தால்
தவளப்பொடி கொண்டு நீர் இட்டிடுமின் தணியுமே.

இவற்றைக் கொண்டும் நிறுவிக் காட்டலாம்.

இத் திருநீற்றுப் பதிகத்தால் திருநீற்றுச் சிறப்பினைத் தொகுத்துக்கூறினால், மந்திரமாவதும், வானவர் திருமேனியில் உள்ளதும், அழகாவதும், போற்றப்படுவதும், ஆகமமாகஇருப்பதும், எந்தச்சமயத்திலும், எல்லாச்சமயத்திலும் இருப்பதும், வேதத்தில் சிறப்பிக்கப்படுவதும், துன்பத்தை ஒழிப்பதும், ஞானத்தைத் தருவதும், அறியாமையாகிய சிறுமையை ஒழிப்பதும், வாயாரப்பேசப்படுவதும், சத்தியப் பொருளாய் இருப்பதும், மோட்சத்தைத் தருவதும், முனிவர்கள் அணிவதும், சத்தியமாவதும், பெரியோர்கள் புகழ்வதும், பத்திதருவதும், வாழ்த்தற்குரியதும், எண்வகைச் சித்திகளைத் தருவதும் பார்க்க இன்பமாய் இருப்பதும், அழகைத்தருவதும், போற்றி அணிபவர்க்குப் பெருமைகொடுப்பதும், அகாலமரணத்தை ஒழிப்பதும், அறிவைத்தருவதும், உயர்வைத்தருவதும், உடம்பில் பூசுதற்கு இன்பமாய் இருப்பதும், புண்ணியமாவதும், பேசப் பேச இனிமை தருவதும் தவசிகளின் ஆசையை ஒழிப்பதும், பேரின்பத்தின் முடிந்த பொருளாய் இருப்பதும், உலகம் எல்லாம் புகழ்வதும், செல்வமாய்த் துலங்குவதும், துன்பம் ஒழிப்பதும், சிவலோக இன்பம் தருவதும், அணிவதற்குப் பொருத்தமாய் இருப்பதும், புண்ணியர்கள் பூசிக்கொள்வதும், திரிபுரங்களைச் சுட்டதும், இம்மை மறுமைக்குப் பயனாய் இருப்பதும், பயிற்சிக்கு உரியதாய் உள்ளதும் பாக்கியமாவதும், சோம்பலைக்கெடுப்பதும், தூய்மையாக்குவதும், இராவணன் அணிவதும், எப்போதும் சிந்தனைக்குரிய பொருளாய் இருப்பதும், பராசக்தி சொரூபமாக இருப்பதும், பாவத்தை ஒழிப்பதும், மெய்ப்பொருளாய் இருப்பதும், தேவர்கள் உடம்பில் திகழ்வதும், உடல்நோய் தீர்க்க வல்லதும் இன்பம் தருவதும், சமணசாக்கியர்கள் கண்டபோது அவர்களைத் திகைக்கும்படி செய்வதும், எண்ண எண்ண இனிமை தருவதும், எட்டுத்திசைகளிலும் உள்ளார்களும் போற்றும் தன்மையதும் ஆகிய திருநீறாகும் என்பதாம்.

இத்திருநீற்றுப் பதிகத்தில் நாம் என்றும் நினைவில் கொள்ளவேண்டிய அடிகள் "சமயத்தில் உள்ளது நீறு," "உண்மையில் உள்ளது நீறு," "பேணி அணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு," "ஆசைகெடுப்பது நீறு" "மேல் உறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு," "உடம்பு இடர்தீர்க்கும் இன்பதம் தருவது நீறு," "எண்டிசைப்பொருளார் ஏத்தும் தகையது நீறு" என்பன.

இத்திருநீற்றுப் பதிகத்தால் திருவாலவாய்ச் சிறப்பை நன்கு உணரலாம். திருவாலவாய் நல்ல நெல் வயல்களை யுடையது என்பதும், அவ்வயல்கள் குளிர்ந்த நீர் வளத்தினைப் பெற்றது என்பதும், அழகுமிக்க மாளிகைகளை யுடையதும் போன்ற சிறப்புக்களை உணரலாம்.

இப்பதிகத்தின் ஈற்றுப்பாடல் இப்பதிகத்தை ஓதுபவர் நல்லவர் ஆவர் என்பதையும், திருஞானசம்பந்தர் அந்தணர் மரபினர் என்பதையும் அறிவித்து நிற்கின்றது. பூசுரர் ஞானசம்பந்தன் என்னும் தொடரை நோக்குக.

## மூன்றும் திருமுறை பதிகம் 51

பண் கௌசிகம்

**1.** **செய்ய னேதிரு ஆலவாய் மேவிய**
**ஐய னேஅஞ்சல் என்றருள் செய்எனைப்**
**பொய்ய ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்**
**பைய வேசென்று பாண்டியற் காகவே.**

(அ. சொ.) செய்யனே–செம்மையான நிறமுடையவனே, அஞ்சல் – பயப்படாதே, அமணர் – சமணர், கொளுவும் – கொளுத்திய, பையவே – மெல்லவே, பாண்டியற்கு – கூன் பாண்டியனுக்கு.

**2.** **தஞ்சம் என்றுன் சரண்புகுந் தேனையும்**
**அஞ்சல் என்றருள் ஆலவாய் அண்ணலே**
**வஞ்சம் செய்தஅ மணர்கொளு வும்சுடர்**
**பஞ்சவன் தென்னன் பாண்டியற் காகவே.**

(அ. சொ.) தஞ்சம் – அடைக்கலம், சரண்–திருவடி, பஞ்சவன், தென்னன்–பாண்டியனைக் குறிக்கும் சொற்கள்.

3. எண்தி சைக்கெழில் ஆலவாய் மேவிய
அண்டனே அஞ்சல் என்றருள் செய்எனைக்
குண்ட ராம்அம ணர்கொளு வும்சுடர்
பண்டிமன் தென்னன் பாண்டியற் காகவே.

(அ. சொ.) எண்திசை–எட்டுத்திசைகள், அண்டனே–எல்லா உலகங்களுமாய் உள்ளவனே, குண்டர் – உடற் பருமன் உடையவர், பண்டி–பாண்டியநாடு, பாண்டிய நாடு என்பதன் சிதைவு பண்டி என்பது, மன்–அரசன் 'ஐயனே அஞ்சல் என்று அருள் செய்' என்று பாடல்தோறும் பாடி வேண்டினர். இக்கருத்தை ஒரு பாட்டில் 'தஞ்சம் என்று உன் சரண் புகுந்தேன்' என்று குறிப்பிட்டிருப்பதையும் காணலாம்.

இத்திருப்பதிகத்தின் மூலம், சமணர்கள் சத்தியவான் கள் அல்லர், பொய்யர் ஏமாற்றுபவர் (எத்தர்) இறுமாப் புடையவர் (எக்கர்) துட்டர், கணக்கற்றவர், வஞ்சம் செய் பவர், போற்றுதல் செய்யாதவர், அருளாகிய தூய்மை இல் லாதவர், (சமணர்கள் சீவகாருண்யம் உடையவர் என்று தம்மைக் கூறிக் கொள்பவர் அக் கொள்கையுடையவர் என்பது உண்மையானல் சம்பந்தர் திருமடத்திற்குத் தீ வையார், அன்றோ? ஆகவே அவர்கள் 'அருள் தூ இலா அமணர்' என்று சம்பந்தர் சாற்றி அருளியதில் தவறு இல்லை என்க) உடற்பருத்தவர் என்பன போன்ற குறிப் புக்கள் அறியவருகின்றன.

திருஞானசம்பந்தர் இதே சமயத்தில் பாண்டியன் இயல்புகளையும் இதன் மூலம் நமக்கு அறிவிக்கின்றனர். அவன் சைனத் துறவிகளிடத்தும், அச்சமயத்தினிடத்தும் பற்றுடையவன் என்பன அறிய வருபவை.

4. அப்பன் ஆலவாய் ஆதி அருளினல்
வெப்பம் தென்னன் மேல்உறை மேதினிக்
கோப்ப ஞானசம் பந்தன்உரை பத்தும்
செப்ப வல்லவர் தீதிலாச் செல்வரே.

(அ. சொ.) மேதினிக்கு-உலகிற்கு, செப்ப-சொல்ல.

இத் தேவாரப்பதிகம், திருஞானசம்பந்தர் மதுரைத் திருமடத்தில்எழுந்தருளி இருந்தபோது இவரை அழித்து விடச் சமணர்கள் அம்மடத்திற்குத் தீ வைத்தனர். அதனை அறிந்த சம்பந்தர் மதுரை மன்னனை அச்சுடர் பற்றுக என்று கருதி இப்பதிகத்தைப் பாடினர். இக்கருத்துடன் இப்பதிகம் பாடப்பட்டது என்பதும், சமணர்கள் தம் மடத்திற்குத் தீ வைத்தது உண்மை என்பதும் இப் பதிகப் பாடல்களில் காணப்படும்.

"அமணர் கொளுவும் சுடர், பையவேசென்று பாண்டியற்காகவே," என்பன போன்ற தொடர்களைக் காண்க. இப்பதிக ஈற்றுப்பாடலிலும் காண்க. வெப்பம் தென்னன் மேல் உற என்று குறிப்பிட்டிருத்தலும் ஊன்றி நோக்கற்குரியது.

திருஞானசம்பந்தர் சுந்தரேசப்பெருமானையே தஞ்சம் என்று கொண்டிருந்ததனல், மங்கையர்க்கரசியார் குலச்சிறையாருடன் திருஞானசம்பந்தர்புறப்பட்டு இத்தலத்தை வணங்கியபோது இப்பதிகம் பாடப் பட்டது.

இப்பதிகத்தில் ஒருவர்க்கொருவர் பகையுடையவர்களும் இறைவனை அடைந்தால் பகை ஒழிந்து ஒருமனப்பட்டு வாழ்வர் என்பது, 'திங்களும் பாம்பும் திகழ்சடை' என்ற அடிகளில் இருந்து தெரியவருகிறது. இப்பதி இறைவர்க்கு இனிதாக உள்ளதுபோலும். இதனை, 'இனிதுறை கோயில் பரங்குன்று' என்ற குறிப்பால் அறியலாம்.

இப்பதிகத்தில் குறிப்பிடப்பட்ட திருப்பரங்குன்றம் கோங்கு, மாதவி,மல்லிகை முதலான மலர்களைக் கொண்ட சாலையுடையது. வண்டுகள்ஒலிக்கும் சோலைகளையுடையது.

நன்னகராகவும் உள்ளது. மேலும் ஆண் மயிலும் பெண் மயிலும் ஒன்றோடொன்று தழுவி இன்பமாக நடமாடும் சோலைகளையும், வண்டின் பாடலும் நீங்காத இடமாகவும் அமைந்தது.

மாறன் பத்திவைத்தவன், வித்தியாமண்டபம் வைத்து, அறிஞர்களோடு அளவளாவுபவன், தமிழ் மொழியிடத்து அன்புவாய்ந்தவன், குற்றம் இல்லாதவன் என்றும் கூறி அருளினர். இவனும் தீ வைக்க உடன்பட்டிருந்தான் என்பதைச் 'சுடர் பாவினான் தென்னன்' என்ற தொடராலும் வெளிப்படுத்தினர்.

இப்பதிகத்தின் மூலம் திருஞானசம்பந்தர் இப் பாண்டியனிடத்து இரக்கம் கொண்டமையும் விளங்கு கிறது. இல்லையானால், "அமணர் கொளுத்திய தீ பையவே (மெல்லவே) சென்று பாண்டியற்காகவே" என்று கூற மாட்டார் அல்லவா? மேலும் பாண்டியன் மனைவியாரான மங்கையர்க்கரசியார் பால் வைத்த அன்பும் இவ்வாறு கூறக் காரணமாயிற்று.

மதுரை இறைவர் திருப்பெயர் சொக்கன் என்பது இப்பதிப்பகத்தால் தெரிகிறது, இதுவே சுந்தரேசன் என்று மொழி பெயர்க்கப்பட்டது. தமிழ்மொழிபண் பொருந்தியது என்பதை 'பண்ணியல் தமிழ்' என்ற தொடர் உணர்த்தி நிற்கின்றது. ஆகவே, இசைக்குப் பொருத்தமான மொழி தமிழ் என்பதையும் உணர்வோமாக.

இப்பதிகத்தின் ஈற்றுப் பாடல், இப்பதிகத்தில் காணப் படும் பத்துப் பாடல்களையும் சொல்லவல்லவர் குற்றமற்ற செல்வத்தை யுடையவராவர் என்று அறிவிக்கின்றது. மேலும், அமண கொளுவிய சுடர் பாண்டியனைப் பற்றச் செய்யலாமோ என்று உலகம் கேட்காத வண்ணம் உலகம் ஒப்புக்கொள்ளும் வகையில் இக் கருத்துடன் இது கூறப் பட்டது என்பதை உணர்த்தவே திருஞானசம்பந்தர் "மேதி

ளிக்கு ஒப்ப உரைபத்தும்" என்று கூறினர். நாட்டின் நன்மை தீமைகட்கு மன்னன் அன்றோ காரணன்?

திருஞானசம்பந்தர் வரலாற்று உண்மைக்கு அரண் செய்யும் பதிகங்களில் இதுவும் ஒன்று.

## மூன்றும் திருமுறை பதிகம் 52

பண் கௌசிகம்

1. வீடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கவாலிநீன் கடிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே.

(அ. சொ.) வீடு + அலால் - மோட்சம் தவிர்த்து, அவாய்-ஆசை. விழுமியோர்கள்-மெய்ஞ்ஞானிகள், கழல்-திருவடி, ஆல-கொண்டாட, பரவ-போற்ற, காடு-சுடுகாடு, கவாலி-மதிலின் பெயர், கடி-காவல். கூடல்-நான்மாடக் கூடல், (மதுரை) ஆலவாயில் - மதுரை, குலாயது - குலாவியது.

2. பட்டிசைந்த அல்குலாள் பாவையாள் ஓர்பாகமா
ஒட்டிசைந்த தன்றியும் உச்சியாள் ஒருத்தியாக்
கொட்டிசைந்த ஆடலாய் கூட்லால வாயிலாய்
எட்டிசைந்த மூர்த்தியாய் இருந்தவாறி தென்னயே.

(அ. சொ.) இசைந்த - பொருந்திய, பாவையாள்-பார்வதிதேவியார், ஒட்டி - பொருந்தி, ஒருத்தி-கங்காதேவி, கொட்டு - மேளதாளங்கள், எட்டிசைந்தமூர்த்தி - மண், நீர், தீ, காற்று, ஆகாயம், சந்திரன், சூரியன், ஆன்மா ஆகிய எட்டு வடிவாகப் பொருந்திய மூர்த்தி.

3. குற்றம்நீ குணங்கள்நீ கூடல்ஆய வாயிலாய்
சுற்றம்நீ பிரானும்நீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூல் கருத்துநீ அருத்தம் இன்பம் என்றிசை
முற்றும்நீ புகழ்ந்துமுன் உரைப்பதென் முகம்மனே.

(அ. சொ.) பிரான் – தலைவன், இலங்கு - விளங்கும் அருத்தம்–பொருள். முகம்மன்-உபசாரமே.

4. கோலமாய நீள்மதில் கூடல்ஆல வாயிலாய்
பாலனாய தொண்டுசெய்து பண்டும் இன்றும் உன்னையே
நீலமாய கண்டனே நின்னைஅன்றி நித்தலும்
சீலமாய சிந்தையில் தேர்வதில்லை தேவரே

(அ. சொ.) கோலம்-அழகு, பண்டும்-முன்னும், சீலம்–ஒழுக்கம்.

5. போயநீர் வளம்கொளும் பொருபுனல் புகலியான்
பாயகேள்வி ஞானசம் பந்தன்நல்ல பண்பினால்
ஆயசொல்லின் மாலைகொண் டாலவாய் அண்ணலைத்
தீயதீர எண்ணுவார்கள் சிந்தையாய தேவரே.

(அ. சொ.) போய-வயலுக்குப் பாய்ச்சிக் கொண்டது போக, பொரு-கரைமோதும், புனல்-நீர், புகலியான்-புகலி என்ற ஊரினன். புகலி என்பது சீர்காழிக்குரிய பெயர் களில் ஒன்று.

இப்பதிகம் இறைவன்முன் மனம் கசிந்து ஓதுதற்கு உகந்தது. இப்பதிகத்தின் இரண்டாவது பாடல் இறைவனை நோக்கி, இறைவ! பாகமோர் பெண்ணை வைத்தும், தலையில் ஒருத்தியையும் வைத்திருப்பதன் கருத்து என்னையோ என்று வினவுவது இன்பச்சுவை தருவதாகும். திருஞான சம்பந்தர் தமது பாலப்பருவத்திலேயே பாடும் பணியை மேற்கொண்டவர்என்பதற்கு அவருடைய திருவாக்குகளே சாட்சியாக உள்ளன. அவற்றுள் ஒன்றான இப்பதிகத்தில் “பாலனாய தொண்டு செய்து” என்று குறிப்பிட்டிருப் பதையும் உணர்வோமாக.

மதுரையம்பதி மதில் காவலையுடையதாய் அழகுடைய தாய் நீண்டதாய் இருந்தது என்பதும் அறிய வருகிறது. இறைவன் எல்லாமாயும் இருப்பவன், என்பதை மூன்றும் பாடலாகிய குற்றம்நீ குணங்கள்நீ என்று தொடங்கும்

செய்யுளும், எட்டிசைந்தமூர்த்தி என்னும் தொடரும் விளக்கி நிற்கின்றன. திருஞானசம்பந்தர் மதுரைப் பரமேட்டியின் திருநடனத்தை நினைப்பதையே எப்போதும் தம், நியமமாகக் கொண்டவர் என்பதை "நின்று இயங்கி ஆடவே நினைப்பது என் நியமமே" என்று கூறியதோடு நில்லாமல் நம்போல்வாரும் அந் நியமத்தில் ஈடுபடவேண்டும் என்பதையும், "நிறை இலங்கு நெஞ்சில் நினைப்பதே நியமமே" என்றும் உபதேசித்தும் அருளினர். இறைவர் எல்லாமாய் இருப்பதோடு இன்றி, நால்திசைக்கும் மூர்த்தியும் ஆவர் என்றும் கூறி உலக முழுமைக்கும் இவரே முழுமுதற் கடவுள் என்பதையும் விளக்குவார்போல "நால் திசைக்கும் மூர்த்தியாகி நின்றதென்ன நன்மையே" என்று வியப்புடன் வினவுவார் ஆயினர். இவ்வாறு இறைவர் எல்லாத் திசைக்கும் உரியவராய் இருந்தும் சமணர்களும், பௌத்தர்களும் அவரைப் போற்றியும் அவர் திருவடிகளைப் புகழ்ந்து புண்ணியம் உற்றிலரே என்ற இரக்கத்தினராய், "தேற்றம் இல் வினைத்தொழில் தேரரும் சமணரும், போற்றிசைத்து நின்கழல், புகழ்ந்து புண்ணியங் கொளார்" என்றும் கூறுவாராயினர். இந்தவாறான உண்மை அறிவு (தேற்றம்) அவர்கட்டு இல்லாமல் வேறு வேறு தொழில்களைச் செய்கின்றனர் என்பதை விளக்கவே "தேற்றம் இல் வினைத் தொழில் தேரரும் சமணரும்" என்றனர்.

இப்பதிகத்தின் ஈற்றுப் பாடலால் சம்பந்தர் பிறந்த ஊர்புகலியாகிய சீர்காழி என்பதும் சிறந்த கேள்வி ஞானம் வாய்க்கப்பெற்றவர் என்பதும், திருப்புகலி நல்ல நீர்வளனும் உடையது என்பதும், மக்கள் தம் தீமை தீர எண்ணினால் இப்பதிகம்பாட அது நீங்கப்பெற்று நற்சிந்தை வாய்க்கப் பெற்ற தேவரும் ஆவர் என்பதும் அறியக் கிடக்கின்றன.

## மூன்ரும் திருமுறை பதிகம் 107

நாலடி மேல்வைப்பு

1. வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆதம் இல்லி அமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு உள்ளமே
பாதி மாதுடன் ஆய பரமனே

ஞாலம் நின்புக ழேமிக வேண்டும்தென்
ஆல வாயில் உறையுமெம் ஆதியே

(அ. சொ.) வேள்வி-யாகம், ஆதம்-அன்பு, அமண்-சமணர், தேரர்-பௌத்தர், ஞாலம்-உலகம், உறையும்-வாழும்.

2. கூடல் ஆலவாய்க் கோனை விடைகொண்டு
ஆடல் மேனி அமணரை வாட்டிட
மாடக் காழிச்சம் பந்தன் மதித்தஇப்
பாடல் வல்லவர் பாக்கிய வான்களே

(அ. சொ.) கூடல்—என்பது ஊர்ப் பெயர். ஆலவாய் என்பது-கோயில்பெயர், கோன்-தலைவன், விடை-உத்தரவு, ஆடல்மேனி-உடல் பருத்திருக்கும் காரணத்தால் ஆடும் உடம்பு, மாடம்-மாளிகை, காழி—சீர்காழி.

மதுரையம்பதி சமணசமயம் பரவிச் சைவ சமயம் குன்றிக் காணப்பட்டது. அதுசமயம் சைவசமயத்தை நிலைநிறுத்த திருஞானசம்பந்தர் மதுரையம்பதிக்கு வர வேற்கப்பட்டார். அவர் சமணர்களுடன் வாதம் செய்து சைவ சமயத்தை நிலைநிறுத்த வேண்டிய பொறுப்பு வந்து சேரவே, சுந்தரேசப் பெருமானிடம் தம் கருத்து முற்றுப் பெறவேண்டி இப்பதிகத்தினைப் பாடியருளினர்.

சமணர்களோடு வாதம் செய்ய எண்ணிலர் திருஞான சம்பந்தர் என்பது இப் பதிகத்தில் காணப்படும் பாடல் களில் அக் காரணத்தைக் குறிப்பிடுவதினின்றும் உணரலாம்.

உதாரணமாக, "முருட்டு அமண் குண்டரை ஓட்டி வாது செயத் திருவுள்ளமே" என்பதை எடுத்துக் காட்டலாம். சமணர்களை மட்டும் வாதில் வெல்ல எண்ணுமல் பௌத்த சமயத்தவரையும் வாதிட்டு வெல்ல எண்ணம் இருந்தது என்பதை "அமணொடு தேரரை வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே" "கார் அமண் தேரரை, எய்திவாது செய்யத் திருவுள்ளமே" என்ற தொடர்கள் விளக்கி நிற்கின்றன.

வாதம் செய்வதற்குக் காரணம் வேண்டும் அல்லவா? அக்காரணங்களையும் இப்பதிகம் விளக்கி நிற்கிறது. சமணர்களும் பௌத்தர்களும் வேதவிதிப்படி அந்தணர்களால் செய்யப்படும் யாகங்களை நிந்தனை செய்து வந்தனர். சும்மாவும் இராமல் யாகம் செய்பவரைக் கோபம் (விளி) மூட்டும் மனமும் கொண்டனர். யாகம் செய்வது வீண் என்றும் கூறிவந்தனர். இவையே அவர்களோடு வாதம் செய்யத் திருஞானசம்பந்தர் உளம் கொள ஏதுவாயின. மேலும், இறைவர் புகழையே உலகம் விரும்பி இருந்தது என்பதும் கருதவருகிறது. இதனை "ஞாலம் நின்புகழே வேண்டும்" என்னும் அடி அறிவிக்கிறது. சமணர்களுக்குச் சைவசமயத்தவரிடம் இருந்த வெறுப்பு அளவு கடந்ததாகும். சைவர்கள் காற்றுக்கூடத் தம் மீது படாதபடி அவ்வளவு வெறுப்புடன் இருந்தனர். இதனை இப்பதிகம் எட்டாவது பாடல் "நீற்று மேனியர்மேல் உற்ற, காற்றுக் கொள்ளவும் நில்லா அமணர்" அறிவித்து நிற்கிறது.

இப்பதிகத்தின் மூலம் சமணர்கள் இயல்புகள் எடுத்துக் காட்டப்படுகின்றன. அவை அவர்கள் அன்பு (ஆதம்) இல்லாதவர்கள், வஞ்சகம் (கைதவம்) உடையவர்கள், கருநிறமுடையவர்கள், வேத வழக்கம் இல்லாதவர்கள், அவர்கள் தலைமயிரை மழிக்காமல் பிடுங்கி எடுக்கும் இயல்பினர். பாயை ஆடையாக அணிந்தவர். முரட்டுக்

குணம் வாய்ந்தவர், நீலநிறம் வாய்ந்த பருத்த வடிவினர் என்பன.

திருஞானசம்பந்தர் மீது சில பழிகளை ஏற்றிக் கூறத் தொடங்குவர். அப்பழிகளுள் ஒன்று அவர் சமணர்களைக் கழுவேற்றிக் கொன்றனர் என்பது. அவ்வாறு அவர்களைக் கழுவேற்றிக்கொன்ற குறிப்பு இப்பதிகத்தில் காணப் பட்டிலது. அவர்களை வாதில் வெல்லவே இவர் முனைந்து நின்ருர் என்பதுதான் காணப்படுகிறது. இதனை "அமணொடு தேரரை வாதில் வென்றழிக்க" (வென்றழிக்க என்பது வெல்ல என்ற பொருளில் தான் உள்ளது. ஈண்டு வென் றழிக்க என்பதை ஒரு சொல்லாகக் கொள்ளவேண்டும்) "அமண் தேரரை எய்தி வாது செய" "முறிய வாது செய" "செறுத்து வாது செய" "அருகர் திறங்களைச் சிந்த வாது செய" (திறங்களை என்பதைச் சிரங்களை என்று கருதினர் போலும்!) "ஒட்டி வாது செய, திறம் கழல வாது செய" தேற்றி வாதுசெய, தென்ற (சிதறிப் போகும்படி) வாது செய" என்ற தொடர்களில் காணலாம். திருஞான சம்பந் தருக்குச் சமணர்களைத் தெளிவடையச் செய்ய வேண்டும் என்பது கருத்து ஆதலின், "அமணரைத்தேற்றி வாது செய" என்றும் கூறி அருளினர். அவர்கட்கு இறைவன் சீலம் உணர்த்த வேண்டும் என்பதும் இவரது திருவுள்ளக் குறிப்பு என்பது "நீலமேனி அமணர் திறத்து நின்சீலம் வாது செயத் திருவுள்ளமே" என்பதனுல் பெறப்படுகிறது.

திருஞானசம்பந்தர் தாமாக ஒன்றையும் செய்ய எண்ணுமல் எல்லாவற்றிற்கும் இறைவர் திருவுள்ளச் சம்மதத்தையே நாடி நின்ருர் என்பது இவர் வாது செய்யப் புறப்படும் முன் இறைவர் உத்தரவு வேண்டியதினின்றும் உணரலாம். இதனை இப்பதிக ஈற்றுப் பாடலில் திருஞான சம்பந்தர் தெளிவுற "கூடல் ஆலவாய்க் கோனை விடை கொண்டு, ஆடல் மேனி அமணரை வாட்டிட" என்று

குறிப்பிட்டுள்ளார். இப்பதிகம் பாடுபவர் பாக்கியவாளர் என்றும் அறிவிக்கின்றார். திருஞானசம்பந்தர் வாழ்க்கை வரலாற்றுக்கு அகச்சான்றாய் நின்று துணைசெய்யும் பதிகங்களுள் இதுவும் ஒன்றாகும்.

இப்பதிகம் திருஇயமகம் என்ற திருப்பெயருடன் திகழ்கிறது. திருஇயமகம் என்பது மடக்கு என்னும் தமிழ்ப் பெயரால் இலக்கணத்தில் பேசப்படும். ஒரு சொல்லோ தொடரோ அப்படியே செய்யுளில் மடங்கிவர அமைவதே மடக்கு எனப்படும். இப்பதிகம் முழுமையும் இம்மடக்கு அமையப் பாடப்பட்டுள்ளது. இங்கு எடுத்துக் காட்டப் பட்டுள்ள இருபாடல்களிலும் இம்மடக்கு அமைந்திருப் பதைக் காணலாம். இருக்கையே என்பது இருமுறை மடங்கி இருப்பதைக் காண்க. இவ்வாறே பங்கனே, பூதனே என்ற சொற்கள் மடங்கி இருப்பதைக் காண்க. களத்தனே என்ற சொல்மட்டும் ஈற்றில் பிரித்துப் பொருள்படும் முறையில் ஆளப்பட்டுள்ளது. அண்டர்கள் அத்தனே என்று பிரித்துப் பொருள் காணவேண்டும்.

இவ்வாறே ஈற்றுப் பாடலிலும், விரகனே சம்பந்தன் என்ற சொற்கள் பிரிக்கவேண்டியின்றி இயற்கையில் அமைந்திருப்பதைக் காணலாம். ஆனால், மூன்றாம் அடியில் உள்ள வாயிலுளத்தனே என்பது முன்னர் வாயிலுள் அத்தனே என்றும், வாயில் உளத்தனே என்றும், நான்காம் அடியிலுள்ள பத்தும் என்னும் சொல், முன்னர் பத்தும் என்றே நின்று பின்னர் பற்றுமே என்று பொருள் படும் நிலையில் அமைந்துள்ளது.

## மூன்றாம் திருமுறை பதிகம் 113

### திருஇயமகம்

**1. ஆல நீழல் உகந்த திருக்கையே**
**ஆனபாடல் உகந்த திருக்கையே.**
**பால னேர்மொழி யாள்ஒரு பங்கனே**
**பாதம் ஓதலர் சேர்புர பங்கனே**

கோல நீறணி மேதகு பூதனே
கோதி லார்மனம் மேவிய பூதனே
ஆல நஞ்ச முதுண்ட களத்தனே
ஆல வாயுறை அண்டர் களத்தனே.

2. ஈன ஞானிகள் தம்மொடு விரகனே
ஏறு பல்பொருள் முத்தமிழ் விரகனே
ஆன காழியுள் ஞானசம் பந்தனே
ஆல வாயினின் மேயசம் பந்தனே
ஆன வானவர் வாயிலு ளத்தனே
அன்பர் ஆனவர் வாயிலு ளத்தனே
நானு ரைத்தன செந்தமிழ் பத்துமே
வல்ல வர்க்கிவை நற்றமிழ் பத்துமே.

*1. (அ. சொ.) ஆலம்-கல்லால விருட்சம், உகந்தது இருக்கையே-உபதேசம் செய்வதற்கு உரிய இருப்பிடமாக இருக்க விரும்பியது, உகந்தது-விரும்பியது, இருக்கை-ரிக்வேதத்தை, சோ-மதில், புரம்-முப்புரங்களை, பங்கனே-அழித்தவனே, கோலம்—அழகு, மேதரு-மேன்மை பொருந்திய, பூதனே-தூய்மை ஆனவனே.*

*கோது-குற்றம், பூதனே—மண், நீர், தீ, காற்று, ஆகாய மாகிய ஐம்பூத வடிவாயுள்ளவனே, ஆலநஞ்சு-ஆலகால விஷம், அமுதுண்ட-அமுதம்போல உண்ட, களத்தனே-கழுத்தை யுடையவனே, உறை-வாழும், அண்டர்கள்-தேவர்கள், அத்தனே—தலைவனே.*

*2. விரகன்-தந்திரமாய் உள்ளவன், முத்தமிழ்-இயல் இசை நாடகத் தமிழ், விரகன்-வல்லவன், காழி-சீர்காழி, சம்பந்தனே-தொடர்புடையவனே, வானவர்-தேவர், உளத்தனே-மனத்தில் இருப்பவனே, பத்து-பற்று, அன்பாய் இருப்பது.*

இப்பதிகம் ஞானசம்பந்தரது பேரறிவுப் புலமையை உணர்த்தும் பல பதிகங்களுள் ஒன்றாகும். இப்பதிகத்தில்

சிறப்பாகக் குறிப்பிடப்பட்டவை, இறைவர் தம் திருவடிகளைப் புகழ்ந்து ஓதாதவர்களை அழிப்பர் என்பதும், தம் மனம் நினைவார் பாரம் அறுப்பார் என்பதும், குற்றமற்றவர் மனத்தில் பொருந்தியவர் என்பதும், தம்மாட்டு அன்பு இல்லாதவர்களை இழிவாகக் கருதுவர் என்பதும், பாண்டியன் மனைவியான மங்கையர்க்கரசியார்க்கும் தொண்டர்களுக்கும் அணியாய் இருப்பவர் என்பதும், திருநீலகண்ட யாழ்ப்பாணர்க்கு அருள் செய்தவர் என்பதும், அன்பால் நினைப்பவருக்கு அருளும் மெய்யர் என்பதும், இறைவர் முத்தமிழ் விரகர் என்பதும் அன்பர் உள்ளத்திலும் வானவர் வாயிலும் எப்போதும் இருப்பவர் என்பதும் தெரியவருகின்றன. "நின் அடித் தொழுநாளும் இருப்பனே" என்று திருஞானசம்பந்தர் குறிப்பிடுவதிலிருந்து அவர் இறைவரை மறவாது போற்றி வந்த மாண்பு புலனாகின்றது.

## மூன்றும் திருமுறை பதிகம் 119

### பண்-புறநீர்மை

1. மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
   வரிவளைக்கை மானி
   பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
   பணிசெய்து நாள்தொறும் பரவப்
   பொங்கழல் உருவன் பூத நாயகன்
   நால்வகைப் பொருள்கள் அருளி
   அங்கையற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
   ஆலவாய் ஆவதும் இதுவே.

2. வெற்றவே அடியார் அடிமிசை வீழும்
   விருப்பினன் வெள்ளை நீறு அணியும்
   கொற்றவன் தனக்கு மந்திரி ஆய
   குலச்சிறை குலாவி நின்றேத்தும்

ஒற்றைவெள் விடையன் உம்பரார் தலைவன்
உலகினில் இயற்கையை ஒழிந்திட்
டற்றவர்க் கற்றசிவன் உறைகின்ற
ஆலவா யாவதும் இதுவே.

3. பன்னலம் புணரும் பாண்டிமா தேவி
குலச்சிறை எனும் இவர் பணியும்
அன்னலம் பெறுசீர் ஆலவாய் ஈசன்
திருவடி ஆங்கவைப் போற்றிக்
கன்னலம் பெரிய காழியுள்
ஞானசம்பந்தன் செந்தமிழ் இசை கொண்டு
இன்னலம் பாடவல்லவர் இமையோர்
ஏத்தவீற் றிருப்பவர் இனிதே.

*1. (அ. சொ.) மங்கையர்க்கரசி-கூன்பாண்டியன் மனைவியார், வளவர்கோன்-சோழமன்னன், பாவை-பதுமை போன்ற பெண், பங்கயச்செல்வி-தாமரைமலரிலுள்ள இலக்குமி போன்றவள், பரவி-போற்றி, பூதநாயகன்-உயிர்கட்குத் தலைவன், நால்வகைப் பொருள்கள்-மக்கள் பெறவேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய உறுதிப்பொருள்கள், அங்கயற் கண்ணி-அழகிய கயல் போன்ற கண்களையுடையவள். கயற்கணி என்பதுவே மீனாட்சி என மொழி பெயர்த்துக் கொள்ளப்பட்டது.*

*2. (அ. சொ.) வெற்றவே-வெறுமனே, அதாவது சிறிதும் யோசனையே செய்யாமல், அடிமிசை-பாதங்களில், நீறு-விபூதி, கொற்றவன்-மன்னனாகிய கூன்பாண்டியன், குலச்சிறை-கூன்பாண்டியன் மந்திரியார், குலாவி-மகிழ்ந்து, ஏத்தும்-போற்றும். விடை-இரஷபம், உம்பரார்-தேவர், அற்றவர்-எல்லாப்பற்றையும் விட்டவர்.*

*3. (அ. சொ.) புணரும்-சேரும், கன்னல்-கரும்பு, காழி-சீர்காழி, இமையோர்-தேவர், ஏத்த-போற்ற.*

திருஞானசம்பந்தர் தம் பரிவாரங்களுடன் மதுரையம்பதி வருகின்ற காலத்துத் தம்முன் மதுரை ஆலவாய்ப் பெருமான் ஆலயந்தோன்றக் கண்டு, இவ்வாலயம் மங்கையர்க்கரசியாராலும், குலச்சிறையாராலும் வழிபடப்படும் தலமன்றோ என்று எண்ணிப் பாடப்பட்ட பதிகம் இது.

இப்பதிகத்தால் மங்கையர்க்கரசியார் குலச்சிறை நாயனார் இயல்புகள் நன்கு சிறப்பித்துப் பேசப்பட்டுள்ளன. மங்கையர்க்கரசியார் சோழமன்னன் திருமகளார், இளமை மாறாத மானி என்னும் திருப்பெயரினர். அழகில் இலக்குமி போன்றவர். கூன்பாண்டியனுக்கு மனைவியாராக வாழ்க்கைப்பட்டவர். திருநீற்றை வளர்க்கும் குணமுடையார். பக்தி மிகுந்தவர் மற்றும் பல குணமும், வாய்க்கப் பெற்றவர். பண்ணிசைபோன்ற. மொழியினர். மார்பம் முத்துமாலை சந்தனக்குழம்பு விளங்க இருந்தவர். பவழம் போன்ற வாயும், சேல்மீன் போன்ற கண்ணும் பந்தாடுங் காலத்து அதனை அணைக்கும் திருக்கரமும், நல்ல அணிகலன்களை அணிந்தவர், அழகிய நெற்றியும் வாய்ந்தவர் என்பன போன்ற குறிப்புக்கள் இப்பதிகத்தால் அறியவருகின்றன.

குலச்சிறையார் அடியார்களைக் கண்டதும் உடனே அவர்கள் திருவடிகளில் விழும் விருப்பமுடையவர். கூன் பாண்டியனுக்கு மந்திரியார். சிவனடியாராக வருபவர் தனித்தேனும், கூட்டமாகவேனும் வரக்கண்டதும், அவர்களைப் பணியும் பணிவுடையவர். அடியவராக இருப்பவர் நலமுடையவராயினும் சரி, இல்லாதவராயினும் சரி, குலமேம்பாடு உடையவராகவோ, இல்லாதவராகவோ, இருப்பினும் சரி, அவர்களையே தம் தவப்பேறாகக் கருதி வணங்குபவர். பஞ்சாட்சர மந்திரங்களை ஓதியும் நல்லவராயும் நல் இயல்புரிமையுடையவராயும்,கோவணம் திருநீறு,கண்டிகையோடுகூடிய தோற்ற முடையவராயுமுள்ளாரைக் கண்டதும் கீழே விழுந்து வணங்கி எழும் சிறப்புடையவர். தொண்டர்கள் வாழ்திசைகள் தோறும் வணங்கும் குணமுடையவர்.

கண்டபோது இன்புறுவர் என்பனபோன்ற குறிப்புக்கள் அறியப்படுகின்றன. திருஞானசம்பந்தர் தீர்க்கதரிசி ஆதலின், கூன்பாண்டியன் தம்மைக்கண்ட பிறகு திருநீறு பூசிக்கொள்ளும் பேறு பெறப்போகின்றமையால், "வெள்ளை நீறணியும் கொற்றவன்" என்று கூறியருளினர். மங்கையர்க்கரசியார் சிற்சில வேளைகளில் பந்தாடிப் பொழுது போக்கும் இயல்பும் பெற்றிருந்தனர் என்பது, "பந்தணை விரலாள்" என்ற தொடரால் விளக்கியும், இறைவர் ஸ்படிக நிறத்தினர்; தேவியர் மரகத வடிவினர்; இவ்விருவர்களும் இணைந்து வீற்றிருக்கும் நிலையினை, "சுத்தமார்பளிங்கின் பெருமலையுடனே சுடர் மரகதம் அடுத்தால்போல் அத்தனூர் உமையொடு இன்புறுகின்ற" என்று கூறியருளினர்.

இறுதிப்பாட்டில் இப்பதிகம் பாடும் பேறுபெறுவர் தேவர்கள் போற்ற இனிது வீற்றிருப்பர் என்று கூறப்பட்டுள்ளது.

## மூன்றும் திருமுறை பதிகம் 47

### பண் கௌசிகம்

**1.** காட்டு மாஅ துரித்துரி போர்த்துடன்
நாட்டம் மூன்றுடை யாய்உரை செய்வன்நான்
வேட்டு வேள்விசெய் யாஅமண் கையரை
ஓட்டி வாது செயத்திரு உள்ளமே.

(அ.சொ.) காட்டுமா-யானை உருவுடன் வந்த கயமுகாசூரன், உரி-தோல், நாட்டம்-காணி, வேட்டு-விரும்பி, வேள்வி-யாகம், கையர்-வஞ்சகர்.

**2.** செந்தெ னுமுர லும்திரு வாலவாய்
மைந்த னேஎன்று வல்அமண் ஆசறச்
சந்தம் ஆர்தமிழ் கேட்டமெய்ஞ் ஞானசம்
பந்தன் சொற்பக ரும்பழி நீங்கவே.

(அ.சொ.) செந்து என-செந்து என்னும் பண்ணைப் போல, முரலும்-(வண்டுகள்) ரீங்காரம் செய்யும், மைந்தனே-வல்லமையுடைய சிவனே, ஆசு-குற்றம், சந்தம்-அழகு ஆர்-பொருந்திய.

இப்பதிகம் சமணர்களுடன் வாதம் செய்ய வேண்டி இருத்தலின், அதன் பொருட்டு இறைவர் உத்தரவு தேவை இருந்த காரணத்தால் திருஞானசம்பந்தர் பாடநேர்ந்த தாகும். இந்தக் கருத்து இப்பதிகப் பாடல்களில் "அமண் கையரை ஓட்டி வாதுசெயத் திருவுள்ளமே" "வாதில் வெள் அழிக்கத் திருவுள்ளமே" என்பன போன்ற தொடர்கள் இருப்பனவற்றால் உணரலாம். இப்பதிகப் பாடல்களில் "அழிக்க" என்று வருகின்ற இடங்களில் வாதில் வெல்ல என்பது பொருளே அன்றி வேறன்று. இப்பொருளில் திருஞானசம்பந்தர் கூறிற்றிலர் எனில், "பைய வாது செய" என்று புகரார் அல்லரோ? "சீறி வாது செய" என்ற தொடரும் இப்பதிகத்தில் வருகின்றதே எனில், அமணர்கள் தம் சீற்றத்தைக் காட்டினால் அதன்பின் அவர்கட் கேற்பச் சினம் கொண்டு வாதிக்க எண்ணம் என்பதற் காகவே இந்தவாறு விண்ணப்பித்து விடைகேட்கின்றனர். இதுவே கருத்து என்பதை உய்த்து உணர வைப்பதற் காகவே "சால(பொருந்த) வாது செய" என்றும் பாடி யருளினர்.

சமணர்கள் மதுரையம்பதியில் இருக்கையாகக் கொண்டு நாட்டையும் நாட்டு மன்னனையும் தம் கீழ்ப் படுத்திச் சைவசமயம் தழைக்க ஒட்டாமல் செய்த காரணத்தால் அவர்களை நாட்டில் இராமல் ஓடி விடும்படியும், தாம் இருக்கின்ற இடம் தெரியாமல் மறைந்தேனும் வாழும் படி செய்யவேண்டும் என்பதற்காகவும் வாதம் செய்ய எண்ணினர் என்பதை "ஓட்டி வாது செய" என்றும் "காக்க (மறைந்திருக்க) வாது செய" என்ற தொடர்களில் குறிப் பிட்டனர். அவர்கள் தவம் செய்வது தவறு என்று அறிந்து

கலங்க வேண்டும் என்பதே இவர் "செண்டடித்து உழற" என்பதால் உணரலாம்.

சமணர்கள் கல்வியில் மிகுந்தவர். ஆனால், அக்கல்விக் கேற்ப நடவாமல் இருந்தமையின் அவர்கள் தீய ஒழுக்கம் மேற்கொண்டனர். ஆகவே, அவ்வொழுக்கம் அவர்கள் பால் இல்லாமல் இருக்கத் திருவுள்ளம் கொண்டே "கற்பு (ஒழுக்கம்) அழிக்க" என்று கூறி அருளினர். ஈண்டு கற்பு அவர் தம் தீய ஒழுக்கமாம். தம் ஒழுக்கம் கெட்டு அமணர் ஒழுகினர் என்பதை இப்பதிகத்திலேயே, "கழிக் கரைப் படுமீன் கவர்வார் அமண்" என்ற அடியே அறி வித்து நிற்கின்றது. மேலும், அவர்கள் தவவேடம் பூண்டும் அத்தவத்திற்கு ஏற்ப ஒழுகாதவராயும் இருந்தனர் என்பதை "பொய்த்த வேடத்தராம் அமண சித்தர்" என்று இவர்கள் கூறப்பட்டிருக்கின்றனர். மேலும் தம் பணியிலும் தவறிய வர் என்பது "பணிபொய்த்த" என்ற தொடரும் சான்றாய் நின்று சாற்றும் இப்பதிகத்தால் சமணர்கள் யாகம் செய்யா தவர்கள் என்பதும், சமணர்கள் பேய் எண்ணம் படைத் தவர் என்பதும், வேதம் அறியாதவர் என்பதும் இலையிலோ கலத்திலோ வைத்து உணவு கொள்ளாமல், கையில் பிறர் பிசைந்து வைக்க உண்ணும் குணத்தினர் என்பதும், வஞ்சகர் என்பதும் நல்ல உடல் பருமனுடையவர் என் பதும், அப்பருமனால் வீறு (சிறப்பு) குறைந்து காணப்படு பவர் என்பதும், அவர்கள் தோற்றம் வேடர்கள் போல இருந்தது என்பதும் பாவர் என்பதும் வீணர் என்பதும் மேலை வீடு (மோட்சம்) உணராதவர் என்பதும், பிறரை அழிப்பவர் (தம் திருமடத்தில் தீ வைத்த காரணத்தால் இவ்வாறு கூறப்பட்டனர் போலும்) என்பதும், சித்தில் வல்லவர் என்பதும் மழுங்கா முடியினர் என்பதும் அறிய வருகின்றன.

சாக்கியர்கள் (பௌத்தர்கள்) பெரிதும் செம்மையான திருமேனியுடையவர்கள். மழுங்க முடி களைந்து மழமழ

என்று தோற்றமளிப்பவராய் இருந்தனர். ஆகவே அவர்கள் பார்வைக்கும் பெண்கள் போல் முகப்பொலிவுடன் காணப்பட்டனர். இதனால்தான் "பெண் அகத்து எழில் சாக்கியர்" என்று திருஞானசம்பந்தரால் குறிப்பிடப் பட்டனர்.

மேலே கூறப்பட்ட குணமுடையவர்களுடன் தாம் வாது செய்வது முறையா அன்று என்பதை இறைவரே நன்கு சிந்தித்துத் தமக்கு உத்தரவு கொடுக்க வேண்டும் என்பதற்காகவே "நீதியாக நினைந்து அருள் செய்தியே" என்று திருஞானசம்பந்தர் இறைவரை வேண்டுவராயினர்.

திருவாலவாய் ஆலயம் அமைந்த கூடலம்பதி, நல்ல நாற்றுகளையுடைய வயல்களையும் சோலைகளையும் நெருங்கப்பெற்று மலர் மிகுதியினால் தேனும் நிரம்பப் பெற்றுத் திகழ்ந்தது. ஒலிக்கும் பூநீர் வளம் சூழ்ந்தது. வண்டுகள் இசைபோல முழங்கும். இத்தகைய வளப்பம் உடையது கூடலம்பதி என்பதும் இப்பதிகத்தால் அறிய வருகின்றன.

திருஞானசம்பந்தர் சிவஞானம் கைவரப் பெற்றவர். அவர் பெற்ற ஞானம் மெய்ஞ்ஞானம். அவரும் தமிழ் மொழியினை நன்கு உணர்ந்தவர். என்றாலும், அறிஞர் கூறுவனவற்றையும் கேட்ட மெய்ஞ்ஞானம் வாய்க்கப் பெற்றிருந்தார். இக் கருத்துக்களை எல்லாம் "சந்தமார் தமிழ் கேட்ட மெய்ஞ்ஞான சம்பந்தன்" என்று தாமே குறிப்பிடுவதால் அறியலாம். தமிழ் மொழியைக் குறிப்பிடும்போது அம்மொழியின் இசைச் சிறப்பை உணர்த்தச் "சந்தமார் தமிழ்" என்றனர். இப்பதிகத்தை ஓதினால் பழி நீங்கும் என்பதும் இப்பதிக இறுதிப் பாடல் அறிவிக்கின்றது.

## மூன்றும் திருமுறை பதிகம் 47

**மானின் நேர்விழி மாத ராய்வழு திக்கு மாபெரும் தேவிகேள்
பானல் வாய்ஒரு பாலன் ஈங்கிவன் என்று நீபரி வெய்திடேல்
ஆனை மாமலை ஆதிஆய இடங்க ளில்பல அல்லல்சேர்
ஈனர் கட்கெளி யேன்அ லேன்திரு வால வாய் அரன் நிற்கவே.**

*(அ. சொ.) நேர்-ஒப்பான, வழுதிக்கு-கூன்பாண்டிய னுக்கு, மாபெருந்தேவி-சிறந்த பெரிய மனையாட்டியே, பானல்-செங்குவளைமலர், பரிவு-இரக்கம், ஆனைமாமலை-ஆனைமலை, இது மதுரையில் உள்ளது, அல்லல்-துன்பம், ஈனர்-இழிந்தவர்களான சமணர்.*

**எக்க ராம்அமண் கைய ருக்கெளி யேன்அ லேன்திரு வாலவாய்
சொக்கன் என்னுள் இருக்கவேதுளங்கும்முடித் தென்னன் முன்
தக்க சீர்புகலிக்கு மன்தமிழ் நாதன் ஞானசம் பந்தன்வாய்[இவை
ஒக்க வேஉரை செய்த பத்தும் உரைப்ப வர்க்கிடர் இல்லையே.**

*(அ. சொ.) எக்கர்-இறுமாப்புடையவர், கையர்-வஞ்சகர், சொக்கன்-சுந்தரேசப் பெருமான், துளங்கும்-விளங்கும், தென்னன்-கூண்பான்டியர், புகலிக்குமன்-சீர்காழித் தலைவர், இடர்-துன்பம்.*

*திருஞானசம்பந்தர் கூன்பாண்டியன் உற்ற சுர நோயைத் தீர்க்கும் பொருட்டுப் பாண்டியன் சபைக்கு அழைக்கப்பட்டனர். அச்சபையில் சமணர்களும் கூடி இருந்தனர். அவர்கள் உடற்கட்டு வாய்ந்தவர்களாய் இருக்க ஞானசம்பந்தர் பால்யத் தோறறத்தோடு இருப்பதைக் கண்டு, இவருக்குச் சமணர்களால் என்ன தீங்குவிளையுமோ என்ற ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டிருந்த மங்கையர்க் கரசியாருடைய உள்ளத்தை அறிந்த திருஞானசம்பந்தர் இப்பதிகத்தைப் பாடத் தொடங்கினர்.*

*மங்கையர்க்கரசியார் மருண்டு மருண்டு பார்த்திருந்த காரணத்தால்தான் "மானினேர் விழி மாதராய்" என்று விளித்துப் பாடினர். தாம் சிறுவர் ஆயிற்றே சமணர்*

என்ன செய்து விடுவரோ என்று எண்ணிக் கொண்டிருந்தார் மங்கையர்க்கரசியார் என்பதையும் உணர்ந்து, 'பானல் வாய் ஒரு பாலன் ஈங்கு இவன் என்று நீ பரிவு எய்திடேல்' என்றும் குறிப்பிட்டுப் பாடினர். இவ்வடி திருஞானசம்பந்தர் சிறு பிள்ளை என்பதற்கு ஓர் அகச்சான்றுகும். அவர் வரலாற்றிற்கு ஆணித்தரமான அகச்சான்றும் ஆகும். இப்பதிகம் பாண்டியன் சபையில் அவன்முன் பாடப்பட்டது என்பதும் இப்பதிக ஈற்றுப் பாடல் "தென்னன்முன் இவை ஞானசம்பந்தன் வாய் ஒக்கவே உரை செய்த" என்று கூறி அறிவிக்கின்றது.

திருஞானசம்பந்தர்க்குச் சுந்தரேசப் பெருமான் திருவருள் முற்றிலும் இருந்தமையால், தாம் சமணர்கட்குச் சிறிதும் சளைத்தவர் அல்லர் என்பதைப் பாடல் தோறும் "எளியேன் அலேன் திருஆலவாய் அரன் நிற்கவே" என்று கூறுவதால் தெரிகிறது.

இப்பதிகத்தால் சமணர்கள் மதுரை ஆனைமலை முதலான இடங்களில் துன்பம் அடைந்துள்ளனர் என்பதும், ஆரியர் மொழியின் பயனும் செந்தமிழ் மொழியின் பயனும் அறியாதவர்கள் என்பதும், அறத்தைக் காட்டிச் செல்வம் கவர்பவர் என்பதும், மயிற்பீலி, பாய் இவற்றை இடுக்கிக் கொண்டும் தள்ளாடிக்கொண்டும் பிறர் பின் செல்பவர் என்பதும், தலைமயிரைப் பறிப்பவர் என்பதும் போன்ற குறிப்புக்கள் தெரியவருகின்றன.

சமணர்கள் சந்து சேனன், இந்து சேனன், தரும சேனன், கந்து சேனன், கனக சேனன், கனக நந்தி, புட்ப நந்தி, பவண நந்தி, குமண நந்தி, மா நந்தி, சுகன நந்தி, குகை நந்தி, திவண நந்தி, அநக நந்தி முதலான பெயருடன் விளங்கி இருந்தனர்.

சமணர்கள் அக்காலத்தில் வைதீக சமயங்கட்குப் பல விதத்தில் இடையூறுக இருந்தனர் போலும்! அதனைத்

திருஞானசம்பந்தர் அவர்களைப் பற்றிக் குறிப்பிடும் சொற்களாகிய ஈனர்கள்; மாசு (அழுக்கு சேர்) ஆகதர், அந்தகர், கையர், கேட்டைகள், (குறும்பர்கள் எக்கர்இறுமாப்புடையவர்கள்) என்பனவற்றால் அறியலாம்.

சமணர்கள் கருநிறம் படைத்து உருவப் பெருமன் உடையவராய் இருந்தமையால் அவரது நடை யானை நடப்பது போல இருந்தது என்பதை "மாகதக்கரி போல் திரிந்து" என்று கூறப்பட்டனர். உடல் முழுதும் மயிர் அடர்ந்து இருந்தமையால் மந்திபோல் திரிந்தும் என்றும் கூறப்பட்டனர். திருஞானசம்பந்தர் சமணர்களைக் குறும்புக்காரர் என்று கூறினாலும், தாமும் குறும்புடையவர் என்பன அவருடைய வாக்கே சாட்சி கூறும். "அந்தணம் அருகந்தணம், அது புத்தணம், அது சித்தணம்" என்ற அடியினைக் காண்க. இன்னும் பலப்பல சமணர்களைப் பற்றிய குறிப்புகளை இப்பதிகம் அறிவித்து நிற்கிறது. இவர்கள் கிளிவிருத்தம் என்னும் நூலையும் பாடியிருப்பதாக இப்பதிகத்தால் விளங்குகிறது. ஈற்றுப் பாடலால் இப்பதிகம் பாடுபவர்கட்குத் துன்பம் வராது என்ற உறுதியும் புலனாகிறது.

## நான்காம் திருமுறை பதிகம் 61

### திருநேரிசை

**1. வேதியா வேத கீதா விண்ணவர் அண்ணா என்றென்**
**றோதியே மலர்கள் தூவி ஒருங்குநின் கழல்கள் காணப்**
**பாதியோர் பெண்ணை வைத்தாய் படர்சடை மதியம் சூடும்**
**ஆதியே ஆலவாயில் அப்பனே அருள்செய் யாயே.**

*(அ. சொ.)* வேதியா-எல்லாம் அறிந்தவனே, விண்ணவர்-தேவர், ஒருங்கு-அடக்கமாக இருந்து, மதியம்-சந்திரனை

2. நம்ப னேநான் முகத்தாய் நாதனே ஞான மூர்த்தி
என்பொனே ஈசா என்றென் றேத்திநான் ஏசற்றென்றும்
பன்பினே திரிந்து நாயேன் பேர்த்தினிப் பிறவா வண்ணம்
அன்பனே ஆல வாயில் அப்பனே அருள்செய் யாயே.

(அ. சொ.) ஏத்தி–போற்றி, ஏசற்று–ஆசைப்பட்டு.

இப்பதிகத்தில் அப்பர் பெருமான் தமக்கு அருள்புரியுமாறு வேண்டிக்கொள்கிறார். இவருக்கு மீண்டும் பிறவி வருதல் கூடாது என்பது அவாவாகும். இதனை "இனிப் பிறவாவண்ணம் அருள் செய்" என்ற வேண்டுகோளால் அறியலாம். இறைவன் தான் மருந்தாய் இருந்து, வல்வினைகளைத் தீர்க்கும் இயல்பினன் என்றும் இப்பதிகத்தால் உணரலாம். அப்பர் பேரறிவு படைத்திருந்தும், தமக்கு இயல்பாக அமைந்த கற்றறிந்து அடங்கலாகிய அருங்குணத்திற்கு ஏற்ப, சாலஞானம், கற்றறிவில்லாத நாயேன் என்றும் கூறிக்கொள்வதைக் காண்க. திருநாவுக்கரசர் சின்னாள் சமண சமயம் சார்ந்திருந்தபோது, இறைவர் எண்ண மின்றி இருந்தமையால், அக்காலத்தை எண்ணி, "பண்டு உனை நினையமாட்டேன்" என்றும் குறிப்பிடுகிறார். இறைவன் திருவடியே புகலிடம் என்பதை "எஞ்சல் இல் புகல் இது" என்றும் அருள் செய்கிறார்; அப்பருக்குத் தொண்டின்மேல் இருக்கும் விருப்பத்தை "வழுவிலாது உன்னை வாழ்த்தி வழிபடும் தொண்டன்" என்றும் "நறுமலர் நீரும் கொண்டு நாள்தொறும் ஏத்தி வாழ்த்திச் செறிவன சித்தம் வைத்துத் திருவடிசேரும் வண்ணம்" என்றும் கூறிய அடிகளால் அறியலாம்.

சிலந்திப் பூச்சி இறைவர் திருமேனிக்குமேல் கூடுகட்டி வாழ்கையில் அக்கூடு தம்மீது வெய்யில்படா திருக்கக் கட்டப்பட்டதாக இறைவர் எண்ணி அதன் மாட்டு அருள்காட்டி அதனை அடுத்த பிறவியில் அரசனாகத் திருவருள் புரிந்தார் என்பதை, "நலந்திகழ் வாயில்

நூலாய் சருகிலைப் பந்தர்செய்த சிலந்தியை அரசு அது ஆள அருளினாய்" என்று குறிப்பிட்டனர். இம்மன்னனே கோச் செங்கட் சோழனாவான். இராவணனுக்கு அருள்செய்தது ஈற்றுப் பாடலில் குறிப்பிட்டது.

## ஆறும் திருமுறை பதிகம் 19

### திருத்தாண்டகம்

1. முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி
முதிரும்சடை முடிமேல் முகிழ்வெண் திங்கள்
வளைத்தானை வல்லசுரர் புரங்கள் மூன்றும்
வார்சிலையா வாசுகி மாநா கோத்துத்
துளைத்தானைச் சுடுகரத்தால் துவள நீறுத்
தூமுத்த வெண்முறுவல் உமையோ டாடித்
திளைத்தானைத் தென்கூடல் திருவால வாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

*(அ. சொ.) முகிழ்—அரும்பும், திங்கள்—சந்திரன், புரங்கள்—கோட்டைகள், வரை—மேருமலையை, சிலையா—வில்லாகக்கொண்டு, வாசுகி—வாசுகி என்னும் பாம்பை, மா—பெரிய, நாணா—கயிறாக, சுடுகரத்தால்—சுடும் அம்பால், துவள—வருந்த நீறு—சாம்பராகப் போகும்படி, தூ—சுத்தமான, முறுவல்—பற்கள், உமை—பார்வதிதேவி.*

2. வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை ஏற்றான் தன்னைச்
சுடர்த்திங்கள் சடையானைத் தொடர்ந்து நின்றஎன்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க்கு என்றும்
சேயானைத் தென்கூடல் திருவால வாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

(அ.சொ.) தூயானை–பரிசுத்தனை, தூ–தூய்மையான, ஏற்றான் – இடபத்தை யுடையவன், திங்கள் – சந்திரன், சேயானை–அப்பாற்பட்டவனை.

இப்பதிகத்தில் மதுரைத் திருவாலவாய்ப் பெருமான் முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய் இருப்பவன் என்பதை ஆணித்தரமாக "மூலத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி" என்ற சீரிய கருத்து அறிவிக்கப்படுகிறது. இறைவர் முப்புரங்களை எரிக்க மேருமலையை வில்லாகவும், வாசுகியாகிய பாம்பை வில்லின் நாணாகவும் கொண்டார்.

இடி இடித்தற்கும் இறைவனே காரணன் என்பதை இப்பதிகம், "கால் திரளாய் மேகத்தின் உள்ளே நின்று கடுங்குரலாய் இடிப்பானை" என்று கூறுகிறது; இறைவன் அடியவர்க்கு எளியவனாயும் பிறர்க்கு அரியவனாயும் இருப்பவன் என்பது "பிறர்க்கு என்றும் அரியான்" என்னும் தொடர் விளக்குகிறது. இறைவர் திருப்பாற்கடலுள் எழுந்த விடத்தை உண்டிலர் எனில் தேவர்கள் அமுதம் பெற இயலாது. ஆகவே அவர்கட்கு அமுதம் ஈந்த கருணை இறைவர்பால் இருந்தமையின், "அமரர்களுக்கு அமுது ஈந்தானை" என்ற அருளிப் பாட்டை அறிவித்தனர். அப்பர் இதனை நன்கு விளக்கி, "விண்ணோர் நடுங்கக் கண்டு விரி கடலின் நஞ்சு உண்டு அமுதம் ஈந்த தேவனை" என்றும் அறிவித்துள்ளார். இறைவன் திருவடிப் பற்றைத் தவிர்த்து வேறு பற்று அற்றவர் அடியார் என்பது "மற்று ஒருபற்று இல்லா அடியார்" என்னும் அடியால் புலனாகின்றது. இறைவன் அன்பர்களின் கருத்தறிந்து அக்கருத்தை முற்றுப்பெற வைப்பவன் என்ற அவனது கருணைத்திறத்தையும் அப்பர் போற்றினர்; இவன் கருணையின் திறத்தை மேலும் வற்புறுத்த "எல்லார்க்கும் அருள் செய்வானை" என்ற தொடராலும் குறிப்பிட்டனர். அப்பருக்கும் அரனார்க்கும்

இருந்த நட்புரிமை "அடியேனுக்கு அன்பன் தன்னை" என்று அப்பரே குறிப்பிடுவதால் அறியலாம்.

இப்பதிகத்தில் திருப்பழனத்தலமும் குறிக்கப்பட்டுள்ளது. அத்தலம், அலங்காரம் நிலவும் சோலைகளையுடையது என்றும் சுட்டப்பட்டுள்ளது. இறைவன் கங்கையை மறைத்து உமையோடு திளைக்கிறார் என்பதை நகைச்சுவை அமைய, "கங்கையாளைக் கரந்து உமையோடு உடனாகி இருந்தான் தன்னை" என்று கூறி விளக்குகிறார். "இறைவியின் வடிவம் எழுத ஒண்ணு வடிவம் என்பது" "படி எழுதலாகாத மங்கை" என்பதால் விளங்குகிறது; துறந்தார்க்குத்தூ நெறியாய் இருப்பவன் இறைவனே என்பதையும் ஈண்டே அறியலாம்.

## 2. திருவாப்பனூர்

இது பாண்டிய நாட்டுப் பாடல் பெற்ற தலங்களுள் இரண்டாவது. இக்காலத்தில் இது திரு ஆப்புடையார் கோயில் எனக் கூறப்படுகிறது. இத்தலத்துப் பெருமான் சோழாந்தகன் என்னும் பாண்டியன் மீது வைத்த அன்பின் காரணத்தால் ஆப்பில் தோன்றிக் காட்சி அளித்தனர். இதனால் இறைவர் திருவாப்புடையார் எனப்பட்டார். ஈண்டு நடராஜர் சிவகாமி அம்மையார் திருவுருவங்கள் செம்பினாலும், கல்லாலும் செய்து அமைக்கப்பட்டிருப்பது கண்டு இன்புறுதற்குரியவை ஆகும்

ஈண்டுள ஈசர் ஆப்பனூர்க் காரணர் என்றும் ஆப்பனூரீசுரர் என்றும், திருவாப்புடையார் என்றும், இறைவியார் அம்பிகை அம்மையார், குரவங்கமழ் குழல் அம்மையார் என்றும் கூறப்படுவர். ஈண்டு உள்ள தீர்த்தம் இடப தீர்த்தமாகும்.

1. இத்தலம் மதுரை ரயில்வே ஸ்டேஷனுக்கு வடகிழக்கே ஒரு மைல் தொலைவில் வைகை ஆற்றுக்கு வடகரையில் அமைந்துள்ளது. இத்தலத்திற்குத் திருஞான சம்பந்தர் பாடிய பதிகம் ஒன்றே உளது.

## முதல் திருமுறை பதிகம் 88

பெண்-குறிஞ்சி

1. முற்றும் சடைமுடிமேல் முதிரா இளம்பிறையன்
ஒற்றைப் படஅரவம் அதுகொண் டரைக்கணிந்தான்
செற்றமில் சீரானைத் திருவாப்பன் ஊரானைப்
பற்றும் மனமுடையார் வினைபற் றறுப்பாரே.

(அ. சொ.) அரைக்கு-இடுப்பில், செற்றம்-கோபம் வினை–தீவினைகளை.

2. அந்தண புனல்வைகை அணிஆப்பன் ஊர்மேய
சந்த மலர்க்கொன்றை சடைமேல் உடையானை
நந்தி அடிபரவும் நல்ஞான சம்பந்தன்
சந்தம் இவைவல்லார் தடுமாற் றறுப்பாரே.

அந்தண்புனல்-அழகும் குளிர்மையும் உடைய நீர், அணி-அழகு, சந்தமலர்-அழகிய மலர், நந்தி-சிவபெருமான், பரவும்-போற்றும், சந்தம் - சந்தத்தோடு கூடிய இப் பதிகம்.

இப்பதிகம், யார் திருவாப்பனூர் பெருமானை வணங்கு கின்றார்களோ பாடுகின்றார்களோ அவர்கள் தம்மைப் பற்றும் வினையை அறுப்பார் என்பதை அழகுறத் தெரி விக்கின்றது. "பற்றும் மனம் உடையார் வினைபற்றறுப் பாரே" "பணியும் மனம் உடையார் வினைபற்றறுப்பாரே" "பகரும் மனம் உடையார் வினைப்பற்றறுப்பாரே" "பாடும் மனம் உடையார் வினைபற்றறுப்பாரே" "பயிலும் மனம் உடையார் வினைபற்றறுப்பாரே" "பருக்கும் (பருகும்) மனம் உடையார் வினைபற்றறுப்பாரே" "பண்ணின் இசை பகர்வார் வினைபற்றறுப்பாரே" "பைய நினைந்தெழுவார் வினைபற்றறுப்பாரே" என்று வினைப்பற்றை அறுக்க ஆளுடைய பிள்ளையார் அறிவுறுத்திய வழிகளை அறிந்து பயனுறுவோமாக.

இப்பதிகத்தில் இறைவன் அகரமுதலான எழுத்துக்களாக உள்ளான் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. இது "அகரமுதல எழுத்தெல்லாம்" என்னும் குறட் கருத்துக்கேற்பப் பாடப்பட்டதாகும்.

திருவாப்பனூர் வைகைக் கரையில் உள்ளது என்பதை ஈற்றுப்பாடல் தெற்றத் தெளிய "அந்தண் புனல் வைகை அணி ஆப்பனூர்" என்று கூறி அறிவிக்கின்றது. திருவாப்பனூர் அழகிய தலமாதலின் "அணி ஆப்பனூர்" என்று சிறப்பிக்கப்பட்டது. இப்பதிகத்தைப் பாடுபவர், தடுமாறும் நிலையைப் போக்கிக் கொள்வர் என்பதும் கூறப்பட்டுள்ளது.

## 3. திருப்பரங்குன்றம்

இது பண்டைய நாட்டுப் பாடல்பெற்ற தலங்களுள் மூன்றாவது. முருகன் இறைவனை வழிபட்ட தலம். இத்தலம் முருகப் பெருமானுக்குரிய ஆறுபடை வீடுகளுள் ஒன்றாகவும் விளங்கும் பெருமை வாய்ந்தது. இதனை நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படை மூலம் அறியலாம். இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தரும், சுந்தரரும் பாடிய பதிகங்கள் இரண்டு உண்டு. முருகப் பெருமான் தெய்வயானையை மணந்த இடம் இதுவே. அதுபோது இறைவரும் இறைவியாரும் அவர்க்குக் காட்சிதந்த தலம். சுந்தரர் தம் காலத்தில் இருந்த மூவேந்தர்களாகிய சேரசோழ பாண்டிய மன்னர்களுடன் சென்று தரிசித்துத் தொண்டு செய்த க்ஷேத்திரம். இதனை "முடியாமல் உலகாண்ட மூவேந்தர் முன்னே மொழிந்த ஆறும் ஓர் நான்கும் ஓர் ஒன்றும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இத்தலம் மலையில் குடையப்பட்டிருக்கிறது. இத்தலத்தின் மலைக் குகையில் தான் நக்கீரர் பூதத்தால் அடைக்கப்பட்டனர் என்றும், அதுபோது திருமுருகாற்றுப் படை

யினைப்பாடி முருகன் திருவருளால் அக் குகையினின்றும் வெளிவந்தார் என்றும் கூறப்படுதலும் உண்டு. மலையை வலம் வரலாம். மலைமேல் ஒரு சிறு குளம் உளது. அதனைக் காசித்தீர்த்தம் என்பர். அதில் பல நிறமுடைய மீன்கள் உள்ளன. மலைமீது ஒரு சிறு மசூதியும் உண்டு. கீழ்க் கோயிலில் உள்ள தீர்த்தம் சரவணப்பொய்கை எனப்படும். இறைவர் திருப்பெயர் பரங்கிரிநாதர். இறைவியார் திருப் பெயர் ஆவுடையநாயகி.

இக் கோயிலின் முன் மண்டபத்தில் உள்ள தெய்வ யானையின் திருமணக்கோலப் பொலிவு கண்டு இன்புறத் தக்கது. பரங்கிரி மலைக்குத் தெற்கில் உமையாண்டாள் கோயில் என்னும் பெயரில் ஓர் ஆலயம் உண்டு.

திருப்பரங்குன்றம் மதுரைக்குத் தென் மேற்கில் நான்கு கல் தொலைவில் உள்ளது. பஸ்வசதியுண்டு. ரயில்வே ஸ்டேஷனும் உண்டு. அங்கிருந்து கிழக்கே கால் மைல் தொலைவு நடந்தால், இத்தலத்தை அடையலாம்.

## முதல் திருமுறை பதிகம் 100

### பண் குறிஞ்சி

1. நீடலர் சோதி வெண்பிறையோடு நிரைகொன்றை
சூடலன் அந்திச் சுடர்எரி ஏந்திச் சுடுகானில்
ஆடலன் அம்சொல் அணிஇழை யாளை ஒருபாகம்
பாடலன் மேய நன்னகர் போலும் பரங்குன்றே.

(அ. சொ.) நிரை-வரிசையாக; ஒழுங்காக, சூடலன்-சூடிக்கொண்டிருப்பவன்; ஆடலன்-ஆடுபவன், அம், அணி அழகிய, இழையாள்—ஆபரணம் அணிந்த பார்வதி; பாடலன்-பாடுபவன்.

2. மைத்தகு மேனி வாளரக் கன்தன் மகுடங்கள்
பத்தினை திண்தோள் இருபதும் செற்றான் பரங்குன்றைச்
சித்தம் தோன்றிச் செய்கழல் உன்னிச் சிவன்என்று
நித்தலும் ஏத்தத் தொல்வினை நம்மேல் நில்லாவே.

(அ. சொ.) மைத்தகுமேனி வாள் அரக்கன்-கருமை யான உடம்பினைப் பெற்ற இராவணன், அரக்கன்-ராட்சதன், மகுடங்கள்-முடிகள், செற்றான்-அழுத்தியவன், கழல்-திருவடி, உன்னி-எண்ணி. ஏத்த-போற்ற, தொல்-பழைய, வினை-துன்பம் தருகின்ற.

3. தடமலி பொய்கைச் சண்பைமன் ஞான சம்பந்தன்
படமலி நாகம் அரைக்கசைத் தான்தன் பரங்குன்றைத்
தொடைமலி பாடல் பத்தும் வல்லார்தம் துயர்போக்கி
விடம்மலி கண்டன் அருள்பெறும் தன்மை மிக்கோரே.

(அ. சொ.) தடம்மலி-பரப்பு மிகுந்த, சண்பைமன்-சீர்காழித்தலைவர், தொடை-எதுகைத் தொடை மோனைத் தொடைமுதலிய யாப்புக்குரிய தொடைகள், மலி-நிறைந்த. கண்டன்-கழுத்தையுடையவனே.

இப் பரங்குன்றை யார் எண்ணித் தொழுகின்றார்களோ அவர்கட்கு நோய் அணுகாது. 'சிவன் என்று தினமும் கூறுபவர்க்குத் தொல்வினை இல்லை' என்ற குறிப்புக்களை "உன்னிய சிந்தை உடையவர்க்கு இல்லை உறு நோயே" "சிவன் என்று நித்தலும் ஏத்தத் தொல்வினை நம்மேல் நில்லாவே" "தொண்டால் ஏத்தத் தொல்வினை நம்மேல் நில்லாவே" என்ற அடிகளில் காணலாம்.

இப்பதிக ஈற்றுப் பாடலால் திருஞான சம்பந்தர் சீர்காழியில் தலைசிறந்து விளங்கியவர் என்பதும் அப்பதி குளங்கள் நிறைந்தது என்பதும், இப்பதிகம் யாப்புக்குரிய தொடைகள் பல அமைந்தது என்பதும், இப்பதிகப் பாடல்களைப் பாடுபவர் துன்பம் தீர்ந்து திருநீலகண்ட மூர்த்தியின் திருவருள் பெறும் தன்மை மிக்கவர் ஆவர் என்பதும் அறியக்கிடக்கின்றன.

## ஏழாம் திருமுறை பதிகம் 2

### பண் இந்தளம்

1. **கோத்திட்டையும் கோவலுங்கோ காயில் கொண்டீர்**
**உமைக் கொண்டுழல் கின்றதோர் கொல்லைச்சில்லைச்**
**சேத்திட் டுக்குத்தித் தெருவே திரியும்**
**சில்பூதமும் நீரும் திசைதி சையன**
**சோத்திட்டு விண்ணோர் பலரும் தொழநும்**
**அரைக்கோ வணத்தொ டொருதோல் புடை சூழ்ந்து**
**ஆர்த்திட்ட தும்பாம் புகைக்கொண் டதும்பாம்**
**படிகேள்உமக் காட்செய அஞ்சுதுமே.**

*(அ. சொ.) கோத்திட்டை என்பது திருப்பரங்குன் றத்தலமாக இருக்கலாம் என்று யூகிக்கப்படுகிறது. கோவல்-திருக்கோவலூர், கொல்லை-முல்லை நிலம், இல்-சிறிய, ஐ-அழகிய, சே-இரஷபம், திட்டு-மண்மேடு, சோத் திட்டு-தோத்திரம் செய்து, விண்ணோர்-தேவர், புடை-பக்கம், ஆர்த்திட்டது - கட்டியிருப்பது, அடிகேள் - இறைவரே.*

2. **அடிகேள் உமக்காட் செயஅஞ் சுதும்என்**
**றமரர் பெருமானை ஆரூரன் அஞ்சி**
**முடியால் உலகாண்ட மூவேந்தர் முன்னே**
**மொழிந்தாறும் ஓர்நான்கும் ஓர்ஒன் றினையும்**
**படியா இவைகற்று வல்ல அடியார்**
**பரங்குன்றம் மேய பரமன் அடிக்கே**
**குடியாகி வானோர்க்கும் ஓர்கோவும் ஆகிக்**
**குலவேந்த ராய்விண் முழுதாள் பவரே.**

*(அ. சொ.) அமரர், வானோர் - தேவர், மூவேந்தர் - சேர, சோழ, பாண்டியர், ஆறும். ஓர் நான்கும், ஓர் ஒன் றும்-பதினொரு பாடல்கள், படியா-படித்து, கோ-தலைவர், குலவேந்தர்-சிறந்த மன்னர், விண்-தேவலோகம்.*

இப்பதிகம் சுந்தரரால் திருப்பரங்குன்றத்தின் மீது பாடப்பட்டது என்பதற்கு ஏற்ற குறிப்புப் பாடல்தோறும் இல்லை என்றாலும் இப்பதிக ஈற்றுப் பாடலில், "பரங் குன்றம் மேய பரமன்'' என்று குறிப்புக் காணப்படுதல் கொண்டு, இது திருப்பரங்குன்றத்தில் பாடப்பட்டது என்பதை அறிந்துகொள்ளலாம். இத்துடன் இப்பதி கத்தின் தொடக்கப்பாடல் கோத்திட்டையும் என்று தொடங்கப் பெறுதலினால், கோத்திட்டை என்பது திருப்பரங்குன்றத்திற்குரிய பெயர்களுள் ஒன்றாக இருக்கக் கூடும் என்பதும் ஊகிக்கப்படுகிறது. ஈற்றுப் பாடலால் இப்பதிகமானது மூவேந்தர் முன் இவ்வாலயத்தில் பாடப் பட்டதாகும் என்பதும் வலியுறுத்தப்படுகிறது. அப்போது உடன் இருந்த சேரமன்னர் சேரமான் பெருமாள் நாயனார் ஆவர். ஆனால், சோழர் யாவர், பாண்டியர் யாவர் என் பதனை அறிந்து கொள்ளுதற்கு இல்லை; மேலும் இவ் வீற்றுப் பாடலால் இப்பதிகத்தில் அடங்கிய பதினொரு பாடல்களையும் படித்துக் கற்று வல்லவர் அடியவர்களாவர் என்பதும், திருப்பரங்குன்றப் பரமன் திருவடிக்கே குடியாகும் பேறுபெறுவர் என்பதும், தேவர்கட்குத் தலைவர் ஆவர் என்பதும், சிறந்த மன்னராகும் பேறுபெற்றுத் தேவலோகம் முழுமையையும் ஆளும் வாய்ப்பினையும் பெறுவர் என்பதும் அறியக் கிடக்கின்றன.

சுந்தரர் இறைவர்க்கு நெருங்கிய தோழர் ஆவர். அத்தோழமை உரிமை இருப்பதனால் இறைவரோடு தோழ மைப் பேச்சில் "இறைவ! உனக்கு அடிமை செய்ய அஞ்சு கின்றோம், அஞ்சுதற்குரிய குறிகள் உம்மிடம் உள்ளன'' என்று ஏளனம் செய்வது போலப் பாடப்பட்டிருக்கும் கருத்தை உன்னி உன்னி நாம் இன்பம் அடையவேண்டியவ ராவோம். இப்பாடலில் நகைச்சுவைக் குரிய குறிப்புக்கள் நிரம்பி இருக்கின்றன.

அஞ்சுதற்குரியனவாகச் சுந்தரர் இப்பதிகத்தில் குறிப்பிடுவன, "மேடுகளைக் குத்தித் தெருவே திரியும் எருது உம்பால் உள்ளன. பூதகணம் உம்பால் உண்டு. நீரும் தோலைக் கட்டிக்கொண்டுள்ளீர், பாம்பினைக் கையிலும், கண்டத்திலும், தோளிலும் கட்டியுள்ளீர், விஷம் உண்டுள்ளீர், புலால் நாற்றம் வீசும் வெண்டலை உம்மிடம் உண்டு, பூத பைசாசங்கள் உம்மைச் சூழ்ந்துள்ளன; எந்த நேரமும் உம் மனையாளுடன், இணைந்து அவளை விட்டுப்பிரியாது இருக்கின்றீர். உம் பாம்புக்குப் படம் ஐந்து உண்டு. சுடு காட்டில் நடமாடும் இயல்பினீர்" என்பன போன்றவைகள்,

தோழமை காரணமாகப் பேசும் உரிமை சுந்தரர் பெற்றிருந்தார் என்பதை "பிண்டம் சுமந்து உம்மொடும் கூடமாட்டோம்" "பஞ்சுண்ட அல்குல் பணை மென் முலையாளொடு நீரும் ஒன்றாய் இருத்தல் ஒழியீர்" "எல்லாம் அறிவீர் இதுவே அறியீர் என்று இரங்குவேன்" "கண்ணும் மூன்று உடையீர்," கண்ணே இருந்தால் அங்கத்து உறுநோய்களைந்து ஆளகில்லீர்" "உம் செய்கை எல்லாம் ஆரொடும்கூடா; அடிகேள் இது ஏன்?" என்பன போன்ற அடிகளால் காணலாம்.

இறைவர் எல்லாமாய் இருப்பவர் என்ற உண்மையினை, "பாரொடு விண்ணும் பகலும் ஆகிப் பனிமால் வரையாகிப் பரவையாகி, நீரொடு தீயும் நெடுங்காற்றும் ஆகி நெடு வெள்ளிடையாகி நிலனும் ஆகி" என்ற அடிகளில் காண்க.

இத் திருப்பதிகத்தில் திருக்கோவலூர், கடம்பூர்க்கரக் கோயில், திருவொற்றியூர், அண்ணாமலை, ஆரூர் முதலிய திருத்தலங்கள் இணைத்துப் பாடப்பட்டுள்ளன. திருவொற்றியூரில் படம்பக்கம் என்னும் பறை கொட்டப் படுதல் சிறப்புப்பற்றிப் படம்பக்கம் கொட்டும் திருஒற்றியூர் என்று அடைகொடுத்துப் பாடப்பட்டுள்ளது. இதனால்

இறைவன் படம்பக்க நாதர் என்ற திருப்பெயரையும் தாங்கியுள்ளார்.

இப்பதிகத்தால் சுந்தரர் ஏதோ உடல் நோயால் சிறிது துன்புற்றிருந்ததாகவும், அது தீரும் பொருட்டு இறைவரை வேண்டி வந்ததாகவும் தமக்குச் சோறும் கூறையும் தேவையாக இருந்தன என்பதும் போன்ற குறிப்புக்கள் காணக் கிடக்கின்றன. அருளே திருமேனியாக உடைய உமையம்மையை உடன் வைத்திருந்தும் உதவி புரிந்திலீரே என்று இடித்து உரைப்பார் போல, "அதுவே அன்றியும் வேப்புரையும் தோளான் உமை நங்கை ஓர் பங்கு உடையீர் உடுகூறையும் சோறும் தந்து ஆளகில்லீர்; (ஆனல்) ஆள் ஆளியவே கற்றீர்" என்று அடிகளில் சுட்டிக்காட்டி இறைவருடன் சுந்தரர் ஏச்சு மொழி இசைக்கின்ற அழகையும் இப்பதிகத்தில் நன்கு காணலாம்.

இப்பதிகத்தைப் பன்முறை படிக்கப் படிக்கத்தான் இதனை அடங்கிய இலக்கியச் சுவையும் இன்பச் சுவையும் இனிதின் நுகர ஏதுவாகும். "பெரியாரோடு நட்பு இனிது" என்னும் தொடர் என்றும் நம் மனத்தில் இருத்தற்குரியதாகும். 'பெரியாரைத் துணைக்கோடல், என்றும் திருக்குறட்பாக்கள் பத்தின் பொருளும் இதில் அடங்கி இருக்கிறது.

## 4. திருவேடகம்

பாண்டிய நாட்டுத் தலங்களில் இது நான்காவது. திருஞானசம்பந்தர் சமணர்களோடு செய்த வாதங்களில் புனல்வாதமும் ஒன்று. இந்த வாதத்தின்போது, சம்பந்தர் "வாழ்க அந்தணர்" என்னும் பதிகம் பாடி அதனை ஏட்டில் எழுதி வைகையில் இட்டனர். இவ்வாறே சமணர்கள் தம் சமயப் பெருமையினை எழுதி வைகையில் இட்டனர். சமணர் இட்ட ஏடு ஆற்றுநீர் செல்லும் வழியே சென்று இருக்கும்

இடம் தெரியாமல் மறைந்தது. ஆனால், சம்பந்தர் இட்ட ஏடு வைகை யாற்றினை நீர் ஓட்டத்திற்கு எதிராகச் சென்று, வைகைக் கரையில் தங்கிவிட்டது. இவ்வேடு தங்கிய இடமே ஏடகம் எனப்படும். திரு என்னும் அடைமொழி கொடுக்கப்பட்டுத் திருவேடகம் என்று அழைக்கப்படுவ தாயிற்று. இவ்விடத்தில் ஏடு சென்று தங்கியது என்பது உண்மை என்பதை உணர, இத்தலத்தைப் பற்றித் திரு ஞானசம்பந்தர் தாம் பாடிய பதிகத்தின் ஈற்றுப்பாடலில் "ஏடு சென்றணைதரும் ஏடகத் தொருவனை" என்று குறிப் பிட்டிருப்பதன் மூலம் காணலாம்.

இத்தலத்து இறைவர் ஏடகநாதர். இறைவியார் உமாதேவியார். தீர்த்தம் வைகை நதியே. இத்தலத்திற்கு உரிய பதிகம் ஒன்றே. அது திருஞானசம்பந்தரால் பாடப் பட்டது. இத்தலம் மதுரையினின்று சென்னை நோக்கிச் செல்லும் இருப்புப்பாதை மார்க்கத்தில் உள்ள சோழ வந்தான் என்னும் இரயில்வே ஸ்டேஷனுக்குத் தென் மேற்கே இரண்டரை கல் தொலைவில் வைகை யாற்றங் கரையில் இருக்கிறது.

மதுரை டவுனிலிருந்து பஸ்மூலம் சென்று இத் தலத்தை அடையலாம்.

## மூன்றும் திருமுறை பதிகம் 32

### பண்—கொல்லி

1. வன்னியும் மத்தமும் மதிபொதி சடையினன்
பொன்னியல் திருவடி புதுமலர் அவைகொடு
மன்னிய மறையவர் வழிபட அடியவர்
இன்னிசை பாடலார் ஏடகத் தொருவனே.

(அ. சொ.) வன்னி—ஒருவகை மலர், மத்தம்—ஊமத் தம்பூ, மதி – சந்திரன், பொதி – நிறைந்த, இயல்—தன்மை, மன்னிய—நிலைபெற்ற, மறையவர்—வேதம் உணர்ந்தவர்.

**2. பொய்கையின் பொழிலுறு புதுமலர்த் தென்றலார்**
**வைகையின் வடகரை மருவிய ஏடகத்**
**தையனை அடிபணிந்து அரற்றுமின் அடர்தரும்**
**வெய்யவன் பிணிகெட வீடெளி தாகுமே.**

*(அ. சொ.) பொழில் – சோலை, உறு – பொருந்திய மருவிய–பொருந்திய. அரற்றுமின்–அன்பினால் கதறுங்கள், அடர்தரும்–நெருங்கும், வெய்ய–மிகக்கொடிய, வன்பிணி–வன்மைமிக்க நோய், வீடு – மோட்சம், எளிது – அடைதல் சுலபம்.*

இப்பதிகம் மக்களுக்கு நல்ல உபதேசம் செய்யும் முறையில் அமைந்த குறிப்புக்களைக் கொண்டுள்ளது. உலக மக்களை நோக்கி, "மக்களே, அன்பினால் கதறுங்கள். அப்படிக் கதறினால் இடிபடும் வினைகள் போவதோடு, என்றுமே இல்லாமல் போகும். கொடியதும், நம்மை வந்து அணுகுவதும், வன்மை மிக்கதும் ஆன நோய் கெட்டு மோட்சமும் எளிதாக வந்து கூடும் என்றும், கண்டு கை தொழுதால் கவலை நோய் நீங்கும் என்றும் ஏடகம் சேர்வதே நமக்குப் பெருஞ் செல்வம்" என்றும் இப்பதிகத்தில் குறிப்பிடப்பட்டதைக் காண்க.

"அரற்றுமின் அன்பினால், இடிபடும் வினைகள் போய் இல்லையாகுமே" "கண்டு கை தொழுதலும் கவலை நோய் கழலுமே" "சீலமார் ஏடகம் சேர்தலாம் செல்வமே" "வெய்யவன் பிணி கெட வீடு எளிதாகுமே" என்ற அருந் தொடர்கள் நம் நினைவில் இருத்தற்குரியன.

திருவேடகம் இன்னிசைப் பாடல் நிறைந்த தலம். மறையவர் வழிபடும் தலம். இங்குள்ள மாளிகைகள் உயரமானவை. கொடிகள் கட்டப்பட்டு இவற்றின் உச்சி உயர்ந்திருந்தமையால் சந்திரனும் வந்து தங்கும் அளவுக்கு இருந்தன. இத்தலத்தில் குருக்கத்தி, சந்தனமரம், சண்பகம் முதலான மரங்கள், மிகுதியாக உண்டு. ஒழுக்கம்

நிறைந்தவர் வாழும் தலமாகும். பொய்கைகளும் சோலைகளும் நிறைந்த புதுமலர்களைப் பெற்றுத் தென்றல் காற்று உலவப்பெற்று வைகையாற்றங் கரையின் வடக்கில் அமைந்த பதியாகும். வைகையாறு பொன், மணி, சந்தனம், அகில், யானைத் தந்தம் முதலான பொருள்களை அடித்துக் கொண்டு கரையை மோதும் அலைகளையுடையது என்பன போன்ற குறிப்புக்கள் இப்பதிகத்தால் புலனாகின்றன.

சமணர்கள் கையில் கமண்டலம் உடையவர்கள், தம் வயிற்றை வளர்ப்பதில் பெருநோக்கம் உடையவர். பணியாதவர் என்றும், பௌத்தர்கள் குணமில்லாதவர்கள் என்றும் இப்பதிகத்தால் அறிகிறோம்.

இப்பதிகத்தில் உள்ள பாடல்கள் பத்தையும் பாட வல்லவர்களுக்குப் பாவம் இல்லை. இப்பதிகம் திருஞான சம்பந்தரது வாழ்க்கை வரலாற்று உண்மைக்கு அகச்சான்றாய் நின்று துணைபுரியும் பதிகமாகும்.

திருஞானசம்பந்தர் புனல்வாதம் செய்தபோது, ஏடு சென்று தங்கிய குறிப்பினை "ஏடு சென்றணை தரும் ஏடகம்" என்று இப்பதிகத் திருக்கடைக் காப்புக் குறிப்பிடுகின்றதன்றோ?

ஒன்பதாவது பாடலில் "பண்டியைப் பெருக்கிடும் பளகர்கள்" என்று கூறியதைப் படிக்க நமக்கு நகைச்சுவை தோன்றுகிறது. பண்டி-வயிறு, பளகர்-மூடர்.

## 5. திருக்கொடுங்குன்றம்

இத்தலம் சிவபெருமானுக்குரிய தல மாதலோடு முருகப்பெருமானுக்கும் உரிய தலமுமாகும். இது பிரான் மலை என்றும் பிரான்மலைச் சீமை என்றும் கூறப்படும். இத்தலம் மலையடிவாரத்தில் உள்ளது.

இத்தலத்தை மகோதர மகரிஷியும் நாகராஜனும் வழி பட்டுத் திருவருள் பெற்றனர். மலைமீதுசென்றால் வைரவர் சந்நிதியைக் கண்டு தரிசிக்கலாம். சுவாமி சந்நிதியில் உள்ள திருக்கல்யாணக் கோலக்காட்சி கண்டு களித்தற் குரியதாகும். இத்தலத்தில் கார்த்திகைத் தீபதரிசனம் விசேடமானது.

இத்தலத்தில் தேவ சபாமண்டபம், சுந்தர பாண்டியன் மண்டபம், ஆறுகால் மண்டபம், லட்சுமிமண்டபம், விசுவ நாதர் கோயில், சுப்பிரமணியர் கோயில் முதலியன காணத் தக்கவை. கிராமத்தில் சொக்கநாதர் கோயில் இருக்கிறது.

இத்தலத்து இறைவர் கொடுங்குன்றீசர் என்றும், இறைவியார் குயிலமுத நாயகி என்றும், கூறப்படுவர். தேவாரத்தில் இவ்வம்மையார் தேனிற்பொலி மொழியாள் என்று குறிப்பிடப்படுகின்றார்.

இத்தலம் இராமநாதபுரம் ஜில்லா சிவகங்கைக்கு 22 மைல் தூரத்தில் உள்ள திருப்பத்தூரை அடைந்து அங் கிருந்து வடமேற்கு 15 மைலில் உள்ளது. திருப்பத்தூர் அறந்தாங்கி ஸ்டேஷனிலிருந்து 27 மைலில் உள்ளது. இத் தலத்திற்குத் திருஞானசம்பந்தர் பாடிய பதிகம் ஒன்றே உளது.

## முதல் திருமுறை 14-வது பதிகம்

பண் நட்டபாடை

1. வானில்பொலி வெய்தும் மழைமேகம்கிழித் தோடிக்
கூனல்பிறை சேரும்குளிர் சாரல்கொடுங் குன்றம்
ஆனில்பொலி ஐந்தும்அமர்ந் தாடிஉலக மேத்தத்
தேனில்பொலி மொழியாளொடும் மேயான்திரு நகரே.

(அ. சொ.) பொலிவு-விளக்கம், எய்தும்-அடையும். ஆனில்-பசுவில், ஐந்தும்-பால், தயிர், நெய், கோமயம்

கோசலம், ஆடி—திளைத்து, ஏத்த-போற்ற, தேனில் பொலி மொழியாள்-இத் தலத்துத் தேவியார் திருப்பெயர்களுள் ஒன்று.

2. கூனல்பிறை சடைமேல்மிக உடையான் கொடுங்குன்றைக்
கானல்கழு மலமாநகர் தலைவன்நல கவுணி
ஞானத்துயர் சம்பந்தன் நலம்கொள்தமிழ் வல்லார்
ஊனத்தறெடு துயர்தீர்ந்துல கேத்தும்எழி லாரே

(அ. சொ.) கானல்-கடற்கரைச் சோலை, கழுமலம்-சீர்காழிக்குரிய பெயர்களில் ஒன்று, கவுணி-கவுணிய கோத்திரம், ஊனம்-குற்றம், ஏத்தும்-போற்றும், எழிலோர்—அழகர் ஆவார்.

இத்தலத்துப் பதிகம் கொடுங்குன்றின் இயற்கை வளத்தை இனிதின் எடுத்து இயம்புகிறது. கொடுங்குன்றம், மேகத்தைக் கிழித்து ஓடும் பிறைச் சந்திரன் தவழும் இடம். குளிர்ந்த சாரலையுடையது. மயில் தன் பெடையோடு தழுவி இன்புறும் சாரலையுடையது. குயில் இன் இசை பாடும் குளிர்ந்த சாரலையுடையது. இம்மலையில் பாயும் நீர் மணி, பொன், மணமுள்ள மலர்களைக் கரைகளில் கொழித்துக்கொண்டு வரும் தன்மையது. சாரங்களில் யானையும் சிங்கமும் இறங்கு காட்சியும் காணக்கூடியதாகும். அருவிகள் மணியும் பொன்னும் அடித்து இறங்கி வரும் தன்மையது. மேகம் இடிக்கும் இடி ஓசைகேட்டு, கோட்டான்கள் பயந்து மலையினின்றும் இறங்கிச் செல்லும். இவ்வாறே யானைக் கூட்டங்களும் இடியின் குரல் ஓசை கேட்டு மலர்ச் சோலைகளில் நெருங்கும். கடம்பு, மாதவி, முல்லை, குரவம் முதலான மலர்கள் மலர்ந்து எல்லாம் ஒன்று சேர்ந்து மணம் வீசும் சோலைகள் சூழ்ந்த குளிர்ந்த இடமாகும்.

இம் மலைச்சாரலில் திரியும் யானைக் கூட்டங்கள், இங்கு வளர்ந்துள்ள மூங்கில்களை முறித்து எடுத்துக்கொண்டு

சுனைகளில் சென்று படியும். இங்கு சிங்கங்கள் கர்ச்சனை செய்ய அதைக் கேட்டதும் வெளிவர அஞ்சி மலைக்குகை களிலேயே தங்கி இருக்கும். சிற்சில சமயங்களில் சிங்கம் யானை இருக்கும் மலைக்குகைக்கு அருகில் வருதலும் உண்டு. அதுபோது யானை மிகவும் பயந்து தான் இருக்கும். மலைக்குகையினைக் குத்தி வழிகண்டு அப்பாற் செல்ல முயன்றும் வழிகாணாது அக்குகையிலேயே தங்கி இருக்கும்.

"நாகத்தோடு இளவெண் பிறைசூடி", "அரவத்தோடு இளவெண் பிறை விரவும்" என்று கூறிப் பகையுடையவர் களும் பரமனை அடைந்தபோது பகையின்றி ஒன்றி வாழ்வர் என்று விளக்கப்பட்டது. இறைவன் "அம்மான் என உள்கித் தொழுவார்கட்கு அருள்செய்யும் பெம்மான்" என்பதை அறிக. கொடுங்குன்றம் பழநகர் என்ற பெய ருடையது என்பதையும் இப்பதிகத்தால் அறியலாம். பழய நகரே என்ற தொடரைக் காண்க.

திருஞானசம்பந்தர் கௌணிய கோத்திரத்தைச் சார்ந் தவர் என்பதும் ஞானத்தில் உயர்ந்தவர் என்பதும் ஈற்றுப் பாடலால் அறியலாம். இப்பதிகம் நலங்கொள் தமிழ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 'நலம்கொள் என்ற அடைமொழிகளை நினைவு கொள்க. இது நலங்கொள் தமிழ் என்பதனுல்தான் இதனை ஓதவல்லவர் ஊனமும், துயரும் நீங்கப்பெற்று உலகம் போற்றும் எழிலும் பெறுவர் என்க.

## 6. திருப்பத்தூர்

பாண்டியநாட்டுப்பாடல்பெற்ற தலங்களுள் இஃது ஆருவது. இவ்வூரில் உள்ள தேவாலயம் திருத்தளி எனவும் ஸ்ரீ தளி எனவும் கூறப்பெறும். இதனை அப்பர் தம் திருத்தாண்டகத்தில் பாடல்தோறும் திருப்பத்தூரில் "திருத்தளியான்" என்று சுட்டிக்கொண்டு வருவதால் அறியலாம்.

இத்தலத்தில் அம்மையப்பரை வழிபடுவதோடு, இருவிருவர்க்கும் இடையில் உள்ள பைரவர் சந்நிதியையும் கண்டு தரிசிக்கலாம். இவ்வைரவர் இங்கு சிறப்பு மிகுதியும் பெற்றவர். ஆனந்தக் கூத்தப்பெருமான், சிவகாமி அம்மையார் திருவுருவங்கள் கற்சிலையால் ஆனவை. பார்க்கப் பார்க்கப் பரவசம் ஊட்டுபவை. இங்கு விஷ்ணுவுக்கும் தனிக்கோயில் உண்டு.

இத்தலத்து இறைவரை உமாதேவியாரும், இலக்குமியும் பூசித்துப் பேறுபெற்றனர். இறைவர் புத்தூர் ஈசர் ஸ்ரீதளிநாதர், இறைவியார் சிவகாமி அம்மையார்; தீர்த்தம் ஸ்ரீதளித் தீர்த்தம், சிவகெங்கை, கருடதீர்த்தம்; தல விருட்சம் கொன்றை.

இத்தலத்தைத் திருஞானசம்பந்தரும் அப்பரும் பாடியுள்ளனர். இத்தலம் இராமநாதபுரம் சிவகங்கையிலிருந்து, 22 கல் தொலைவில் உள்ளது.

## முதல் திருமுறை பதிகம் 26

பண் தக்கராகம்

1. **வெங்கள் விம்மு வெறியார் பொழில்சோலை**
**திங்க ளோடு திளைக்கும் திருப்புத்தூர்க்**
**கங்கை தங்கும் முடியார் அவர்போலும்**
**எங்கள் உச்சி உறையும் இறையாரே**

(அ. சொ.) வெங்கள்-விரும்பத்தக்கதேன், விம்மு-நிறையும், வெறி-வாசனை, ஆர்-பொருந்திய, பொழில்-சோலை திங்கள்-சந்திரன், திளைக்கும்-விளங்கும், உறையும்-வாழும்.

2. **மருவி எங்கும் வளரும் மடமஞ்ஞை**
**தெருவு தோறும் திளைக்கும் திருப்புத்தூர்ப்**
**பெருகி வாழும் பெருமான் அவன் போலும்**
**பிரமன் மாலும் அறியாப் பெரியோனே**

(அ. சொ.) மருவி கலந்து, மடமஞ்ஞை-இளைய மயில்கள்.

3. நல்ல கேள்வி ஞான சம்பந்தன்
செல்வர் சேடர் உறையும் திருப்புத்தூர்ச்
சொல்லல் பாடல் வல்லார் தமக்கென்றும்
அல்லல் தீரும் அவலம் அடையாவே

(அ. சொ.) சேடர்—பெருமையுடைய பெருமானார். உறையும்-வாழும், அல்லல்-துன்பம், அவலம்-வறுமை.

திருப்பத்தூரும் சோலைகளையுடையது. அச்சோலைகள் தேனும், மணமும் நிறைந்தவை. அச்சோலை சந்திரன் திளைக்கும் தன்மையது. இங்கு வண்டுகள் நிறைந்து ஒலித்துக் கொண்டும் பாடிக்கொண்டும் இருக்கும். இவ் வண்டுகள் மலர்ந்த மலர்களில் உள்ள தேனைப் பருகித் திளைத்துக்கொண்டிருக்கும்.

இத்திருப்பத்தூர்ப்பதி புகழுடையது. அழகும் உடையது. திசைகள் எங்கும் விளங்கும் சோலைகளையும் உடையது. இங்கு நீர்வளம் மிகுதி. இங்குள்ள தெளிந்த நீரில் வெண்ணிற மலர்கள், மணமுடைய மலர்கள் நிறைந்து இருக்கும். நெய்தல், ஆம்பல், கழுநீர் முதலான மலர்கள் மலர்ந்து காணப்படும். நிலவளத்திற்கும் குறைவில்லை. "செய்கள் மல்கு திருப்பத்தூர்" என்றே சிறப்பிக்கப்பட்ட பெருமை நிறைந்தது. இத்தலத்தின் சோலைமீது படரும் மேகங்கள் அச்சோலை மலர்களின் மணம் படிந்து மண முடையனவாகத் திகழ்ந்து கொண்டிருக்கும். இளைய மயில்கள் தெருவுதோறும் திரிந்து கொண்டிருக்கும் என்பன இத்தேவாரப் பதிகத்தால் திருப்புத்தூரைப் பற்றி நாம் அறிந்துகொள்வன.

"எங்கள் உச்சி உறையும் இறையார்," "பிரமன்மாலும் அறியாப் பெரியோன்", "அல்லல் தீரும் அவலம் அடையா" என்பன இப்பதிகத்தில் காணப்படும் அரும்பொருள் தொடர்கள்.

இத்தலத்துக் கோயில் நாளும் நாளும் சிறப்புறும் கோயில் ஆதலின், இதனை "ஓங்கு கோயில்" என்றனர். இங்குள்ள இறைவர் செல்வரும் சேடரும் ஆவர். இத்தலத்துப் பதிகத்தைப் பாடவல்லவர் அல்லலும், வறுமையும் நீங்கப் பெறுவர் என்பது நல்ல கேள்வி ஞானமுடைய ஞானசம்பந்தர் துணிபாகும்.

## ஆறும் திருமுறை பதிகம் 76

### திருத்தாண்டகம்

1. புரிந்தமரர் தொழுதேத்தும் புகழ்தக் கோன்காண்
போர்விடையின் பாகன்காண் புவனம் ஏழும்
விரிந்துபல உயிராகி விளங்கி னன்காண்
விரைக்கொன்றைக் கண்ணியன்காண் வேதம் நான்கும்
தெரிந்துமுதல் படைத்தோனைச் சிரம்கொண் டோன்காண்
தீர்த்தன்காண் திருமால்ஓர் பங்கத் தான்காண்
திருந்துவயல் புடைதழுவும் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண் அவன்என் சிந்தை யானே

*(அ. சொ.) புரிந்து—விரும்பி, அமரர்—தேவர், ஏத்தும்—போற்றும், விடை-இடபம், புவனம்-உலகம், புவனம் ஏழ்-பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், சனலோகம், தபோலோகம், மகரலோகம், சத்தியலோகம் என்பன. விரை-வாசனை, கண்ணியன்—மாலையுடையவன், படைத்தோன்—பிரமன், தீர்த்தன்-மகாபரிசுத்தன், புடை—பக்கம், திருத்தளி—திருப்புத்தூர்த் திருக்கோயில் திருப்பெயர்.*

2. மின்காட்டும் கொடிமருங்குல் உமையாட் கென்றும்
விருப்பவன்காண் பொருப்புவலிச் சிலக்கை யான்காண்
நன்பாட்டுப் புலவனுய்ச் சங்கம் ஏறி
நற்கனகக் கிழிதருமிக் கருளி னன்காண்

பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கே நின்ற
புனக்காந்தள் கைகாட்டக் கண்டு வண்டு
தென்காட்டும் செழும்புறவில் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவன்என் சிந்தை யானே

(அ. சொ.) மருங்குல்-இடை, பொருப்பு—மலை, சிலை-வில், கனகக்கிழி-பொன்முடிப்பு, தருமி-தருமி என்னும் அந்தணச் சிறுவன், கடி-வாசனை, மருங்கே-பக்கத்தே, புனம்—மலையைச் சார்ந்த கொல்லைகள், தென்—இசை, புறவு—காடு.

திருப்புத்தூர் வளங்கள் அழகாக அப்பர் பெருமானால் இத்தாண்டகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இத்தலம் முழுதும் நல்ல திருத்தமான வயல்களைப் பெற்றது. இவ்வூரில் உள்ள வீதிகள் நீண்டு, தேர் சென்று மீளும் பெருமை மிக்கன. "தேராரும் நெடுவீதி" என்று கூறப்பட்டுள்ளது. கொன்றை மலர்கள் நன்கு மலர்ந்து பொன் போலப் பூத்திருந்தன. மலராகிய பொன்னைக் கைநீட்டி வாங்கிக்கொள்வது போலக் காந்தள் மலர்கள் கைகள் போல மலர்ந்து இருந்தன. நல்ல காட்டு வளம் பெற்று வண்டுகள் இசை செய்தவண்ணம் இருந்த இவ்வூரில், நல்ல வளமான எருமைகள் அழகுடன் மடுக்களில் படிந்து இன்புறும்; அழகு பொருந்திய சோலைகள் பக்கங்களில் மிக்குக் காணப்படும். எருதுகளின் உழைப்பை மிகுதியும் கொண்ட வயல்களையுடையது இவ்வூர். அழகிய மாடங்கள் உண்டு. தென்றல் காற்று வீசும் இப்பதி சிறப்புப் பொருந்தியது.

இறைவன் சலந்தராசூரனைக் கொல்லக் கைக்கொண்ட படை சக்கரமாகும். இதனையே திருமால் இறைவனை வழிபட்டுப் பெற்றுக்கொண்டனர்.

இத்திருப்பதிகத்தில் திருமறைக்காடு, திருவேகம்பம், பெரும்பற்ற புலியூர், ஆரூர், கழுக்குன்றம் ஆகிய தலங்களும், இணைத்துப் பாடப்பட்டுள்ளன. திருமறைக்காடு (வேதாரண்யம் என வடமொழியாளரால் மொழி பெயர்த்துக் கொள்ளப்பட்டது) முத்துக்களைச் சங்குகள் வந்து ஈனும் கடற்கரைச் சோலையை வேலியாகச் சூழப் பெற்றது என்றும், ஏகம்பம் (காஞ்சிபுரம்) அழகுடையது என்றும், பூங்கச்சி என்றும் கரும்பும் புன்னையும் நெருங்கிய சோலையுடையது திருவாரூர் என்றும், அருவி விளங்கும் திருக்கழுக்குன்றம் என்றும் மேலே குறிப்பிடப்பட்ட தலங்கள் சிறப்பிக்கப்பட்டுள்ளன.

மதுரையில் அரசாண்ட மன்னர்களில் ஒருவன் வங்கிய சூளாமணிப் பாண்டியன். அவன் தன் மனைவியின் கூந்தலில் உண்டாள மணத்தை நுகர்ந்தான். அது செயற்கையா இயற்கையா என்பதை அறிவிக்கும் புலவர் பெறுமாறு பொற்கிழி ஒன்றைச் சங்க மண்டபத்தில் கட்டிவைத்தான். அதனைப் பெறப் பலரும் முயன்றனர்.

அந்தச் சமயம் தருமி என்பவன் வறுமையால் வாடிக் கொண்டிருந்தான். அவன் வறுமையைத் தீர்க்க மதுரைச் சொக்கலிங்கப் பெருமான் "கொங்கு தேர் வாழ்க்கை" என்று தொடங்கும் ஒரு கவியைப் பாடித் தந்து பாண்டியனிடம் கொடுத்துப் பொற்கிழியைப் பெறுமாறு கட்டளை இட்டார். (இக்கவியினைக் குறுந்தொகை என்னும் சங்க நூலில் காண்க) அப்பாட்டைக் கண்ட பாண்டியன் அதன் பொருள் மூலம் தன் மனைவியின் கூந்தல் மணம், இயற்கை என்று அறிந்து, பண முடிப்பைப் பெற்றுப் போகுமாறு தருமிக்கு உத்தரவு கொடுத்தான். அதனைப் பெறத் தருமி சென்ற போது, சங்கப் புலவர்களுள் தலைவரான நக்கீரர் பாட்டில் பொருள் குற்றம் இருப்பதாகக் கூறித் தருமியைப் பொற்கிழி பெறு வண்ணம் தடுத்துவிட்டார். இந்தச்

செய்தியைத் தருமி சோமசுந்தரரிடம் விண்ணப்பித்துக் கொண்டபோது, இறைவர் புலவர் வேடம் பூண்டு நக்கீரருடன் வாதம் புரியப் புறப்பட்டார். இந்த நிகழ்ச்சியினையே அப்பர் பெருமானார் "நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற்கனகக்கிழி தருமிக்கு அருளினோன்" என்று சிறப்பித்துப் பாடியருளினார்.

## 7. திருப்புனவாயில்

பாண்டிய நாட்டுப் பாடல் பெற்ற தலங்களுள் ஏழாவது தலம் இது. இதனைத் திருஞானசம்பந்தரும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பாடியுள்ளனர். ஆக இதற்குரிய பதிகம் இரண்டு என்க. இது வேதங்களால் பூசிக்கப் பெற்ற தலமாகும். இத்தலத்தில் பாண்டிய நாட்டுப் பாடல் பெற்ற தலங்களின் பதினான்கு மூர்த்திகளையும் ஒருசேரக் கண்டு தரிசிக்கலாம். இத்தலத்து மூல இலிங்கம் மிகப் பெரியது; கோயிலும் பெரியது; நந்தியும் பெரியது. இத்திருமேனியின் இலிங்க வடிவிற்கு மூன்று முழப் பரிவட்டமும், ஆவுடையாளுக்கு முப்பது முழப் பரிவட்டமும் தேவை. இதனால் இந்தத் தலத்தில் "மூன்று முழமும் ஒரு சுற்று, முப்பது முழமும் ஒரு சுற்று" என்னும் ஒரு பழமொழியும் வழங்கப்பட்டு வருகிறது. இத்தலத்தின் பொந்துகளில் ஆந்தைகள் எப்போதும் குடியாக வாழ்ந்துகொண்டிருக்கும். இதனை உற்றுக் கவனித்த சுந்தரர் "பொந்தில் ஆந்தைகள் பாட்டறாப் புனவாயில்" என்றும் பாடியுள்ளார். இது மிகப் பழம் பெருந் தலம் என்பது சுந்தரர் தம் திருவாக்கால் இதனைப் 'பழம்பதி' என்றும், 'விருத்தபுரி' என்றும் குறிப்பிடுவதால் அறிந்து கொள்ளலாம். இத்தலத்து ஊருக்குச் தெற்கே பாம்பாறு (சர்ப்பநதி)ஓடுகிறது. சர்ப்பநதி என வடமொழியாளர் பாம்பாறு என்பதனை மொழி பெயர்த்துக் கொண்டனர் என்பர்.

இத்தலத்து இறைவர் பழம்பதி நாதேஸ்வரர், விருத்த புரீஸ்வரர் எனப்படுவர். தேவியார் பரங்கருணை நாயகியம் மையார் ஆவர். இத்தலத்து விருட்சங்கள் புன்னை, மகிழம். அங்குள்ள தீர்த்தங்கள் இலட்சுமி தீர்த்தம், பிரம்ம தீர்த்தம். இவை கோயிலுக்கு எதிரில் உள்ளன.

இத்தலம் அறந்தாங்கி ரயில் நிலையத்திலிருந்து 21 கல் தொலைவில் இருக்கிறது. திருவாடானைத் தலத்திலிருந்து சென்றால் வடக்கே 12 கல்தொலைவில் இதனை அடையலாம்.

குறிப்பு : அறந்தாங்கி ரயில் நிலையத்திலிருந்து ஏழு கல் கற்சாலை வழியைக் கடந்தால் மாணிக்கவாசகர் கட்டியருளிய திருப்பெருந்துறை என்னும் தலத்தைத் தரிசிக்கலாம். மிகப் பெரிய தலம். சிற்ப ஓவிய வேலைப்பாடுகள் நிறைந்த தலம். திருவாவடுதுறைக் குருமகா சந்நிதானத்தின் திருக்கண் பார்வையால் சிறப்புடன் நித்திய நைமித்தியங்கள் ஒழுங்காக நடைபெற்று வரும் தலம். இன்றும் 21 வது குருமகா சந்நிதானமாக விளங்கும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் இத்தலத்தை வாரம் தவறாமல் வியாழக்கிழமை தோறும் சென்று தரிசித்து வருகின்றனர். இங்கு மாணிக்கவாசகர் சுவாமிகட்கு இறைவர் தங்கியிருந்து உபதேசம் செய்த குருந்த மரத்தையும் கண்டு தரிசிக்கலாம். பராசர், பிருகு முதலியோர் பூசித்த இடம். சுவாமி ஆத்மநாதர்; தேவியார் உமா தேவியார்; தீர்த்தம் சிவகங்கை.

தேவியார் யோகம் புரிகின்றார் என்ற காரணத்தால், நேரே கண்டு தரிசிக்கும் வாய்ப்புக் கிடைக்கப் பெறாமல், ஒரு துவாரத்தின் வழியே தான் தரிசிக்க வேண்டும். இத்தலத்தில் நடக்கும் பிரம்மோற்சவச் சிறப்பு மாணிக்கவாசகருக்கேயாகும். நீர் வளம், நில வளம் சிறந்த தலம், மிகப் பெரிய தலம். இங்கு செல்லப் பஸ் வசதியுண்டு. இங்கு இருந்து திருப்புவனவாயில் 14 கல் தொலைவாகும்.

## மூன்றாம் திருமுறை பதிகம் 111

பண்-காந்தார பஞ்சமம்

1. மின்னியல் செஞ்சடை வெண்பிறை யன்விரி நூலினன்
பன்னிய நான்மறை பாடி ஆ டிப்பல வூர்கள்போய்
அன்ன மன்ன நடையாளொடும்அம ரும்இடம்
புன்னைநன் மாமலர் பொன்னுதிர்க் கும்புன வாயிலே

(அ. சொ.) இயல்-தன்மையுடைய, பன்னிய-வாயால் பன்முறை சொல்லப்பட்டு வந்த, பொன்-மகரந்தப் பொடிகள், நான்மறை-நான்கு வேதங்கள், அன்னம் அன்ன நடையாள்-உமாதேவி.

2. பொற்றொடி யாள்உமை பங்கன் மேவும்புன வாயில்
கற்றவர் தாம்தொழு தேத்த நின்றகட் காழியான்
நற்றமிழ் ஞானசம் பந்தன் சொன்னதமிழ் நன்மையால்
அற்றமில் பாடல்பத் தேத்த வல்லார்அருள் சேர்வரே

(அ. சொ.) பொன் தொடி-பொன் வளையல், ஏத்த-போற்ற, காழியான்-சீர்காழிக் குரியவரான திருஞானசம்பந்தர், அற்றம்-குற்றம்.

இப்பதிகத்தால் நாம் அறிவன இத்தலத்தில் புன்னை மரங்கள் விசேடம். அம் மரங்கள் நன்கு செழித்து மலர்களைப் பெற்று மகரந்தப் பொடிகளைச் சிந்தும் தோற்றம், பொன்னை உதிர்ப்பதுபோல இருக்கும். இங்குள்ள குளங்கள் தாமரை மலர்களைத் தம்மகத்தே கொண்டு திகழ்ந்தன. இத்தலத்திற்கு அருகு கடல் இருத்தலின், தாழையும் புலி நகக்கொன்றையும் தழைத்திருக்கும் கடற்கரைச் சோலைகளும் இங்கு உண்டு. இத்தலத்தைத் தரிசித்தால் செல்வம் பெருகும். இக் குறிப்பினை, இப் பதிகத்தில் "சீருறு செல்வம் மல்க இருந்த சிவலோகன்" என்னும் அடி அறிவிக்கின்றது. செல்வம் பெருகுவதுடன் இத்தலத்து இறைவன் திருவடி தொழுபவர்க்கு இடரும் இல்லை என்பதைக் "கழல் ஏத்துவார்கட்கு இடர் இல்லையே" என்னும்

அடி அறிவிக்கின்றது. இத்தலத்தில் ஆடலும் பாடலும் அனவரதமும் இருந்துவரும். இத்தலம் பழம் புகழையும் அழகையும் கொண்டது. தென்றல் காற்றின் இன்பத்தை இங்கு துய்க்கலாம். "தென்றல் ஆர்ந்த புனவாயில்" என்னும் தொடரைக் காண்க.

இத்தலம் கடற்கரையைச் சார்ந்திருப்பதால் சங்கும் சிப்பியும் கொண்டு கடல் அலை கரையில் எறிந்துகொண்டிருக்கும். இத்தலம் நலம் மிக்கது. சோலைகளும் இத்தலத்தில் உண்டு. அச்சோலை மலர்களை மலர்த்திக் குளிர்ந்து காணப்படும். இத்தலத்தைப் போற்றுபவர் வேதனை குறைந்து இனி வரக்கடவதாகிய வினையும் நீங்கப்பெறுவர். "வேதனை நாள் தொறும் ஏத்துவார் மேல் வினை வீடுமே" என்ற அடியினைக் காண்க.

திருஞானசம்பந்தர் காலத்தில் சமண மதப்பிரசாரம் மிகுதியாக இருந்தது. அதனால் பலர் சைவசமயம் விட்டுச் சமண சமயம் புகுந்தனர். அத்தகையவர்கட்கு நல்லறிவு கொளுத்தச் சம்பந்தர், "மக்களே! சமணர் சாதி உரைப்பன கொண்டு அயர்ந்து தளர்வு எய்தன்மின்" என்று கூறியருளினர்.

இறுதிப் பாட்டில் இப்பதிகப் பாடல்கள் குற்றம் அற்றவை என்பதும், இப்பாடல்களைப் போற்ற வல்லவர்கட்கு அருள் சேரும் என்பதும், திருஞானசம்பந்தர் கற்றவர்களால் புகழ்ந்து போற்றப்படுவர் என்பதும், தம்மைத் தமிழ் உணர்ந்த ஞானசம்பந்தர் என்று கூறிக்கொள்வதில் திருஞானசம்பந்தருக்கு இருக்கும் ஆர்வமும் தெரியவருகின்றன. "நற்றமிழ்" என்ற அடைமொழியாலும், "நன்மையால்" என்ற பின் மொழியாலும் கூறப்பெற்றுள்ள கருத்தை நோக்குக.

## ஏழாம் திருமுறை பதிகம் 50

பண்-பழம் பஞ்சுரம்

1. சித்த நீநினை என்னொடு சூளறும் வைகலும்
மத்த யானையின் ஈர்உரி போர்த்தம னுளனூர்
பத்தர் தாம்பலர் பாடிநின் றாடும் பழம்பதி
பொத்தில் ஆந்தை கள்பாட் டிருப்புன வாயிலே

(அ. சொ.) சித்த-மனமே, சூள்-பொய்யாக மேற்கொண்ட உறுதிமொழிகள், வைகலும்-தினமும், மத்தம்-செருக்கு, உரி-தோல், பொத்து-மரப் பொந்து, அறு-நீங்காத.

2. பொடியாடு மேனியன் பொன்புனம் சூழ்புனவாயில்
அடியார் அடியன் நாவல ஊரன் உரைத்தன
மடியாது கற்றிவை ஏத்தவல் லார்வினை மாய்ந்துபோய்க்
குடியாகப் பாடிநின் றாடவல் லார்க்கில்லை குற்றமே

(அ. சொ.) பொடி-திருநீறு, ஆடு - பூசப்பட்டுள்ள, பொன்-அழகிய, புனம்-கொல்லைகள், நாவல ஊரன் - திருநாவலூரன் என்னும் சுந்தரர், மடியாது-சோம்பல் அடையாது. வினை-தீவினைகள்.

இப்பதிகத்தால் திருப்புவனவாயிலைப் பற்றிய அரிய குறிப்புக்கள் தெரிய வருகின்றன. இது பழம் பதியாகும். இப்பதியில் பத்தர்கள் பாடி ஆடிப் பரமனைப் போற்றுவர். இது விளைவயல் மிகுந்த இடம் ஆதலின், இவ் விளைவயலை உழுது பயிரிட்டு வாழ்பவர் வானவர் என்றே சுந்தரரால் சிறப்பிக்கப்பட்டுள்ளனர். வேடுவர்களும் இங்கு மிகுதி. அவர்கள் நல்ல வீரமும் உடையவர். வியாபாரிகள் கூட்டம் கூட்டமாகச் செல்லும் இடம். அவர்கள் செல்லும் கூட்டம் சாத்து என்று கூறப்படும். இவர்களும் வேடர்களும் ஒருவர்க்கொருவர் போர் இட்டுச் கொள்ளுதலும் உண்டு. அச் சண்டையினையும் இங்கு காணலாம். இத்தலம் அடிக்கடி அன்பர்கள் வந்து தரிசித்துச் செல்லுதற் குரியதாகவும்

இருக்கிறது. இதனை "அன்பராய்ப் புக்கார் போற்று ஒழியாப் புனவாயில்" என்ற அடி அறிவிக்கின்றது. இப் புனவாயிலைச் சுற்றிக் கற்குன்றுகளும், புதல்களும், பரந்த கடுமையான வெற்றிடங்களும் காணப்படும். இப்போதும் இத்தலத்தை அடையும்போது பார்க்கலாம். கடற்கரைச் சோலை பொலிவழிந்து காணப்படும். இங்குள்ள வேடர்கள் மான் வேட்டை ஆடுவர். அப்போது மான் கூட்டம் அவ் வேடுவர்கட்குப் பயந்து ஒளிந்துகொள்ளும் தோற்றம் இரக்கந் தருவதாகும். இத்தலத்தில் கள்ளி மரமும் உண்டு. இதன் கிளைகள் நீண்டிருக்கும். இக்கிளைகளில் ஆண் புரு ஏறிக்கொண்டு தன்னைப் பிரிந்திருந்த பெண் புருவைக் கூவி அழைக்கும் இன்குரலையும் கேட்டு மகிழலாம். இப் பதியினை உலகப்பாசம் அற்றவர் பாடி நின்று, களிப்பால் ஆடியும் போற்றுவர். காலை மாலை ஆகிய இரண்டு வேளை களில் வந்து அன்பர் வணங்குவர். அக்கம் பக்கத்தில் கிராம தேவதையை வணங்குபவர் உடுக்கை கொட்டும் முழக்கம் முழங்குவதையும் கேட்கலாம்.

திருப்புனவாயிலில் வெயில் மிகுதி. அங்குள்ள கள்ளி மரம் உலர்ந்து, புற்கள் எல்லாம் தீர்ந்து இருக்கும் காலத்தில் மான் கூட்டங்கள் கடற்கரையிலாகிலும் சென்று தங்கிக் காலம் கழிப்போம் என்று அக்கடற்கரைச் சோலையில் சென்று புகுந்து கொள்ளும். இரவுக் காலங்களில் பன்றிகள் பூமியைத் தம் கூர்மையான கொம்புகளால் தோண்டி எடுக்க, பாதாளலோகத்தில் உள்ள பாம்பின் மணிகள் நெருப்பைப்போல ஒளி விட்டுக்கொண்டிருக்கும். கற்களுக்கு இடையே முளைத்த புதர்களில் உள்ள புற்றில் காட்டுக்கோழிகள் ஏறி நின்று "கூகூ" என்று கத்திக் கொண்டிருக்கும். மரப்பொந்துகளில் ஆந்தைகள் கத்திக் கொண்டிருக்கும்.

இவ்வாறான காட்சிகளைச் சுந்தரர் இத்தலத்துக்குச் சென்றபோது கண்டு களித்தார். ஆதலின், அவை அனைத்தையும் இப்பதிகத்தில் இணைத்துப் பாடிவிட்டனர்.

இப்பதிகத்தில் சுந்தரர் தம் மனத்துச்கு அறிவுறுத்தும் செய்திகள் பலவாகும். மனத்தை நோக்கி, "மனமே நீ திருப்புனவாயிலை நினை. அப்படி நினைத்தால் பொய்யாக மேற்கொண்ட உறுதிமொழிகள் எல்லாம் அற்றுவிடும். நீ தைரியமாக இரு. திருப்புனவாயிலை மறவாதே; வருத்தம் இன்றி நீ நினைப்பாயாக; வல்வினை எல்லாம் ஒழிந்துபோகத் திருப்புனவாயிலை நினை. வேறு எதுவும் உனக்கு வேண்டா" என்று உபதேசம் செய்கின்றார்.

இப்பதிகத்தில் "பொற்குன்றம் சேர்ந்ததோர் காக்கை பொன்னும்" என்னும் அருமையான கருத்துடைய தொடர் அமைந்துள்ளது. இப்பதிகத்தை யார் படித்து இறைவனை ஏத்துகின்றார்களோ அவர்களின் வினைகள் ஒழிந்து குற்றமும் இல்லாமல் போகும் என்னும் கருத்தும், சுந்தரர் தம்மை "அடியார் அடியன்" என்று குதூகலத்துடன் கூறிக்கொள்ளும் கருத்தும் ஈற்றுப் பாடலில் உள்ளன.

## 8. திருவிராமேச்சுரம்

இத்தலம் பாண்டிய நாட்டுப் பாடல் பெற்ற தலங்களில் எட்டாவது. இத்தலத்தைத் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடியுள்ளனர். இத் தலத்திற்குரிய பதிகம் மூன்று. இரண்டு திருஞானசம்பந்தரால் பாடப் பெற்றவை. ஒன்று திருநாவுக்கரசரால் பாடப்பட்டது.

இராமன் இராவண சம்ஹாரம் செய்தான். அதனால் அவனுக்குத் தோஷம் ஏற்பட்டது. அத் தோஷத்தைப் போக்கிக்கொள்ள இத்தலத்தில் இலிங்கஸ்தாபனம் செய்து இறைவனைப் பூசித்து அத்தோஷம் நீங்கப்பெற்றான். இந்தச்

செய்திகளைத் தேவாரப் பதிகங்கள் நமக்குத் தெற்றத் தெளிய விளக்குகின்றன.

இலிங்கஸ்தாபனத்தின் பொருட்டு இலிங்கம் கொணர அனுமன் காசிக்குச் சென்றான். அவன் இலிங்கம் கொணரத் தாமதம் ஆயிற்று. ஆகவே, சீதை மணலையே இலிங்கமாகக் குவித்துச் செய்ய, அதனையே இராமன் பூசித்தான். இதுவே இராமலிங்கம். பின்னர் அனுமான் கொணர்ந்த இலிங்கம் இவ்விலிங்கத்திற்கு வடபக்கம் பிரதிஷ்டை செய்யப் பட்டது. இது காசி விஸ்வநாதர் எனப்படும்.

இங்கு இலக்குமியை மணந்த சேதுமாதவர் சந்நிதியும் கண்டு தரிசித்ததற்குரியது. இத்தலம் சேது என்றும் கூறப் படும். இராமன் இலங்கைச்குச் செல்ல இங்கு அணை (சேது) கட்டிய காரணத்தால் இது சேது என்று கூறப்படுகிறது.

இத்தலம் தீர்த்த மகிமையுடையது. கோவிலுக் குள்ளேயே 14 தீர்த்தங்கள் இருக்கின்றன. இத்தலத்துக் கோயில் மிக மிகப் பெரியது. பெரிய பெரிய பிரகாரங்களை யுடையது. மேற்குக் கோபுரத்திற்கு அருகில் பாதாள ஸ்வாமி கோவில் ஒனறு உண்டு. மிகப் பழமையான கோவில். இராமேஸ்வரத்தில் உள்ள இறைவரும் இறைவி யாரும் கிழக்கு நோக்கி இருந்து காட்சி அளிக்கின்றனர். இங்குள்ள சேதுமாதவரையும், கணேசமூர்த்தியையும் உற்றுக் கவனித்தால், அவை மணற்கல்லால் செய்யப்பட் டவை என்பது புலனாகும். அச்சிலைகள் உதிர்ந்துகொண்டு வருவதையும் காணலாம். சொக்கட்டான் மண்டபம் பார்க்கத்தக்கது. இந்த மண்டபம் எங்கும் எவ்விடத்தும் காணக்கூடாத அதி அற்புதமான மண்டபம். இம்மண்ட பத்தில் இறைவர் அமர்ந்து அன்பர்கட்குக் காட்சி அளிக் கும் காலம், கண்டுகளித்தற்குரிய காலமாகும்.

மண்டபங்களிலும், பிரகாரங்களிலும் இராமநாதபுர சேதுபதிகளின் உருவங்களைக் காணலாம். மேற்குக்

கோபுரம் மட்டும் முழுமையும் கட்டப்பட்டுக் காட்சி அளிக்கிறது. ஏனைய கோபுரங்கள் முற்றுப்பெறும் பேறு பெறவில்லை. இராமநாதஸ்வாமி கர்ப்பக் கிரஹத்தில் பல கல்வெட்டுக்கள் உள. இத்தலத்தில் மாசி மாதம் பிரம் மோற்சவமும், ஆடி மாதம் அம்மன் உற்சவமும் நடை பெறும். அம்மன் தபசும் அம்மன் திருக்கல்யாணமும் கண்டு இன்புறுதற்குரியவை. தினமும் நடக்கும் அர்த்தசாமப் பள்ளியறைக் காட்சி கண்டு களித்தற்குரியது.

இத்தலத்து இறைவர் இராமநாதர், இராமநாதேஷ்வரர் என்றும், இறைவியார் பர்வதவர்த்தனி, மலைவளர் காதலி என்றும் கூறப்படுவர். இங்கு சிறப்புடை தீர்த்தங்கள் அக்கினி தீர்த்தம், இராம தீர்த்தம், இலட்சுமண தீர்த்தம், தனுஷ்கோடி முதலியன.

இத்தலம் இராமேஸ்வர ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ளது. சுமார் ஒரு மைல் தொலைவில் உள்ளது. இங்கு பல சத்திரங்கள் உண்டு. தங்குதற்கு எல்லா வசதிகளும் உண்டு. இத் தொண்டில் இங்குள்ள பிராமணர்கள் அதிகம் ஈடுபட்டு யாத்திரை காரணமாக வரும் அன்பர் கட்குப் பல விதத்திலும் பெரிதும் உதவி செய்கின்றனர்.

இக்கோயிலுக்கு இரண்டு கல் தொலைவில் கந்த மாதனகிரி என்ற மணல் மேடு இருக்கிறது. இங்கு ஒரு சிவாலயம் உண்டு. மணல் மேட்டில் இரண்டு பாதங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றை இராமர் பாதம் என்பர். இராமேஸ்வரத்திலிருந்து தெற்கே படகின் மூலம் 18 கல் சென்றால், தனுஷ்கோடியை அடையலாம். இராமேஸ்வர ரயில் நிலையத்திலிருந்து தனுஷ்கோடி நிலையத்தையும் அடையலாம். நிலையத்திலிருந்து ஸ்னான கட்டம் சிறிது தொலைவில் இருக்கிறது. மணலில் நடக்க வேண்டும். இராமன் தன் தனு(வில்) முனையால் கீறித் தீர்த்தம் உண்டாக்கினமையால் தனுஷ்கோடி என்ற பெயர் பெற்றதாகக் கூறுவர்.

## மூன்றும் திருமுறை பதிகம் 10

பண் காந்தார பஞ்சமம்

1. அலைவளர் தண்மதியோ டயலேயடக் கியுமை
முலைவளர் பாகமுயங் கவல்லமுதல வன்முனி
இலைவளர் தாழைகள்விம் முகானல்இரா மேச்சரம்
தலைவளர் கோல நல்மா லையன்தான்இருந் தாட்சியே.

(அ. சொ.) அலை—அலைகளையுடைய கங்கையை, தண் மதி—குளிர்ந்த சந்திரன், முயங்க—தழுவ, விம்மு—மிகுதியாக நிறைந்துள்ள, கானல்—கடற்கரைச் சோலை, கோலம்—அழகு.

2. தேவியை வவ்வியதென் இலங்கைத்தச மாமுகன்
பூவிய லும்முடிபொன் றுவித்தபழி போயற
ஏவிய லும்சிலைஅண் ணல்செய்தஇரா மேச்சரம்
மேவிய சிந்தையினர் கள்தம்மேல்வினை வீடுமே.

(அ. சொ.) தேவி—சீதை, தசமாமுகன்—பத்துத் தலைகளையுடைய இராவணன், இயலும்—பொருந்தும், பொன்றுவித்த—அழித்திட்ட, ஏ—அம்பு, சிலை—வில், அண்ணல்—இராமன், (பெருமையில் சிறந்தவன்) மேவிய—பொருந்திய, வினை—தீவினை, வீடுமே—அழியுமே.

3. பகலவன் மீதியங்கா மைக்காத் தோன்பதி யோன்தனை
இகலழி வித்தவ னேத்துகோ யில்இரா மேச்சரம்
புகலியுள் ஞானசம் பந்தன்சொன் னதமிழ் புந்தியால்
அகலிடம் எங்கும்நின் றேத்தவல் லார்க்கில்லை அல்லலே.

(அ. சொ.) பகலவன்—சூரியன், மீது—தன் நகரின் மேலே, இயங்காமை—சஞ்சரிக்காமல் படி, காத்தோன்-தடுத்தவனாகிய இராவணன், இகல்—வலி, அழிவித்தவன்—அழியச் செய்த இராமன், ஏத்து—போற்றும், புகலியுள்—சீர்காழியுள், புந்தியால்—அறிவினால், அல்லல்—துன்பம்.

இப்பதிகத்தால் இராமேச்சுரம் இராமனால் பூசிக்கப்பட்டது என்பதும், அவ்வாறு பூசிக்கப்பட்டதன் நோக்கம்

இராவணனைக் கொன்றதனால் ஏற்பட்ட பழியினைப் போக்கிக்கொள்வதற்காகும் என்பதும், முக்கியமாக அறியப்படுகின்றன. இராமேஸ்வரம் கடற்கரையோரத்தில் உள்ள தலம் என்பதற்கேற்பத் தாழைகள் வளர்ந்துள்ள கடற்கரைச் சோலைகளையுடையது. புலால் நாற்றமும் வீசப் பெறுவது. இந்த இடத்தை இறைவர் ஆட்சியாகக் கொண்டுள்ளார். இத்தலம் இராமன் பூசிப்பதற்குமுன்பு இல்லாமல் இராமன் பூசித்த பிறகே ஏற்பட்டது என்பது, "அண்ணல் (இராமன்) செய்த இராமேச்சரம்" என்னும் அடியால் விளங்குகிறது. இராமேச்சரம் பாவம் போக்கும் தலங்களில் மிக முக்கியமானது. அத்தலத்தை அடைந்த நல் மனமுடையவர் பாவம் நீங்கும் என்பதை இப்பதிகம் அறிவித்து நிற்கிறது. இறைவன் ஈண்டு அன்பர்கட்கு அருள் செய்யும் பொருட்டு ஞானமும், நன்பொருளும் ஆகி நிற்கின்றான். இவ்வாறு நிற்பது நம் நன்மைக்கே ஆகும். இத்தலத்துப் பெருமானது திருப்பெயரைப் போற்றினாலே நோய் நீங்கும். இறைவன் தனக்குவமை இல்லாதவன் என்பது வள்ளுவர் போன்றார் கருத்து. அதனை அவரே "தனக்குவமை இல்லாதான்" என்றே குறிப்பிடுகிறார். அக்கருத்தே இங்கு "இணையிலி என்றும் இருந்த கோயில்" என்று கூறப்பட்டுள்ளது. இணியிலி மட்டும் அல்லன். தன் செயலுக்குப் பிறர் துணையும் வேண்டாதவன். ஆதலின் துணையிலியும் ஆவன். 'இவன் பாதம் போற்றத் துயர் நீங்கும்.' இராமன் இறைவனை வழிபடும்போது, 'வினை மூடிட இனி அருள் நல்கிடு' என்று வேண்டினான். இறைவன் தான் ஒருவனாக இருந்தாலும், பலவாக இருக்கும் பொருள்களும் அவன் வடிவங்களே என்னும் குறிப்பும் இங்கு உண்டு. இறுதியில் ஞானசம்பந்தர் மக்களை நோக்கி "உமக்கு அருள் ஆக வேண்டுமானால் செல்வனை ஏத்தி வாழ்மின்" என்று உபதேசம் செய்கின்றார். மேலும், தம் திருக்கடைக் காப்பில், இத்திருப்பதிகத்தைத் தம் அறிவால் எங்குப்

போற்றிலும், அவர்கட்குத் துன்பம் இல்லை என்றும் அறிவிக்கின்றார். இதனால் இராமேஸ்வரம் போகாமலே இவ்விராமேஸ்வரப் பதிகத்தை ஓதினாலே போதுமானது. அதுவே துன்பம் போக்கும் என்பது தெரிகிறது.

இப்பதிகத்தால் இராமனைப் பற்றிய அரிய சில குறிப்புக்களை உணரலாம். அவை இராமன் பெருமையில் சிறந்தவன், சிறந்த வில்லாளி, குற்றமற்ற புகழுடையவன், கடல் அடைத்து இலங்கைக்குச் செல்ல வழி கண்டவன் என்பன.

இராவணனைப் பற்றி இப்பதிகத்தால் நாம் அறிவன, சீதையை மாயையால் காட்டில் வவ்வியவன், காமவேட்கையே காரணமாக வவ்வியவன், சனி, புதன், சூரியன் சுக்கிரன், சந்திரன் முதலான கிரகங்கட்குக் கோபம் வரும்படி நடந்து மகிழ்ந்தவன், (ஏனைய கிரகங்களையும் கூட்டிக் கொள்ளவும்) சூரியன் தன் நகர்மீது செல்லாதவாறு அவனுக்கு உத்தரவிட்டவன் என்பன.

"ஏத்தும்மாந்தர்₀பிணி பேருமே," "பாதம் ஏத்தத் துயர் நீங்குமே" "செல்வனை ஏத்திவாழ்மின் அருளாகவே" "ஏத்த வல்லார்க்கு இல்லை அல்லலே" என்பன அருந் தொடர்கள்

## மூன்றும் திருமுறை பதிகம் 100

### பண்—பழம் பஞ்சுரம்

திரிதரு மாமணி நாகம் ஆடத் திளைத்தொரு தீயழல்வாய்
நரிகதிக் கஎரி ஏந்தி ஆடும் நலமேதெ ரிருந்துணர்வார்
எரிகதிர் முத்தம் இலங்கு கானல் இராமேச் சரமேய
விரிகதிர் வெண்பிறை மல்கு சென்னி விமலர் செயும்செயலே.

(அ. சொ.) மா—சிறந்த, மணி—இரத்தினம் இருக்கப் பெற்ற, திளைத்து—மகிழ்ந்து, கதிக்க-நடக்க, தீயழல்வாய் சுடலையில், எரி-மழுவாயுதம், எரி-தீபோல, கதிர்-ஒளிவிடும் இலங்கு—விளங்கு, கானல்—கடற்கரைச் சோலை, மல்கு—நிறையும், விமலர்—மலரகிதரான இறைவர்.

**தேவியை வவ்விய மென்இலங் கைஅரையன்தன் திறல்வாட்டி
ஏவியல் வெஞ்சிலை அண்ணல் நண்ணும் இராமேச் சரத்தாரை
நாவியல் ஞான சம்பந் தன்நல்லமொழி யால்ந வின்றேத்தும்
பாவில் மாலை வல்லார் அவர்தம்வினை ஆயின பற்றறுமே.**

*(அ. சொ.) தேவியை—சீதையை, வவ்விய—கவர்ந்த, அரையன் — அரசனான இராவணன், திறல் — வன்மை, ஏ—அம்பு, இயல்—பொருந்திய, வெஞ்சிலை—கொடிய வில், அண்ணல்—பெருமை மிக்க இராமன், நண்ணும்—சேரும், நா—நாவன்மை, நவின்று—சொல்லி, ஏத்தும்—போற்றும், பா—பாடல்களால், இயல்—அமைந்த, மாலை—பாமாலை, பற்று—பந்தம்.*

*இப்பதிகத்தால் அறியப்படுவன கீழ்வருவன: இராமேச்சரம் கடற்கரைத் தலம். ஆதலின், கடலில் சங்கும் சிப்பியும் மிகுதி. அவைகள் முத்துக்களைக் கரையில் ஈன்று செல்ல, அம் முத்துக்கள் ஒளி வீசிக்கொண்டிருக்கும். கடற்கரைச் சோலைகளும் உண்டு. அலைகள் கரையில் வந்து மோதிப் பின் செல்லும் அழகைக் காணலாம். தாழைகள் தம் இலைகளை மலர்த்தி விளங்கும். பக்கங்களில் சோலைகளும் உண்டு. அங்கு மலர்கள் மலர்ந்து மணம் வீசிக்கொண்டு, வண்டுகள் பாடுதலை நுகரும்போதும், கேட்கும் போதும் இன்பம் தோன்றும். வண்டுகள் பாடல் யாழ் இசைபோல இருக்கும். இணைந்த மலர்களில் அன்னங்களும் அமர்ந்து காட்சி அளிக்கும்.*

*ஈண்டுள இறைவியார் திருப்பெயர் மலைவளர் காதலி என்பதை இப்பதிக மூன்றாம் பாடல் நன்கு அறிவித்து நிற்கிறது. இதுவே வடமொழியாளர்களால் பர்வத வர்த்தனி என்று தம் மொழியில் பெயர்த்து எழுதிக் கொள்ளப் பட்டதாகும். இறைவர் கரந்தை மலரையும் சூடுவர்.*

*இராமேச்சரம் குற்றமற்றவர் வணங்கிப் போற்றி வாழ்த்தும் இடம் என்றும், நல்லோர்கள் எக்காலத்தும்*

போற்றி வணங்கும் தலம் என்றும், அம்பு எய்தலில் வன்மைமிக்க இராமன் புகழ்ந்து போற்றி வணங்கும் இடம் என்றும் இப்பதிகத்தால் அறியலாம்.

இப்பதிக ஈற்றுப்பாடலால் ஞானசம்பந்தர் நாவன்மை மிக்கவர் என்பதும், அவர் நல்ல மொழிகளால் இப்பதிகத்தைப் பாடிப் போற்றி இருப்பதால், இப்பாமாலை பாடவல்லவர் வினைப்பந்தம் நீங்கும் என்பதும் கூறப்படுகின்றன.

அருந்தொடர்கள்

"ஏதமிலர் தொழுதேத்தி வாழ்த்தும் இராமேச்சரம்"
"என்றும் நல்லோர்கள் பரவி ஏத்தும் இராமேச்சரம்"
"ஏவலனார் (இராமன்) புகழ்ந்தேத்தி வாழ்த்தும் இரா [மேச்சரம்"

## நான்காம் திருமுறை பதிகம் 61

### திருநேரிசை

1. பாசமும் கழிக்க கில்லா அரக்கரைப் படுத்துத் தக்க
வாசமிக் கலர்கள் கொண்டு மதியினால் மால்செய் கோயில்
நேசமிக் கன்பி னாலே நினைமின் நீர் நின்று நாளும்
தேசமிக் கான்இ ருந்த திருரா மேச் சுரமே

(அ. சொ.) பாசமும்—பாவபந்தங்களையும், அரக்கரை—இராவணன் முதலிய ராட்சதர்களை, படுத்து—அழித்து, மதியினால்—அறிவினால், மால்—திருமாலின் அவதாரமான இராமன், தேசம்—ஒளி-

2. குன்று போல்தோ ளுடைய குணமி லாஅரக் கர்தமைக்
கொன்று போர்ஆ ழியம்மால் வேட்கைத யால்செய்த கோயில்
நன்று போல்நெஞ் சமேநீ நன்மை யையறிதி ஆயில்
சென்று நீதொழு துய்கண் டாய்திரு இராமேச் சுரமே

(அ. சொ.) ஆழி—சக்கரம், உய்—பிழைத்துக்கொள்.

இப்பதிகமும் இராமேச்சரம் இராமனால் தோற்றுவிக்கப்பட்டது என்பதை அறிவித்து நிற்கிறது. தான் செய்த

பாவம் யாரை வழி பட்டால் போகும் என்பதை அறிந்து இராமன் இத்தலத்தைக் கண்டு இறைவரைத் தாபித்துப் பூசித்ததால் 'மதியினுல் மால் செய் கோயில்' என்று இத் தலம் சிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பதிகம் மக்க ளுக்கும், தம் நெஞ்சுக்கும் நல் அறிவு புகட்டும் முறை யில் பாடப்பட்டுள்ளது. "நேசமிக்கு அன்பினுல் நீங்கள் நினையுங்கள்" என்று மக்களை நோக்கியும், "மனமே இரா மேச்சுரத்தையே சரணுகப் பற்றி ஈசனிடத்தே போற்று தல்செய்க; நீ ஆன்மையை உணர்ந்தால் இத்தலத்தை அடைந்து தொழுது பிழைக்க; இறைவரைச் சேர்க; இரா மேச்சுரம் சேர்க. இத்தலத்தைத் தேடி வாழ்ந்தால் உனக்கு நன்னெறி கூடும்" என்றும் கூறி நெஞ்சிற்கு அறி வுறுத்தினர்.

இராமேச்சரத்தை வேண்டிக் கொள்ளும் குணம் மிக்கு ஆர்வத்தால் கூடுபவர் நல்ல குறிப்புடையவர் என்பது அப்பர் கருத்தாகும். இத்தலத்தைத் தம் கண்களால் கண்டு வணங்குபவர்களுக்கு நோய், வினை முதலியன நாளுக்கு நாள் குறைந்து போகும். மேலும், யார் தலையினுல் வணங்கு கின்ருர்களோ, அவர்கள் தவத்தில் ஆழ்வர் என்பதும், தலைவனும் சிவபேருமான் இடத்தே வணங்கும் பேறு பெறுவர் என்பதும் இராமேச்சர வணக்கத்தால் ஏற்படும் பேருக அப்பர் பெருமான் குறிப்பிடுகிருர்.

பெரும் பாலும் அப்பர்பெருமான் தம் ஈற்றுப்பாடலில், அப்பதிகத்தை ஓதுவதால் ஏற்படும் பயன் இன்னது என் பதைக் குறிக்கும் வழக்கம் இல்லாதவர். ஆனுல், இவ்விடத் தில் இப்பதிக ஈற்றுப்பாடலில் யார் இப்பத்துப் பாடல்களை உரைக்கின்றனரோ அவர்கள் அன்பினுல் இறைவர் மனத் தால் நினைக்கும் பேறுபெறுவர் என்று குறிப்பிடுகின்ருர்.

இதில் வரும் அருந்தொடர்: "திரைகள் (அலைகள்) முத் தால் வணங்கும் திரு இராமேச்சுரம்" என்பது.

# 9. திருவாடானை

இது பாண்டிய நாட்டுப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்பதாவதாகும். இதனைத் திருஞானசம்பந்தர் ஒருவரே பாடியுள்ளார். ஆகவே, இதற்குப் பதிகம் ஒன்றே. இதனை அஜகஜபுரம் என்று வடமொழியாளர் கூறிக்கொள்வர். (அஜம்–ஆடு, கஜம்–யானை) ஒரு சமயம் பிருகு முனிவர் துர்வாசரைக் காணச் சென்றார். சென்றவர் அவருக்கு வணக்கம் செலுத்திலர். அதனால் கோபங் கொண்ட துர்வாசகர், பிருகு முனிவரை ஆட்டுத் தலையும், யானையுடலும் பெறுமாறு சபிக்க, அவ்வுருவுடன் இத்தலத்தை அடைந்து இறைவரைப் பூசித்து அச்சாபம் நீங்கப் பெற்றார். இதுவே இத்தலம் இப்பெயர் பெற்றதற்குக் காரணம்.

சூரியன் நீல ரத்னத்தைச் சிவலிங்கமாகப் பிரதிஷ்டை செய்து பூசித்தான். இதன் காரணமாக இவ்விலிங்க மூர்த்திக்கு ஆதிரத்னேஸ்வரர் என்ற பெயரும் உண்டு. கோயில் பெரியது.

இத்தலத்து விருட்சம் வில்வம், தீர்த்தம் சூரிய தீர்த்தம். இது திருக்கோயிலுக்கு வடகிழக்கில் உள்ளது. இறைவர் ஆடானை நாதர், அஜகஜேஸ்வரர், ஆதிரத்னேஸ்வரர் என்றும், இறைவியார் அம்பாயிரவல்லி, சினேகவல்லி என்றும் பெயர் பெறுவர்.

இத்தலத்தை அடையப் பல வழிகள் உண்டு. தேவகோட்டை ரயில் நிலையத்திலிருந்து 23 கல் தொலைவிலும், காரைக்குடி ரயில் நிலையத்திலிருந்து 38 கல் தொலைவிலும், பரமக்குடி ரயில் நிலையத்திலிருந்து 32 கல் தொலைவிலும், இராமநாதபுரத்திலிருந்து 32 கல் தொலைவிலும், அரந்தாங்கியிலிருந்து 30 கல் தொலைவிலும், காளையார் கோவிலிலிருந்து கிழக்கே 21 கல் தொலைவிலும், திருப்புனவாயிலிலிருந்து தெற்கே மட்சாலையில் 12 கல் தொலைவிலும் உள்ளது. இவ் வழிகள் எல்லாம் பஸ் வசதிகளைப்பெற்றவை.

## இரண்டாம் திருமுறை பதிகம் 112

பண்—நட்டராகம்

1. மாதொர் கூறுகந் தேற தேறிய
ஆதி யான்உறை ஆடா னை
போதி னல்புனைந் தேத்து வார்தமை
வாதி யாவினை மாயு மே

*(அ. சொ.) மாது-உமாதேவி, கூறு-பாகம், உகந்து-விரும்பி, எறு-இரஷபம், உறை-வாழ் இடம், போது-மலர், புனைந்து-மாலையாகக் கட்டி, ஏத்துவார்-போற்றுவார்.*

2. வீடி னுமலி வேங்க டத்துநின்
றுட் லானுறை ஆடா னை
நாடி ஞானசம் பந்தன் செந்தமிழ்
பாட் நோய்பிணி பாறு மே

*(அ. சொ.) வீடினார்—இறந்தவர், மலி—மிகுந்த, வேங்கடம்—சுடலை, வேம்+கடம்—வேகும்+காடு, பிணி—நோய், நோய்—துன்பம் செய்யும், பாறுமே—நீங்குமே.*

*இப்பதிகத்தால்"யார் திருவாடானை என்னும் தலத்தை மலர்கொண்டு போற்றுகின்றார்களோ, அவர்களைத் தீவினைகள் துன்புறுத்தாது அவை நீங்கும். துன்பந்தரும் நோய் ஒழியும். துன்பம் நீங்கும்; முன்செய்த பாவங்கள் நீங்கும்' என்பன போன்ற கருத்துக்கள் பொருந்தியுள்ளன. இப்பதிகம் வழிபடும் முறையில் மலர்கொண்டு வழிபடுதலே சிறந்தது என்பதையும், அம்மலர்களும் நன்கு மலர்ந்த மலர்களாகவும், நல்ல அழகும் நிறமும் கொண்டனவாகவும் தேன் நிறைந்தனவாகவும், நல்லனவாகவும், சிறந்தனவாகவும், மணமுள்ளனவாகவும், தூய்மை (சுத்தம்) உடையனவாகவும் இருக்கவேண்டும் என்பதையும் நமக்கு நன்கு அறிவிக்கின்றது.*

*திருவாடானை நீர்வளமும் உடையது. அதனால் தான் 'தண் புனல் சூடானை' என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்*

தலம் தேவர்களாலும், அந்தணர்களாலும் பூசிக்கப்படுவது. இப்பதிகத்தைப் பாட நோயும் நீங்கும்.
சிறப்புத் தொடர்கள்:

"ஏத்துவார்தமை வாதியாவினை"
"மலர்தூவிக் கைதொழ வீடும் நுங்கள் வினைகள்"
"நாள்தொறும் வலங்கொள்வார் வினைமாயும்"
"கைதொழத் தீயவல்வினை தீருமே."

## 10. திருக்கானப்பேர்

இத்தலம் பாண்டிய நாட்டுப் பாடல் பெற்ற தலங்களுள் பத்தாவது. இதனைத் திருஞானசம்பந்தரும், சுந்தரரும் பாடியுள்ளார். ஆகவே இதற்குப் பதிகம் இரண்டு. இத்தலத்தைக் காளையார் கோவில் என்று கூறுவர். இதற்குக் காரணம் சுந்தரர் சேரமான் பெருமாள் நாயனுருடன் திருச்சுழியலில் சுவாமி தரிசனம் செய்து, அங்குத் தங்கி இருந்தார். அன்று இரவு திருக்கானப்பேர் இறைவர் காளை வடிவுடன் கையில் பொற் செண்டும், முடியில் சுழியமும் கொண்டு சுந்தரர் கனவில், "யாம் இருப்பது கானப்பேர்" என்று கூற, மறுநாள் காலையே இத்தலத்தை நோக்கிப் புறப்பட்டு, "கண்டு தொழப் பெறுவது என்று கொலோ அடியேன் கார் வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே" என்று பாடிப்பரவினுர். இத்தலத்திற்குக் காளிபுரம் என்ற பெயரும் உண்டு.

இத்தலம் பெரியது. கோபுரமும் பெரியது. இத்தலத்தில் மூன்று சந்நிதிகள் உள்ளன. முதலாவது, சோமேசர், சௌந்தர நாயகி சந்நிதி; இரண்டாவது காளீசர், சொர்ண வல்லி சந்நிதி; மூன்றாவது சுந்தரேசர், மீனாட்சி சந்நிதி. பெரிய கோபுரம் சோமேசர் சந்நிதிக்கு நேரே இருக்கிறது. இத்தலத்துத் தெப்பல் உற்சவம் சிறப்பானது.

இத்தலத்தில் காட்டானையாகச் சாபம் ஏற்ற ஐராவதம் என்னும் யானை பூசித்துச் சாபம் நீங்கியது. இதனைத் திருஞானசம்பந்தர் இத்தலத்து முதற்பாடலிலேயே பாடியுள்ளார். கௌண்டில்ய ரிஷியும் பூசித்துப் பேறுபெற்றுள்ளார்.

இத்தலத்துத் தீர்த்தம் யானை மடு, புட்பல தீர்த்தம் முதலியன. இறைவர் சோமேஸ்வரர், ஸ்ரீகாளீஸ்வரர், ஸ்ரீசுந்தரேஸ்வரர், காளையப்பர், காளையீஸ்வரர் என்றும், தேவியார் சுவர்ணவல்லி, மீனாட்சி, சௌந்தரநாயகி என்றும் கூறப்படுவர்,

இத்தலத்தை நாட்டரசன் கோட்டை ரயில் நிலயத்திலிருந்து 6 கல் சென்றேனும், திருவாடானைக்கு மேற்கே 21 கல் சென்றேனும், தேவகோட்டைக்குத் தென்மேற்கே 15 கல் சென்றேனும், மதுரைக்குக் கிழக்கே சிவகெங்கை வழியே 3½ கல் கடந்தேனும், மானாமதுரை ரயில் நிலயத்திலிருந்து 11 கல் சென்றேனும் அடையலாம். எல்லாவழிகளிலும் பஸ் வசதி உண்டு.

## மூன்றாம் திருமுறை பதிகம் 26

பண்—கொல்லி

**1.** **பிடியெலாம் பின்செலப் பெருங்கைமா மலர்தழீஇ**
**விடியலே தடமூழ்கி விதியினல் வழிபடும்**
**கடியுலாம் பூம்பொழில் கானப்பேர் அண்ணல்நீர்**
**அடியலால் அடைசரண் உடையரோ அடியரே**

(அ. சொ.) பிடி—பெண் யானைகள், கைமா—யானை (ஈண்டு ஐராவதம் என்னும் தெய்வலோக யானை) தடம்—குளம், கடி—வாசனை, பொழில்—சோலை, அண்ணல்—தலைவனே!

**2.** **காட்டகத் தாடலான் கருதிய கானப்பேர்**
**கோட்டகத் திளைவரால் குதிகொளும் காழியான்**

**நாட்டகத் தோங்குசீர் ஞானசம் பந்தன்**
**பாட்டகத் திவைவலார்க் கில்லையாம் பாவமே.**

(அ. சொ.) காட்டகத்து—சுடலையில், கோட்டகம்—கரை, ஆழமான நீர்நிலை, காழியான்—சீர்காழிப் பதித் தலைவரான திருஞானசம்பந்தர், நாட்டகத்தில்—நாட்டில், சம்பந்தன்—திருஞானசம்பந்தர் பாடியுள்ள.

இப்பதிகத்தால் கானப்பேர் ஊரைப்பற்றிப் பல வற்றை அறியலாம். முதலாவது இஃது ஐராவதம் என்னும் யானையால் பூசிக்கப்பெற்றது என்பதை இப்பதிக முதற் பாடலாலும் ஏழாவது பாடலாலும் அறியலாம்.

இத்தலத்து இயற்கை அழகுகள் இனிதின் எடுத்துப் பேசப்பட்டுள்ளன. இங்குள்ள சோலைகள் மலர் நிறைந்து மணம் உடையனவாய் இருந்தன. இங்குள வண்டுகள் குளங்களில் சிலபோது தங்கிப் பிறகு செங்குவளை மலர் களை அடைந்து பண் பாடும். மான் கூட்டங்களும், குரங் குக் கூட்டங்களும் நிறைந்த காடுகள் நிறைந்து, தேனும் மிக்கு, மணம் கமழும் இடம் கானப்பேர் ஆகும். யானைகள் கொழுங் கொடிகளைக் கறித்துச் செல்லும் இடமும் ஆகும். ஆண் யானை முன் செல்லப் பெண் யானைகள் பின் சென்று வழிபட்டன என்னும் செய்தி இப்பதிகத்தில் குறிப்பிடப் பட்டிருப்பதை நோக்கின், அஃறிணைப் பொருள்களுள்ளும் ஆண் இனத்திற்கு முதற்பெருமை உண்டு என்பதை அறி தற்கே யாகும் என்பதை உணரலாம். "அவன் அவள் அது" என்று தானே நமது சாத்திரமும் கூறுகிறது.

திருஞானசம்பந்தர் இத்தலத்துப் பதிகத்தின் மூலம், அடியவர்கட்குக்கானப்பேர் உறையும் இறைவன் காரணமே அரண் என்பதையும் விண்ணிடைச் செல்லும் விருப்புடை யார் இத்தலத்தை அடைதல் வேண்டும் என்பதையும் இத்தலத்தை அடைந்தவர்க் கல்லால் குற்றம் நீங்காது என்பதையும், இத்தலத்தைத் தொழுபவர் தீதற்றவர்

ஆவர் என்பதையும், உடம்பில் உள்ள பெருநோய் நீங்க வேண்டில் மலர் கொண்டு இத்தலத்தை வழிபடச் செல்லு தலே நலந் தருவதாகும் என்பதையும், இத்தலத்தைத் தலை யினால் தினமும் வணங்குபவர் தினமும் உயர்ந்தோங்கும் நன்மையைப் பெறுவர் என்பதையும், இவ்வாறு வணங்கு பவரே தவமுடையவர்கள் என்பதையும், நம் கருமம் இத் தலத்து இறைவரைக் கைதொழுதலே என்பதையும், இப் பதிகத்தைப் பாடுவார்க்குப் பாவம் இல்லை என்பதையும் குறிப்பிட்டுப் பாடியுள்ளார்.

இறுதிப் பாட்டால் சீர்காழி நீர்வள முடைய பதி யாதலின், இளையவரால் மீன்கள் கரைகளில் துள்ளிக் கொண்டிருக்கும் என்பதும், திருஞானசம்பந்தர் நாட்டில் ஓங்கிய சீருடையர் என்பதும் முதலானவை தெரிய வரு கின்றன.

அருந்தொடர்கள்:

"ஞானமா மலர்கொடு நணுகுதல் நன்மையே"
"தலையினால் வணங்குவார் தவமுடை யார்களே."

## ஏழாம் திருமுறை பதிகம் 84

### பண்—புறநீர்மை

1. தொண்டரடித் தொழலும், சோதிஇளம் பிறையும்
சூதன மென்முலையாள் பாகமும்ஆகி வரும்
புண்டரிகப் பரிசாம் மேனியும்வா னவர்கள்
பூசலிடக் கடல்நஞ் சுண்டகருத் தமரும்
கொண்ட எனத்திகழும் கண்டமும்எண் தோளும்
கோல நறுஞ்சடைமேல் வண்ணமும்கண் குளிரக்
கண்டு தொழப்பெறுவ தென்று கொலோ அடியேன்
கார்வயல் சூழ்கானப் பேரூறைகா ளையையே

(அ. சொ.) சூது—சொக்கட்டான் காய், இது மாதர் முலைக்கு உவமைப் பொருள், அன—போன்ற, புண்டரிகம்

*தாமரை, பரிசு-தன்மை, இறைவர் திருமேனி செம்மை நிற மாதலின், செந்தாமரை ஈண்டு அத்திருமேனிக்கு உவமை யாயிற்று, வானவர்கள் - தேவர்கள், பூசல் - ஆரவாரம். கொண்டல் - மேகம், கோலம் - அழகிய. கார் - கார்நெல் வளரும்.*

2. நாறுடை மாடெனவே நன்மைதரும் பரனை
நற்பதம் என்றுணர்வார் சொற்பதமார் சிவனைத்
தேனிடை இன்னமுதை மற்றதனில் தெளிவைத்
தேவர்கள் நாயகனைப் பூவுயர்சென் னியனை
வானிடை மாநடன்என் றெய்வதென் றுகொலோ
மாருத மும்மனலும் மண்டலமும் ஆய
கானிடை மாநடன்என் றெய்துரிதென் றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறைகா ளையையே

*(அ. சொ.) மாடு-பொன், மா-பெரிய, மதி-சந்திரனை, மாசு-குற்றம், மாருதம்-காற்று.*

*இறைவர் சுந்தரர் கனவில் வந்து கூறிச் சென்ற பின் "இறைவரை எப்பொழுது கண்டு தொழுவேன்" என்று அவர் கருதிப் பாடலைப் பாடியுள்ளார். சுந்தரர் இறைவரை மலர் கொண்டு வழிபட்டு அல்லல் தீரவே விரும்பி இருந் தார். இத்தலத்தில் இவருக்குத் திருத்தில்லை நடனக்காட்சி காணவேண்டும் என்னும் விருப்பமும் ஏற்படுகிறது. இறைவர் மூவர் உருவமும் தம் உருவராகக் கொண்டு மூல முதற் கருவாகவும் உள்ளார். இறைவர் இறத்தற்குக் காரணமான நஞ்சை யுண்டும் இறவாதிருந்தார் என்னும் கருத்தைக் கூறி இறைவரது முழுமுதல் தன்மை ஈண்டுக் குறிப்பிடப் பட்டிருப்பதை யுணரவும்.*

*சுந்தரர் பொருட்டு இறைவர் தூது சென்றதும், இறைவர் இவரைத் தோழராகக் கொண்டதும் இப்பதிகத் தில் குறிப்பிடப்பட்டுள்ளன. "தூதனை என்தனை ஆள் தோழனை" என்னும் தொடரைக் காண்க. இதன் மூலம்*

சுந்தரர் வாழ்க்கை வரலாற்றுக் குரிய அகச் சான்றையும் காண்க. திருஞானசம்பந்தரைப் போன்று பதிகம் பாடும் பத்தர் பெறும் பேற்றைச் சுந்தரர் கூறும் வழக்கம் உண்டு. அந்த முறையில் இப்பதிகத்தைப் பாடுவார் பத்தராய் நல்ல குணத்தராய் எத்திக்கும் நிறைந்த புகழுடையராய் மண்டலத் தலைவர்களாய் வாழ்வது உறுதி என்று கூறுகிறார் சுந்தரர். இப்பதிகம் இறைவர் தோற்றங்களைப் பலவாக எடுத்து இயம்புகிறது. இறைவர் தன்மைகளும் எடுத்துப் பேசப் படுகின்றன.

அருந்தொடர்கள்:

"மூவர் உருத்தனதாம் மூலமுதல்," "மெய்யே பற்றும் அவர்க்கு அமுது," "தொண்டர் தமக்கு எளியசோதி," "பத்தர் மனத்து இறையும் பற்று விடாதவனை," "ஒண்சீர் உறை தண் தமிழ்."

## 11. திருப்பூவணம்

இது பாண்டிய நாட்டுப் பாடல் பெற்ற தலங்களுள் பதினோராவது ஆகும். இதனைப் புஷ்பவனம் என்றும், காசிக்கு நிகரான தலம் என்றும் கூறுவர். இத் தலத்தில் பொன்னனையாள் என்னும் பரதநாட்டியம் செய்யும் மாது, மிகுந்த பக்தியுடையவளாய்த் திகழ்ந்தாள். அவள் சிவபெருமான் அருளால் சோமாஸ்கந்த மூர்த்தம் செய்து அதன் அழகைக் கண்டு கன்னத்தைக்கிள்ளி முத்தம் இட்டுக்கொண்டனள் என்ற குறிப்பை இத்தலத்துச் சோமாஸ்கந்தர் வடிவத்தின் கன்னத்தில் அமைந்துள்ள நகக் குறியால் உணரலாம். இதனால் இத்தலத்து இறைவர் அழகியபிரான் என்றும் கூறப்படுகின்றனர். இத்தலத்தை அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய மூவரும் பாடியுள்ளனர். அப்பர் பாடிய பதிகம் ஒன்றும், சம்பந்தர் பாடிய பதிகம் இரண்டும், சுந்தரர் பாடிய பதிகம் ஒன்றும் ஆக நான்கு

தேவாரப் பதிகங்கள் உண்டு. திருக்கருவூர்த் தேவர் பாடிய திருவிசைப்பா ஒன்றும் உண்டு. ஆனிமாதம் பிரம் மோற்சவம் நடைபெறும்.

இத்தலத்து இறைவர் பூவணநாதர். தேவியார் மின் னம்மை, விருட்சம் பலா. தீர்த்தம் வைகை. இது கோவி லுக்கு எதிரே ஓடுகிறது.

இத்தலம் மதுரைக்குக் கிழக்கே 11 கல் தொலைவில் உள்ளது. திருப்பூவண நிலையத்துக்குக் கிழக்கே அரை மைல் தொலைவில் உள்ளது.

## முதல் திருமுறை பதிகம் 64

### பண்-தக்கேசி

1. அறையார் புனலும் மாமலரும் ஆடரவார் சடைமேல்
குறையார் மதியம் சூடி மாதோர் கூறுடை யானிடமாம்(கும்
முறையார் முடிசேர தென்னர்சேரர் சோழர்கள்தாம் வணங்
திறையார் ஒளிசேர் செம்மை ஓங்குந்தென் திருப்பூவணமே

(அ. சொ.) அறை-ஓசை, ஆர்–பொருந்திய, புனலும்-நீரும், மா-சிறந்து, ஆம்-ஆகும், அரவு+ஆர், அரவு-பாம்பு-குறையார் மதியம் - பிறைச் சந்திரன், மாது - உமாதேவி, கூறு-பாகம், தென்னர்-பாண்டியர், திறையார்-கப்பங்கட்டும் அரசருடைய, ஒளி-புகழ்கள்.

2. திண்ணார் புரிசை மாடம்ஓங்கும் இதன் திரும்பூவணத்துப்
பெண்ணார் மேனி எம்மிறையைப் பேரியல் இன்தமிழால்
நண்ணார் உட்கக் காழிமல்கு ஞான சம்பந்தன் சொன்ன
பண்ணார் பாடல்பத்தும் வல்லார் பயில்வது வானிடையே.

(அ. சொ.) புரிசை-மதில், மாடம்-மாளிகை, நண்ணார்-பகைவர், (புறச்சமயத்தவர்) உட்க-நடுங்க, மல்கு-பொருந் திய, பயில்வது-வாழ்வது, வானிடை–தேவலோகத்தில்.

திருப்பூவணம் முடியுடை வேந்தராலும் வணங்கும் சிறப்புடையது என்பதை முதற்பாடல் அறிவித்து நிற்

கிறது. மேலும், இது செம்மை மிகும் பதியும் ஆகும். இப்பதி அழகும் செல்வமும் உடையது. பெரியோர்கள் வாழும் பதியுமாகும். மேலும், நெல்லும் கரும்பாலைகளும் நிறைந்த பதி. வைகை நீர் பரந்து பாயும் வளமுடையது. வைகை மணியையும் பொன்னையும் கொழிக்கும்பதியாகும். உலகத்தவர் பலர் கூடிப் புகழும் தன்மையது. தேரோடும் திருவீதி யுடையது. மாடம் ஓங்கும் பதியும் ஆகும். குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த பதி. முன்றில்களில் தென்றல் உலவும் பதி. சதிபதிகள் தம் முள் ஒத்துப் புணர்ச்சி இன்பம் துய்த்து வாழ்வர். பாடல்களை இசை தவறாது இசைத்துக் கொண்டிருப்பர். செம்மையான தாமரை தேனைச் சிந்தும். இங்குள்ள மாளிகைகள் மலைபோல் வெற்றிக்கு உறைவிடமாய்க் காணப்படும். மதில்கள் மாளிகைகளின் உயர்ச்சியைப் பாராட்டி அவற்றிற்குப் பரிசுகளும் தருமாம். மதில்களும் வன்மை மிக்கு இருக்கும். இவையே இப்பதிகம் நமக்கு அறிவிப்பனவாகும். ஈற்றுப் பாடலால் இப்பதிகத்தைப் பாடுபவர் வானுலகில் வாழ்வர் என்பதை அறிகிறோம்.

## மூன்றும் திருமுறை பதிகம் 19

### பண்-காந்தாரப் பஞ்சமம்

1. மாதமர் மேனிய னாகி வண்டொடு
போதமர் பொழிலணி பூவ ணத்துறை
வேதனை விரவலா அரணம் மூன்றெய்த
நாதனை அடிதொழ நன்மை ஆகுமே

(அ. சொ.) மேனியன்-உடம்பினை யுடையவன், போது-மலர்-சோலை, உறை-வாழும், விரவலர்-பகைவர், அரணம்-கோட்டை, செய்த-அழித்த.

2. புண்ணியா தொழுதெழு பூவ ணத்துறை
அண்ணலை அடிதொழு தந்தண் காழியுள்

**நண்ணிய அருமறை ஞான சம்பந்தன்**
**பண்ணிய தமிழ்சொலப் பறையும் பாவமே.**

*(அ. சொ.) உறை—வாழும், அண்ணல்—பெருமையில்) சிறந்த சிவபெருமான், அம்—அழகு, நண்ணிய—பொருந்திய, பறையும்—நீங்கும்.*

இப்பதிகம் திருப்பூவணத்து இறைவர் திருவடிகளைத் தொழ நன்மை உண்டாகும் என்பதை அறிவுறுத்துகிறது. இதிலும், திருப்பூவணத்து இயற்கை அழகு கூறப்படுகிறது. இங்குள்ள சோலைகளில் வண்டுகள் மலர்களில் ஒலித்துக் கொண்டிருக்கும் என்பது பேசப்படுகிறது. திருப்பூவணம், 'துயர் நீங்கவேண்டும். நோயும் வினையும் ஒழிய வேண்டும், என்னும் எண்ண முடையுவர்களால் வணங்கப்படுவதை உணரலாம். இதனால் இத்தலத்தைத் தொழுபவர் நோயும் துயரும் தீரும் என்பது புலனாகின்றது. இத்தலத்துச் சோலையில் குருந்தம், மாதவி, கொங்கம், மல்லிகை, புன்னை, முதலிய மலர்ச் செடிகள் மிகுதியாகும்.

திருஞானசம்பந்தர் இறைவனை மலர்மாலை புனைந்து போற்றுவதையே இன்பம் என்கின்றனர். நம் கடமையும் இதுவாகும் என்று அறிவுறுத்துகின்றனர். திருப்பூவணம் புண்ணியர்களால் தொழப்படுவது என்பது திருஞானசம் பந்தர் கருத்து. இப்பதிகம் பாடப் பாவம் ஒழியும் என்ப தையும் உணர்க. இப்பதிகத்தில் "அடிதொழ நன்மை யாகும்." "அடிதொழப் பிழை இல்லை," "கழல் தொழ அல்லல் இல்லை." "அடியவர்க்கு இல்லை பாவம்" "மலர் புனைந்து ஏத்தல் இன்பம்," "அடிதொழுதேத்தல் இன்பம்" என்பன என்றும் மறவாது நம் மனத்தில் கொள்ள வேண்டிய தொடர்களாம்.

## ஆரும் திருமுறை பதிகம் 13

### திருத்தாண்டகம்

1. வடியேறு திரிசூலம் தோன்றும் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியம் தோன்றும் தோன்றும்
கடியேறுகமழ் கொன்றைக் கண்ணி தோன்றும்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழும் திருமுடியும் இலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்துஎம் புனித னூர்க்கே

*(அ. சொ.) வடி—கூர்மை, ஏறு—ஏறிய, கடி—வாசனை கண்ணி—மாலை, குழை—ஆண்கள் காதணி, தோடு—பெண்கள் காதணி, இறைவர் அம்மை அப்பர் வடிவுடன் திகழ்தலால் இவ்வாறு கூறினர். இடிஏறுகளிற்றுரிவை—இடிபோல முழங்கும் யானையின் தோல், எழில்—அழகு, இலங்கி—விளங்கி' திரு—அழகிய, பொடி—விபூதி, பொலிந்து—விளங்கி, பொழில்—சோலை, புனிதன்—தூய்மையான இறைவன்.*

2. ஆரொருவர் உள்குவார் உள்ளத் துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்
வாருருவப் பூண்முலைநல்மங்கை தன்னை
மகிழ்ந்தொருபால் வைத்துகந்த வடிவம் தோன்றும்
நீருருவக் கடலிலங்கை அரக்கர் கோனை
நெறுநெறென அடர்த்திட்ட நிலையும் தோன்றும்
போருருவக் கூற்றுதைத்த பொற்புத் தோன்றும்
பொழில் திகழும் பூவனத்துஎம் புனிதனூர்க்கே

*(அ. சொ.) உள்குவார்—நினைப்பவர், வார்—கச்சு, உகந்த—மகிழ்ந்த. அடர்த்திட்ட—அழித்த, கூற்று—இயமனது தூதன், பொற்பு—அழகு.*

*இப் பதிகத்தில் முருகப்பெருமான் இணைத்துப் பேசப்பட்டிருக்கின்றார். மேலும் இதில் "மணியார்';*

வைகைத் திருக்கோட்டில் நின்றதோர் திறமும் தோன்றும்" என்ற குறிப்பும் உண்டு. இது வந்தி என்னும் வாணிச்சியின் பொருட்டு வைகை நீர் வெள்ளத்தைத் தடுக்க வந்த இறைவர் கூலிஆளாக நின்ற திருக்கோலக் குறிப்பை அறிவிப்பதாகும். சண்டீச நாயனார்க்கு முடிமாலை அணிந்ததையும் இத்தாண்டகப் பதிகம் அறிவிக்கின்றது. இறைவர் யார் யார் எவ்விதத் தோற்றத்தோடு நினைக்கின்றனரோ அவர் அவர்கட்கு அவ்விதத் தோற்றத்தோடு சென்று அருள்புரியும் நிலையும் இதில் அழகுறப் பாடப்பட்டுள்ளது.

## ஏழாம் திருமுறை பதிகம் 11

பண்—இந்தளம்

1. திருவுடை யார்திரு மாலய னும்
உருவுடை யார்உமை யாளையோர் பாகம்
பரிவுடை யார்அடை வார்வினை தீர்க்கும்
புரிவுடை யார்உறை பூவணம் ஈதோ

(அ. சொ.) திரு—அழகு, அயன்—பிரமன், பரிவு—அன்பாக, புரிவு—விருப்பம்.

2. சீரின் மிகப்பொலி யும்திருப் பூவணம்
ஆர விருப்பிட மாஉறை வானை
ஊரன் உரைத்தசொல் மாலைகள் பத்திவை
பாரி லுரைப்பவர் பாவம் அறுப்பரே

(அ. சொ.) பொலியும்—விளங்கும், ஆர்—பொருந்த, ஊரன்—திருநாவலூரனாகிய சுந்தரர், பாரில்—பூமியில்.

திருப்பூவணநாதர் தம்மை எண்ணியும் இருந்தும், கிடந்தும் நடந்தும், அண்ணலே என்று கூறியும் அடைந்தவர் எவராயினும் அவர்கள் வினையைப் போக்குவர். இத்தலத்து இறைவி திருப்பெயர் மின்னனையாள் எனப் பதிகம் கூறுவதைக்காணலாம். இறைவர் தம்மை மனம் உருக நினைப்

பவர் மனத்தில் உறைபவர் என்பதும் கூறப்பட்டுள்ளது. திருப்பூவணம் சீருடையது என்பதும் இதனுல் அறியலாம். இப்பதிகத்தைப் பாடுபவர் பாவம் அறுப்பர் என்றும் அறிக.

திருவிசைப்பா

திருவருள் புரிந்தாள்ஈண்டு கொண்டிங்கன்
சிறியனுக் கினியது காட்டிப்
பெரிதருள் புரிந்தானந்த மேதருநின்
பெருமையில் பெரியதொன் றுளதே
மருதர சிருங்கோங்கின் மரஞ்சாடி
வரைவளம் கவர்ந்திழி வையைப்
பொருதிரை மருங்கோங்கா வணவீதிப்
பூவணம் கோயில் கொண்டாயே

(அ. சொ.) ஆளாண்டு—ஆளாக ஆட்கொண்டு, உளதோ—இருக்கிறதா? மருது, அரசு, கோங்கு—இவை மரப் பெயர்கள். சாடி—முறித்து, வரைவளம்—மலைபடு பொருள் களின் வளங்களை, இழி—பாயும், பொரு—கரையை மோதும், திரை—அலை, மருங்கு—பக்கத்தே, ஆவணம்—கடை.

## 12. திருச்சுழியில்

இது பாண்டிய நாட்டுப் பாடல்பெற்ற தலங்களுள் பன்னிரண்டாவது. இதற்குச் சுந்தரர் பாடிய பதிகம் ஒன்றே உளது. சாதாநந்த முனிவர் பூசித்துப் பேறுபெற்ற தலம். பார்வதி தேவியார் தம்மை இறைவர் மணக்க வேண்டிப் பூசித்த தலமும் ஆகும். கோவில் பெரிதாக உள்ளது. நடராஜர் உருவம் சிலையில் அமைந்ததைக் கண்டுகளிக்கலாம். இத்தலத்து இறைவர் திருமேனி நாதர் என்பதை இத்தலப் பதிகத்தும் குறிப்பிட்டிருப்பதால் காணலாம். இறைவர் திருமேனி நாதேஸ்வரர் என்றும், தேவியார் துணைமாலை அம்மை வனமாலை அம்மை என்றும் கூறப்பெறுவர்.

இத்தலத்தை விருதுநகர் இரயில் நிலையத்திலிருந்து 19 மைல் கடந்தேனும், திருப்பூவனத்திற்குத் தெற்கே 15 மைல் கடந்தேனும் சென்ருல் அடையலாம்.

## ஏழாம் திருமுறை பதிகம் 82

பண்–நட்டபாடை

1. ஊனுய் உயிர்புகலாய் அகல்இடமாய் முகில்பொழியும்
வானுய் வரும்மதியாய் விதிவருவான் இடம்பொழிலின்
தேனு தரித்திசைவண் டினம்மிழற்றும் திருச்சுழியல்
நானு விதம்நினைவார் தமைநலியார் நமன்தமரே

(அ. சொ.) ஊன்–உடல், புகல்–அடைக்கலம், முகில்–மேகம், பொழிலின்–சோலையின், ஆதரித்து–விரும்பி, மிழற்றும்–ஒலிக்கும், நலியார்–துன்புறுத்தார், நமன்தமர்–இயமதூதர்.

2. கவ்வைக் கடல்கதறிக் கொணர்முத்தம் கரைக்கேற்றக்
கொவ்வைத் துவர்வாயார் குடைந்தாடும் திருச்சுழியல்
தெய்வத் தினைவழிபாடு செய்தெழுவார் அடிதொழுவார்
அவ்வத் திசைக்கரசா குவாஅலரான் பிரியாளே

(அ. சொ.) கவ்வை–ஓசை, கொவ்வை–கோவைக்கனி, துவர்–பவளநிறமான, குடைந்து–மூழ்கி, ஆடும்–குளிக்கும், அலராள்–இலக்குமி.

இப்பதிகத்தில் சுந்தரர் திருச்சுழியில் நிலவளத்தை நன்கு புகழ்கின்ருர். இங்குள்ள சோலைகளில் உள்ள தேனை விரும்பி வண்டுகள் இசை மிழற்றுகின்றன. இத் தலம் கடற்கரையைச் சார்ந்தது. இதன் அருகில் உள்ள கடல் முத்தைக் கரையில் சேர்க்கின்றன என்று கூறுவதால் அறியலாம். இத்தலத்தில் உள்ள மாதர்களின் இதழ் பவழம் போன்று சிவந்து இருக்கும் என்று குறிப்பிட்டதனுல், அவர்களின் ஏனைய உறுப்புக்களின் இயல்பு நன்கு அமைந்திருக்கும் என்று கூறவேண்டுவ தில்லை. இம்

மாதர்கள் தினமும் குளித்து மூழ்கித் தம்மேனியைத் தூய்மைப் படுத்திக் கொள்வர்.

திருச்சுழியலை நினைக்கும்படி பலவிதமாகச் சுந்தரர் இப்பதிகத்தால் நினைவூட்டுகிறார். அப்படி நினைப்பதால் வரக்கூடிய பயன்களையும் கூறிமுடிக்கிறார். இறைவரைப் பலவிதமாகநினைப்பவரை இயமன் தூதுவர் துன்புறுத்தார். திருச்சுழியலில் தொண்டு புரிபவர் நல்லர்: அவர்கள் துன்பம் அடையாதவர் ஆவர். இத்தலத்துத் தெய்வத்தைத் தொழுது வழிபாடு செய்பவர் திருவடிகளைத் தொழுபவர். அவர் அவர்கள் இருக்கும் திசைகட்குத் தலைவர் ஆவர். அவர்களைத் திருமகள் விட்டுப் பிரியாள், நற்கதியுள் செல்வர். ஏத்துவது கடமையும் ஆகும். மும்மலம் காரணமான பாசப் பிறப்பு ஒழிய வேண்டின், மலராலும், தூபத்தாலும் போற்றி, தியானித்து வருக. அதனால் புகழும் தவமும் ஆகும், அறிவுத் திறமும் ஏற்படும். திருவடிகளைநினைப்பவர் தீவினை தீர்தல் எளிது என்பன இவர் இப்பதிகத்தின் மூலம் அறிவிக்கும் அறவுரைகளாகும்.

சமணர்களைப் பற்றிக் பலவாகக் கூறாமல் குண்டாடிய சமண் ஆதர்கள்' என்று கூறிமுடித்தமையால் ஆதர்கள் நகைப்புக்கு இடமானவர் என்பது புலனாகிறது. இப்பதிகத்தைப் பாடத் துயரே இல்லாமற் போகும்.

அருந்தொடர்கள்; "நானாவிதம் நினைவார் தமை நலியார் நமன் தமரே", "தொண்டே செய வல்லார் அவர் நல்லார் துயர் இலர்", "மெய்வைத்து அடி நினைவார் வினை தீர்தல் எளிது."

## 13 திருக்குற்றாலம்

இது பாண்டிய நாட்டுப் பாடல்பெற்ற தலங்களுள் பதின்மூன்றாவதாகும். இதனைத் திருஞானசம்பந்தரும் மாணிக்கவாசகரும் பாடியுள்ளார். திருஞானசம்பந்தர்

பாடினதாக இரண்டு பதிகங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று திருக்குற்றாலம் பற்றியும், மற்றொன்று குறும்பலா என்பது பற்றியும் ஆகும். குற்றாலம் என்பது ஒருவகை ஆலமரம். இதுவே இத்தலத்து விருட்சம். குறும்பலா என்பது கோவில் பெயர். இதுவும் குறும்பலா என்ற தலவிருட்சம் காரணமாக ஏற்பட்ட பெயர். ஊர்ச் சிறப்பையும், கோவில் சிறப்பையும் தனித்தனியாகப் பாடிக் காட்டவே இரண்டு பதிகங்களைப் பாடினார் போலும்!

இத்தலம் நடராஜப்பெருமானுக் குரிய ஐந்து சபை களில் ஒன்றான சித்திர சபை இருக்கும் இடமாகும்.

இத்தலம் ஒரு காலத்தில் விஷ்ணு தலமாக இருந்தது. இவரைத் தரிசிக்க அகஸ்தியர் இங்கு வந்தார். அகஸ்தி யர் திருநீறுபூசிய திருமேனியராய் இருக்கக்கண்ட திருமால் கோவில் பட்டாசாரிகள் முனிவரை உள்ளே செல்லாத வாறு தடுத்தனர். பிறகு அகஸ்தியர் வைணவ பாகவத வேடம் பூண்டுவர, அவர்கள் அவரை வரவேற்றுக் கோவி லுக்குள் அழைத்துச் சென்றனர். அகஸ்தியருக்கு உள் இருப்பவர் திருமால் என்பது தெரியும். வைணவ பட்டா சாரியர்களை அடக்க, மூலஸ்தானத்தில் திருமால் திருவுரு வின் உச்சியில் உள்ளங்கையை வைத்து அழுத்திக் "குறுகு குறுகு" என்று கூறத் திருமால் குறுகிவிட அங்குச் சிவலிங்கம் தோற்றம் அளித்தது. அதனைக் கண்டுதரிசித்து வெளியே வந்தனர். திருமால், சிவலிங்கமாகி இருப்பதைக் கண்டு வெட்கித் தாம் செய்த குறும்புக்காக வைணவர்கள் வருந்தினார்கள். அன்று முதல் இத்தலம் சிவதலமாயிற்று.

இத்தலத்திற்குத் திரிகூடம் என்ற பெயரும் உண்டு. குற்றாலமலை மூன்று சிகரங்களைச் சிறப்பாகப் பெற்ற மையே இதற்குக் காரணம். இங்கு மூன்று அருவிகள் சிறப்பாகப் பேசப்படுகின்றன. ஒன்று தேனருவி என்பது. இது 100 அடி உயரத்திலிருந்து விழுகிறது. இரண்டாவது

அருவி செண்பகதேவி என்ற இடத்திலிருந்து 30 அடி உயரத்திலிருந்து விழுகிறது. இங்கு ஒரு காளி கோவிலும் உண்டு. மூன்ருவது குற்ருல அருவி என்பது. இது 200 அடி உயரத்திலிருந்து விழுகிறது. பொங்குமா கடல் என்ற ஒரு துறையும் ஈண்டு உண்டு. இந்த இடங்களுக்குச் செல்வதாஞல் மிகவும் விழிப்புடன் செல்லவேண்டும். சந்நிதிக்குப் பின்புறம் ஒழுகுவது முதல் அருவி. இதற்குமேல் இருப்பதே பொங்குமா கடல். அங்கிருந்து இரண்டு கல் தொலைவில் குறுகிய செங்குத்தான பாதையில் இருப்பதே செண்பக அருவி. இப்பாதை வழியே மாவும், பலாவும் பாக்கும், ஏலமும், கிரும்பும் வளர்ந்து கண்ணுக்கு இயற்கை இன்பத்தைக் கொடுக்கும். இவ்வருவிக்கு மேலே இரண்டு மைல் சென்ருல் தேனருவியைக் காணலாம்.

குற்ருல நாதர் தலத்துக்குத் தென் மேற்கில் 1½ கல் தொலைவில் ஐந்தருவிகள் உள்ளன. இங்கு நல்ல முறையில் குளித்து இன்புறலாம். இத்தலம் சுகவாசஸ்தலங்களில் ஒன்று. நீர் வீழ்ச்சியின் அழகை முற்றிலும் காணவேண்டுமாஞல், ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி மாதங்களில்தான் காணமுடியும். இந்தக் காலங்களில் பலர் இங்கு சென்று தங்கி இன்பம் அடைவர். இத்தலம் புஷ்பகந்தா, கவுன்சனர் முதலியோர்.பூசித்த தலம் ஆகும்.

இத்தலத்துக் கோயில் சங்கு வடிவாக அமைந்துள்ளது. வடக்குப் பார்த்த சந்நிதி. ஒரு பெரிய கோபுரம் கட்டத் தொடங்கி முடிவுருத நிலையில் இருக்கிறது. அம்மன் சந்நிதியும், இறைவன் சந்நிதியும் ஒன்றன் பக்கத்தில் ஒன்ருக அமைந்துள்ளன. இங்கு கண்டு தரிசிக்கக் கூடியவை; செண்பகதேவி, சித்திரசபை, குற்ருலநங்கை, கூத்தர் கோவில், மாடசாமி, சம்பந்தர் சிலை உருவங்கள்.

இறைவர் குறும்பலா நாதர், இறைவியார் குழல்வாய் மொழியம்மை. தீர்த்தம் சித்திரநதி. இத்தலத்து இறைவர்

முன்னர் திருமால் உருவில் இருந்தமையின் இதுபோதும் இருவருக்குத் துளசி சாத்தலும் உண்டு.

இத்தலத்தைத் தென்காசி ரயில் நிலையத்திலிருந்து 3¼ மைல்மேற்கே சென்று அடையலாம். பஸ் வசதியும், வண்டி வசதியும் உண்டு.

## முதல் திருமுறை பதிகம் 99

பண்–குறிஞ்சி

**1.** **வம்பா குன்றம் நீடுயர்சாரல் வளர்வேங்கை**
**கொம்பார் சோலைக் கோலவண்டி யாழ்செய் குற்றாலம்**
**அம்பால் நெய்யோ டாட்டல் அமர்ந்தான் அலர் கொன்றை**
**நம்பான் மேய நன்னகர் போலும் நமரங்காள்**

(அ. சொ.) வம்பு-மணம், ஆர்-பொருந்திய, வேங்கை-வேங்கைமரம், கொம்பு-கிளைகள், கோலம்-அழகிய, யாழ்-வீணைபோன்ற ஓசை, அம்-அழகிய, ஆடல்-முழுக்கு, நம்பான்-நம் சிவபெருமான்.

**2.** **மாடவீதி வருபுனல் காழி யார்மன்னன்**
**கோடல் ஈன்று கொழுமுனை கூம்பும் குற்றாலம்**
**நாட வல்ல நற்றமிழ் ஞான சம்பந்தன்**
**பாடல் பத்தும் பாடநம் பாவம் பறையுமே**

(அ. சொ.) மாடம் - பெரிய பெரிய கட்டடங்கள் புனல்-நீர் வளம், காழி-சீர்காழி, ஆர்-பொருந்திய, கோடல்-காந்தள் மலர், முனை அரும்பு, கூம்பும்-குவியும், பறையும் நீங்கும்.

இக் குற்றாலப் பதிகம் இயற்கைக் காட்சியினை இனிதின் எடுத்து இயம்புவதாகும். மேலும், இது உலகமக்களை நோக்கி இத்தலத்தைப் பற்றி அறிவிக்கும் முறையில் அமைந்ததும் ஆகும்.

முன்னர் இயற்கைக் காட்சி எவ்வாறு எடுத்து இயம்பப் பெற்றுள்ளது என்பதைக் காண்போமாக. குற்றால மலையில் ஏலம், கிரும்பு முதலான மணமுடைய மரங்கள் வளர்ந்திருத்தலின் நறும் மணமுடையதாகும். சாரல்கள் நீண்டு உயர்ந்து காணப்படும். வேங்கை மரங்கள் நாளும் நாளும் வளர்ந்து கிளைகள் பெருத்துக் காணப்படும். சோலைகளில் வண்டுகள் யாழ்போல இனிது இசைத்துக் கொண்டிருக்கும். செண்பகம் வேங்கை மரத்தில் படிந்து இருக்கும். முல்லை மலர்கள் அரும்புகளை ஈனும். வாழைக் கனிகளும் பலாக்கனிகளும் மாங்கனிகளும் மிகுந்து தொங்கிக் கொண்டிருக்கும். பெண் குரங்குகள் தம் மடியில் குட்டிகளைத் தழுவிக்கொண்டு, வாழைப் பழங்களைத் தின்று கொண்டிருக்கும். மலைப் பக்கங்களில் தினைப்புனங்கள் நிறைந்து, அவற்றில் தினைப் பயிர் நன்கு முற்றி இருக்கும். நிலையில் கிளிகள் வந்து உண்ணும்போது, தினைப்புனம் காக்கும் இளம் பெண்கள், மலையில் கிடைக்கும் நாகமணிகளை வாரிக்கொண்டு வந்து அவற்றைத் தினைக்கதிர் உண்ண வந்த கிள்ளைகள் மீது எறிந்து ஓட்டிக்கொண்டிருப்பர். மயில்கள் ஆணும் பெண்ணுமாக ஆடிக்கொண்டிருக்கும். நீல நிற நெய்தல் மலர்கள் சுனைகளில் மலர்ந்து காணப்படும். மலையினின்று வீழும் அருவிகள் மலர்களையும், பொன்னையும் சிறிது சிறிதாகச் சிந்திக்கொண்டிருக்கும் குராமலர், பாம்பின் பற்களைப்போல் அவ்வளவு கூர்மையான அரும்புகளை ஈன்று மணம் வீசிக்கொண்டிருக்கும். வண்டுகள் தம் தம் பெடை வண்டுகளுடன் கூடி, குருந்த மமரத்தில் ஏறிச் செவ்வழி என்னும் பண்ணினைப் பாடிக்கொண்டிருக்கும், காந்தள் மலர்கள், வளமான அரும்புகளை ஈன்று, கை குவித்துக் குற்றால நாதரை வணங்குவது போலக் குவித்துக் காணப்படும்.

*திருஞானசம்பந்தர் இப்பதிகப் பாடல்தோறும் இத் தலத்தை நன்னகர் என்று குறிப்பிடுவதால் இதன் பெருமை மேலும் புலனாகிறது. இங்குள்ள தொண்டர்கள் திருநீறு பூசிய திருமேனியராய்ச் செல்வர். இங்கு கொடிகள் கட்டப்பட்டுத் திருவிழாக்களும் சிறந்து விளங்கும்.*

*சமணர்கள் நின்றுகொண்டு உண்பவர் என்பதும், பௌத்தர்கள் அமர்ந்து உண்பவர் என்பதும் இப்பதிகத் தால் அறியும் குறிப்புக்கள். திருஞானசம்பந்தர் தம்மை "நற்றமிழ் வல்ல" என்று கூறிக்கொள்வதைக் காண்க. இப்பதிகப் பாடல்களைப் பாடப் பாவம் ஒழியும் என்பதை யும் உணர்க.*

## *இரண்டாம் திருமுறை பதிகம் 71*

*பண்-காந்தாரம்*

**திருந்த மதிசூடித் தெள்நீர் சடைக்கரந்து தேவி பாகம்**
**பொருந்திப் பொருந்தாத வேடத்தால் காடுறைதல் புரிந்த செல்வர்**
**இருந்த இடம்வினவில் ஏலம் கமழ்சோலை இனவண்டி யாழ்செய்**
**இருந்த மணநாறும் குன்றிடம் சூழ்தண்டசாரல் குறும்பலாவே**

*(அ. சொ.) மதி - சந்திரன், தெள்நீர் - கங்கையாறு, கரந்து-மறைத்து, உறைதல்-வாழ்தல், புரிந்த-விரும்பிய, குருந்தம்-குருந்தமர மலர், நாறும்-மணக்கும்.*

**கொம்பார் பூஞ்சோலைக் குறும்பலா மேவிய கொல்லேற் றண்ணல்**
**நம்பான் அடிபரவு நான்மறை யான்ஞான சம்பந்தன் சொன்ன**
**இன்பாய பாடலிவை பத்தும் வல்லார் விரும்பிக் கேட்பார்**
**தம்பால தீவினைகள் போயகலும் நல்வினைகள் தளரா அன்றே.**

*(அ. சொ.) கொம்பு-கிளைகள். ஆர்-பொருந்திய, கொல் லேற்றண்ணல்-கொல்லும் இயல்புடைய எருதை வாகன மாகக் கொண்ட இறைவராம், நம்பான்-சிவபெருமான், பரவும்-போற்றும், தம்பால்-தம்மிடம் அமைந்த.*

திருக்குறும்பலாத் தலத்தின் இயற்கை வளம் வெகு அழகாக இப்பதிகத்தில் சித்திரிக்கப்பட்டுள்ளது. இத்தலத்தில் ஏலம், மணம் வீசும் சோலைகளும் குருந்த மலர் மணம் வீசும் குன்றுகளும், குளிர்ந்த மலைச்சாரலும் உண்டு.

வண்டுகள் யாழ் போல ஒலித்துக்கொண்டிருக்கும். பெண் குரங்குகள் ஒரு கிளையிலிருந்து மறு கிளைக்குத் தாவிக்கொண்டு இருக்கும்; வேர்ப்பலாவைக் கிண்டி உண்டு கொண்டிருக்கும். ஆண் குரங்குகள் பலவிதப் பழங்களை உண்டு துள்ளிக்கொண்டிருக்கும் வெண்காந்தள் மலர்களின் மணம் வீசிக்கொண்டிருக்கும். பெண் வண்டுகள் மலர்களை மலர்த்தி அவற்றின் மகரந்தப் பொடிகளை உதிரும்படி செய்யும். நீல மலராகிய குவளை மலர்ந்து அதன்மீது வண்டுகள் ஒலிக்க மயில்கள் ஆடிக்கொண்டிருக்கும். இங்கு வாழை மரங்களும் மாமரங்களும் மிகுதி. இவற்றின் கனிகள் தேனைச் சிந்திக்கொண்டிருக்கும். மூங்கில்கள் அடர்ந்து காணப்படும். மலையினின்று பொசியும் நீர், பொன்னைக் கொழித்துக்கொண்டு கீழ்நோக்கிப் பாயும். வண்டு ஒலியைக் கேட்டுக் குயில்களும் அவ்விசையைப் பயிற்சி செய்யும். பன்றிகள் இங்கும் அங்கும் திரிந்து கொண்டிருக்கும். இங்குள்ள இசை அரங்குகளில் மத்தள ஓசை ஒலித்தவண்ணம் இருக்கும். அருவிகள் மணிகளைக் கொழித்து, வயிரங்களைத் தன்னகத்தே கொண்டு நீர்மிக்குக் காணப்படும். குங்கும மலரும், மல்லிகையும், சண்பகமும் இருகரைகளிலும் மலர்ந்திருக்கக் குரவமலர் நகை செய்வது போல் மலர்ந்து விளங்கக் குன்றுகள் சூழ்ந்திருக்கும். மூங்கிலின் உச்சியில் குரங்குகள் அமர்ந்து அதனை வளையுமாறு செய்து கூத்தாடிக் குதிக்க, அவற்றைக் கண்டு வேடுவர்கள் 'குய்' என விளித்துக் கையைக் கொட்டுவர்.

இவ்வாறு இயற்கை வளம் நிறைந்தது குறும்பலா என்று கூறியதோடு நில்லாமல், இங்குள்ள யானைகள்

வேங்கை மலர்களைத் தம் தலையில் தாங்கிக்கொண்டு சென்று குறும்பலா இறைவரை வணங்கும் என்று குறிப்பிட்டது போற்றற்குரியதாகும்.

இறுதிப் பாடலால் இப்பதிகத்தைப் பாடியவர்கட்கும் கேட்டவர்கட்கும் தீவினைகள் நீங்கும் என்பதும், நல்வினைகள் தளரமாட்டா என்பதும் அறியப்படுகின்றன. இறைவர் அம்மையார் முலையை உண்ணுதவராயினும், அவள் முலைப்பாகம் காதலித்த மூர்த்தி என்று இப் பதிகத்துக் கூறியதன் கருத்து உபசார வழக்குப் பற்றி என்க. உண்ணுமுலையாள் அல்லளோ தேவி?

## எட்டாம் திருமுறை

### திருவாசகம்

**உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்**
**கற்றாரை யான்வேண்டேன் கற்றனவும் இனிஅமையும்**
**குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தாஉன் குரைகழற்கே**
**கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே**

(அ. சொ.) குரை-ஒலிக்கும், கற்றா-கன்றையுடைய பசு, (கன்று+ஆ)

## 14. திருநெல்வேலி

இது பாண்டிய நாட்டுப் பாடல் பெற்ற தலங்களில் பதினான்காவது. இவ்வூரில் வேதசன்மர் என்ற பக்தர் ஒருவர் இருந்தார். அவர் சிவபெருமானுக்கு நிவேதனம் செய்ய நெல்லைக் கட்டி வைத்திருந்தார். அதுபோது இவ்வூரில் வெள்ளம் புரண்டது. அவ்வெள்ளத்தில் இந்நெல் அடித்துச்செல்லாதபடி இறைவர் வேலியிட்டுக் காத்தனர். இக் காரணம்பற்றி இத்தலம் நெல்வேலி எனப்பட்டது. இங்குள்ள இறைவர் மூங்கில் அடியில் தோன்றியவர். இதன் காரணமாக இத்தலம் வேணுவனம் என்றும் கூறப்படும்.

தாருகாவனம், பிரமவிருத்தபுரம் என்றும் இத்தலம் கூறப்படும். பிரம்மா, விஷ்ணு, அகஸ்தியர் இத்தலத்து இறைவரைப் பூசித்துப் பேறுபெற்றனர். இறைவரது பிட்சாடணத் திருவுருவம் இங்கு கண்டு களித்தற்குரியது. இதனை முதற் பிரகாரத்தின் மேற்குப் பக்கத்தில் காணலாம். இறைவர்க்குரிய ஐந்து சபைகளுள் ஒன்றான தாமிரசபை இங்குத்தான் உண்டு. இது பெரிய சிவாலயம். நடராஜர் திருவுருவமும் பெரியது.

இத்தலத்தில் நடைபெறும் பிரம்மோற்சவம் ஆனி மாதத்தில் ஆரம்பமாகும். 45 நாட்கள் நடைபெறும்; 9-ஆம் நாள் உற்சவத்தில் அம்பிகை கிருஷ்ண வேடம் கொண்டு காட்சி அளித்தல் பார்க்கத்தக்கது. நெல் கொண்டு காட்சி அளித்தல் பார்க்கத்தக்கது. நெல் வேலி கட்டின திருவிளையாடல் தை மாதம் நடைபெறும். திருக்கல்யாண மகோற்சவம் ஐப்பசிமாதம் நடக்கும். வசந்தோற்சவமும் இத்தலத்தில் பார்க்கத்தக்கதாகும். இத்தலத்தில் உள்ள கற்றூண்களுள் சிலவற்றைத் தட்டினால் இசை முழக்கம் வெளிவரும். நடுமண்டபத்தில் பாண்டியர்களின் உருவங்களைக் காணலாம். சுவாமி சந்நிதானமும், அம்மன் சந்நிதானமும் அடுத்து அடுத்து அமைந்துள்ளன. சுவாமிகோயிலில்மூன்று கோபுரங்களும், அம்மன் கோயிலுக்கு மூன்று கோபுரங்களும் இடையில் ஒரு கோபுரமும் உண்டு. அம்மன் கோயில் கோபுரம் உயர்வுடையது. ஆனால், இறைவர் கோயில் கோபுரம் அகற்சியுடையது. இத்தலத்தில் 1000 கால் மண்டபம் உண்டு, கோயிலுக்குள் பெரிய குளம் ஒன்று உண்டு. வசந்த மண்டபமும் இங்கு உளது. சுவாமி கோயிலில் உள்ள மண்டபத்தில் இரண்டு தூண்கள் உள்ளன. அவை 100 தூண்களாக வெட்டப்பட்டிருப்பதைக் கண்டு களிக்கவும். இங்கு சந்தன மரத்தாலாகிய நடராஜரைக் காணலாம். இவர்க்கு என்றும் சந்தனக் காப்பு உண்டு. இத்தலத்தின்மீது திருஞானசம்பந்தர் பாடிய பதிகம் ஒன்று உண்டு.

இத்தலத்து இறைவர் நெல்லையப்பர், வேணுவன நாதர், அனவரதநாதர், சாலிவாடீஸ்வரர் என்றும் இறைவி யார் காந்திமதியம்மையார் என்றும், பிள்ளையார் நல்ல பொல்லாப்பிள்ளையார் என்றும் பெயர் பெறுவர். இத்தலத் துத்தீர்த்தம் தாமிரவருணி, சிந்து பூந்துறை, பொற்றாமரை. இத்தலம் திருநெல்வேலி டவுன் ஸ்டேஷனிலிருந்து அரைக் கல் தொலைவில் உள்ளது. ஜங்ஷனிலிருந்தும் போகலா .

குறிப்பு: இத்தலத்திலிருந்து பஸ் மார்க்கமாகவோ ரயில் மார்க்கமாகவோ திருச்செந்தூர் என்னும் முருகப் பெருமானது திருத்தலத்தையும் அடைந்து தரிசிக்கலாம். குறுக்கு துறையில் சுப்பிரமணியர் கோயில் சிறப்புடை யது. ரமிரவருணியில் இன்பமாகக் குளித்து மூழ்கலாம். பலநாள்மூழ்கக் கொடு நோயும் நீங்கும்.

## மூன்றும் திருமுறை பதிகம் 92

பண்-சாதாரி

**மருந்தவ மந்திரம் மறுமை நன்னெறிஅவை மற்றும்எல்லாம்
அருந்துயர் கெடுமவர் நாமமே சிந்தைசெய் நல்நெஞ்சமே
பொருந்துதண் புறவினில் கொன்றைபொன் சொரிதரத் துன்று பைம்பூஞ்
செருந்திசெம் பொன்மலர் திருநெல்வேலி யுறைசெல்வர் தாமே**

அ. சொ.) மறுமை—மறுபிறப்பிற்குரிய, நெறி—வழி நாமம் திருப்பெயர், புறவு—காடு, பொன் – மகரந்தப் பொடிகளை. செருந்தி—ஒருவகை மலர்ச்செடி.

**பெருந்தண் மாமலர் மிசைஅயனவன் அனையவர் பேணுகல்வித்
திருந்துமா மறையவர் திருநெல்வேலியுறை செல்வர் தம்மைப்
பொருந்து நீர்த்தடம் மல்குபுகலியுள் ஞானசம்பந்தன் சொன்ன
அருந்தமிழ் மாலைகள்பாடி ஆடக்கெடும் அருவினையே**

அ. சொ.) தண்மலர்மிசை – குளிர்ந்த சிறந்த தாமரை மலரில், அயனவன் – பிரமன். அனையவர்—போன்ற

அந்தணர், பேணு—போற்றும், மறையவர்—வேதம் உணர்ந்த அந்தணர், தடம்—குளம், மல்கு—மிகும், புகலியுள்—சீர்காழி யுள், அருவினை—கொடுவினை.

இப்பதிகத்தில் முதல்பாடல் தம்மனத்திற்கு அறி வுறுத்தும் முறையில் அமைந்துள்ளது. இறைவர் திரு நாமங்கள் மருந்தாகவும், மந்திரமாகவும் மறுமைக்கு நல் வழி காட்டுவனவாகவும் துன்பங்களைக் கெடுப்பனவாகவும் உள்ளன. ஆதலின் அவன் திருப்பெயர்களையே கூறுக என்பதே நெஞ்சுக்குக் கூறும் அறவுரையாகும்.

திருநெல்வேலியின் இயற்கை வளம் இனிதிலே பேசப் படுகிறது. காடுகள் கொன்றை மலர்கள் மலர்ந்து, கரந்தப் பொடிகள் சிந்தக் காணப்படும், செருந்திச் செடிகள் பொன்போல மலர்ந்து காணப்படும். இத்தலத்து இறைவர் பெருஞ் செல்வர் என்பது இப்பதிகம் கூறும் குறிப்பாகும். இஃது உண்மையே. தென்றல் காற்று தாழை மலைகளில் படிந்து அதன் மணத்தையும் கொண்டு இங்கு வீசிக் கொண்டிருக்கும். சோலைகள் மரஞ் செடி அடர்ந்து காணப் படும். இங்குள்ள மாடமாளிகைகள் உயர்ந்து அவற்றின் மீது நாட்டப்பட்ட கொடிகள் சந்திர மண்டலம் அளவு பறந்து சந்திரனைத் தொட்டுக்கொண்டு இருக்கும். இதலம் அங்குள்ளவர்களால் மட்டும் புகழ்ந்து பேசப்படுதற்குரியது அன்று. திசைகள் எல்லாம் புகழ்ந்து பேசப்படும் பெருமை சான்றது. சோலைகளில் குரங்குகள் பாய, அப்படிப்பாய் வதனால் மலர்த்தேன் சிந்தும் வள முடையது. இத்தலத் தில் மாதந்தோறும் திருவிழா நடந்த வண்ணம் இருக்கும் என்பது "திங்கள் நாள் விழாமல்கும்" என்பதால் அயக் கிடக்கிறது. இங்கு சோலைகள் ஆடிக்கொண்டிருக்கும், சந்திரன் தவழ்ந்து கொண்டிருப்பான். இங்குள்ள அந்த ணர்கள் வேதம் நன்குணர்ந்து கல்வி கேள்விகளில் சிறந்து பிரமனுக்கு நிகராக விளங்குவர்.

இத்தலத்துப் பதிகத்தைப் பாடப் பாவம் ஒழியும்.